ஆஸ்திரேலியா
# எதிரொலி
ETHIROLI

உலக தமிழர்களுக்கு

SRI MURUGAN ®
SINCE 1969

ஸ்ரீ முருகன் டிரேடிங்
**SRI MURUGAN TRADING**
(Largest Indian Grocer Chain)

**Point Cook**
9 Murnong Street
Point Cook

**Carrum Downs**
17/700 Frankston Dandenong Rd
Carrum Downs

**Narre Warren**
108 A, Casey Central Shopping Centre
Narre Warren

தீபாவளி வாழ்த்துகள்
*Happy Deepavali*

தரமான பொருட்கள்
மலிவு விலையில்
Indian, Srilankan Grocery

Lowest Price
Premium Quality



மெல்பேர்ணிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

SATISFACTION 100% GUARANTEED

Logesh Pty Ltd

Home Improvement & Cleaning

**0449 722 392**

Email - Loges.pty.ltd@gmail.com

- Landscaping
- Decking
- Rubbish Removal
- House Cleaning
- Garden Maintenance
- Painting
- House Renovation
- Kitchen Cabinet
- Builders Cleaning
- Timber Flooring
- Carpet Cleaning



Get Your Free Quote Now !

# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 02 அதிர்வு 17 நவம்பர் 2018 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162

Christmas is COMING

Christmas SHIPPING SCHEDULE

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| OCT 06 | NOV 14 |
| OCT 13 | NOV 19 |
| OCT 20 | NOV 28 |
| OCT 27 | DEC 03 |
| NOV 10 | DEC 17 |
| NOV 17 | DEC 26 |

Only Available at Transco Offices

Transco CARGO

ASK US HOW TO GET A FREE BOTTLE OF WINE

CAMPBELLFIELD (03) 9357 7228 | DANDENONG (03) 9703 2255 | HOPPERS CROSSING (03) 97905588

1300 187 267 | TranscoCargo.com.au



# செக்கச் சிவந்த சிங்கள வானம்

Waverley Toyota - You'll LOVE us!

TOYOTA

Pre Owned + New Vehicles



Buy with Confidence

Proud to be Melbourne's longest serving automotive group

Finance Available!

- Self Employed & ABN Holders
- Student Visa's
- Overseas Licence
- Low Deposit
- New Employment
- New Arrivals

SPRINGVALE ROAD WAVERLEY ROAD NEW & USED

DL11333




All enquires contact Jason Wijeratne on (03) 8544 2288 or 0422 974 499

We speak your language

Oh what a feeling!

மெல்பேர்ணிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்








# நவுறு அகதிகள் விவகாரம்

# ஆறு வருட விரதத்தை முறித்தது ஆஸி.

• பிரணி

ஆஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரிப் படகு மூலம் வந்த பலர் நவுறு தீவில் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேல் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களது பிரச்சினைக்குத் தற்காலிக தீர்வொன்று கிடைத்துள்ளது.

அகதிகள் குறித்த தொடர் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு தீர்மானித்துள்ள ஆஸ்திரேலிய அரசு, நவுறுவிலுள்ள அகதிச் சிறுவர்கள்அனைவரும்மருத்துவசிகிச்சைக்காக ஆஸ்திரேலியாவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், எஞ்சியுள்ள 35 வரையான சிறுவர்களும் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் ஆஸ்திரேலியாவுக்கு கொண்டுவரப்படும் அதேநேரம் இந்தவருட இறுதிக்குள் நவுறு தீவிலுள்ள அனைத்து சிறுவர்களையும் அங்கிருந்து அகற்றுவதே ஆஸ்திரேலியாவின் திட்டம் எனவும் தெரிவித்திருக்கிறது.

இதன்படி, நவுறுவிலிருந்து மருத்துவ தேவைகளுக்காக ஆஸ்திரேலியாவுக்கு குடும்பத்துடன்கொண்டுவரப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட அகதிச் சிறுவர்கள் அடிலெய்ட் மாநிலத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்குள்ளவைத்தியசாலைகளில்அவர்களுக்கு மருத்துவ வசதிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் -

மருத்துவ சேவைகளுக்காக அகதிகள் ஆஸ்திரேலியாவுக்கு கொண்டுவரப்படுவதை முன்னர் எதிர்த்து வந்த ஆஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்பு திணைக்களம் தற்போது அதற்கு இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவுறுவிலிருந்து மருத்துவ சேவை பெறுவதற்காக ஆஸ்திரேலியா வருவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு இவ்வளவுகாலமும் அனுமதி கொடுக்காமல் -

இதற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வழக்குகளை எதிர்த்துப்போராடுவதற்காக பல லட்சம் டொலர்களை செலவு செய்த ஆஸ்திரேலியாவின் இத்திடீர் மன மாற்றத்துக்கு காரணம் என்னவென்ற கேள்வி எழலாம்.

ஆஸ்திரேலியாவின் கடல்கடந்த தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள அகதிகள் தொடர்பான பிரச்சினையால் உள்நாட்டில் மாத்திரமல்லாது வெளிநாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களினதும் தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து வரும் ஆளும் மொறிஸன் அரசுக்கு மேலும் தலைவலியாக அமைந்த விடயம் அகதிச் சிறுவர்கள் விவகாரம் ஆகும்

நவுறுவிலுள்ள அகதிச் சிறுவர்கள் பலர் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென நவுறுவில் உளவள மேம்பாட்டு பணியை வழங்கிவந்த Doctors without boarders அமைப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தநிலையில், அவர்கள் அங்கிருந்து 24 மணிநேர காலக்கெடு வழங்கப்பட்டு வெளியேற்றப்பட்டதையடுத்து இந்த விவகாரம் சூடு பிடித்தது.

நவுறு தீவிலுள்ள சிறுவர்களை மையமாகக் கொண்டு ஆஸ்திரேலிய அரசின் மீது பல்வேறு தரப்பு அழுத்தங்களும் பெருகியதால் இரகசியமாக அதேவேளை துரிதமாக இந்தப்பிரச்சினைக்கு முடிவை எட்டுவதற்கு நடவடிக்கை எடுத்த பிரதமர் ஸ்கொட் மொறிஸன் -

நவுறுவிலுள்ள சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துவரும் நடவடிக்கையை இரகசியமாக தொடங்கினார்.

தனது பதவிக்காலத்தில் தீர்க்கமான சில முடிவுகளை எடுப்பதற்கும் அதேவேளை நாடு இவ்வளவு காலமும் முகம் கொடுத்துவந்த சில பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தனது பதவிக்காலத்தில் மேற்கொள்வதன் மூலம் தனது ஆளுமையை நிரூபிப்பதற்கும் முனைப்புடன் மேற்கொண்டு வரும் பணிகளின் ஓர் அங்கமாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டார் மொறிஸன்.

ஆனால் நீண்ட காலம் கிடப்பிலுள்ள மனிதாபிமான விவகாரமான நவுறு அகதிகள் விவகாரத்துக்கு இது நிரந்தரத் தீர்வாக அமையுமா என்றால் - 'இல்லை' என்பதுதான் அதற்கான பதில்.

கடந்த ஒக்டோபர் 22ஆம் திகதி எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி நவுறு தீவில் 652 புகலிடக்கோரிக்கையாளர்கள் உள்ளனர். இவர்களில் 541 பேர் அதாவது 83 வீதமானவர்கள் உண்மையான அகதிகள் என்று இனங்காணப்பட்டவர்கள். 88 பேர் உண்மையான அகதிகளா இல்லையா என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஏனைய 23 பேரும் புகலிடம் கோருவதற்கு தகுந்த காரணங்களைக் கொண்டிராதவர்கள் என தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் நவுறுவிலுள்ளவர்களை மூன்றாவது நாடொன்றில் குடியமர்த்துவது என்ற ஆஸ்திரேலிய அரசின் கொள்கைப்படி அவர்களை நியூஸிலாந்துக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்ற குரல்கள் வலுத்து வருகின்றன.

இதற்கான அழைப்பினை நியூஸிலாந்து அரசு பல தடவைகள் விடுத்திருந்த பின்னணியில் அகதிகளை அங்கே குடியமர்த்தும் விடயத்தில் ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொறிஸன் நிபந்தனையொன்றுடன் சற்றே இறங்கிவந்திருக்கிறார்.

அதாவது நியூஸிலாந்து நாட்டவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு விஸா கட்டுப்பாடின்றி வந்துபோக முடியும் என்ற நிலையை மாற்றி, அகதிகளாக அங்கு குடியமர்த்தப்பட்டவர்கள் ஆஸ்திரேலியாவுக்குள் எக்காரணம்கொண்டும் எந்தவொரு விஸாவுடனும் நுழைய முடியாதபடி சட்டமாற்றம் கொண்டுவரப்பட்டால் நியூஸிலாந்தின் சலுகையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் யோசிக்கலாம் என்பதுதான் அவரது நிலைப்பாடு.

மூன்றாவது நாடொன்றில் குடியமர்த்தப்படும் அகதிகள் சுற்றுலா விஸா, வர்த்தக விஸா உட்பட எந்தவழியிலும் ஆஸ்திரேலியாவுக்குள் பயணம் மேற்கொள்ளாதவாறு தடைசெய்வதற்கான சட்டமுன்வடிவு, நாடாளுமன்ற அனுமதிக்காக இரண்டு வருடங்களுக்கும் மேல் காத்திருக்கும் பின்னணியில் -

குறித்த சட்டமுன்வடிவுக்கு லேபர், கிரீன்ஸ் மற்றும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஆதரவு வழங்கியிருக்காதநிலையில் இதில் எவ்வித சமரசங்களுக்கும் உடன்பட முடியாதென பிரதமர் ஸ்கொட் மொறிஸன் தெரிவித்துவிட்டார். அதனால் நவுறு அகதிகளை நியூசிலாந்தில் குடியமர்த்தும் திட்டமும் தொடர்ந்தும் இழுபட்டுக்கொண்டே செல்கிறது.

இது இவ்வாறிருக்க நவுறுவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள அகதிச்சிறுவர்கள் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டபின்னர் மீண்டும் நவுறு தீவுக்கு திருப்பி அனுப்பப்படுவார்களே தவிர, ஒருபோதும் ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாக குடியமர்த்தப்படமாட்டார்கள் என்று ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சர் பீட்டர் டட்டன் வழமைபோலவே ஒரு குண்டைத்தூக்கிப் போட்டிருக்கிறார்.

அப்படியென்றால் நவுறுவிலிருந்து ஆஸ்திரேலியா அழைத்துவரப்பட்டுள்ளவர்கள் மற்றும் இனிமேல் அழைத்துவரப்படவுள்ளவர்களின் எதிர்காலம் என்ன என்ற கேள்வி பூதாகரமாகியுள்ளது.

வாணலிக்குத்தப்பிநெருப்புக்குள்விழுந்த கதைபோல நவுறுதீவில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த மக்கள் ஆஸ்திரேலியா வந்தும் எதிர்காலம் என்னவென்று தெரியாத திரிசங்கு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை அமெரிக்கா-ஆஸ்திரேலியா இடையே செய்துகொள்ளப்பட்ட அகதிகள் ஒப்பந்தத்தின்படி நவுறு மற்றும் மனுஸ் அகதிகளை அமெரிக்காவில் குடியமர்த்தும்செயற்பாடும்ஒருபுறம்நடைபெற்று வருகிறது.

எனினும் பல்வேறு பாதுகாப்பு கெடுபிடிகளுடன் மந்தகதியில் நடைபெறும் இந்நடவடிக்கையின்படி இதுவரை நவுறுவிலிருந்து 276 பேரும் மனுஸிலிருந்து 163 பேருமென மொத்தமாக 439 பேர் அமெரிக்காவில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அதேநேரம் நவுறு அகதிகள் 148 பேர் மற்றும் மனுஸ் அகதிகள் 40 பேருக்கு அமெரிக்காவில் குடியமர்த்தப்படுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அப்படியானால் அவர்களது எதிர்காலம் என்ன என்பது மற்றுமொரு பெரிய கேள்விக்குறி.


Money Transfer Agent
Indian & Sri Lankan Spices, Groceries & Convenience
SPICE
MINI MART
All kind of Spices, Fresh Vegetables, Sweets & Snacks
Trading Hours:
9 am to 10 pm
6 Aurelia Street
Toongabbie NSW 2146
(Next to Commonwealth Bank)
Phone : 02 9688 4447
Fax : 02 9636 3920
The fastest money transfer service to many countries
Best rates to India & Srilanka
10 mins
WESTERN UNION WU
moving money for better
MoneyGram.
money transfer
We also do Business to Business
money transfer
PFG SMART CREDIT
Global Money Transfers
Ria



# அதிகாரக் கதிரைக்கு அடுத்து ஏறப்போகும் அரிதாரம் பூசிய “சிங்களத்துப்பாக்கிகள்”



கருணாகரன்

“மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக”
– 2 தீமோத்தேயு 3:1

“நடக்கும் என்பார் நடக்காது, நடக்காதென்பார் நடந்து விடும்...”
– தமிழ்த்திரைப்படப் பாடல்

“இலங்கையில் இராணுவ ஆட்சி வருவதற்கான வாய்ப்புண்டு” என்றால் உங்களில் பலருக்கும் இப்பொழுது நம்பக் கடினமாகவே இருக்கும். ஆனால், அதற்கான சாத்தியங்கள் ஏராளமாக உள்ளன. அது எப்போது நிகழும் என்று இங்கே நாம் கூறவில்லை. ஆனால் அதற்கான கதவுகளைத் திறந்து சாத்தியங்களை அதிகரித்துக் கொண்டிருக்கின்றன இலங்கை அரசும் அரசியலும்.

இலங்கைஅரசும்இலங்கையின்அரசியலும் சீரழிந்து விட்டன என்பதை நாம் சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை. ஜனநாயக வழிமுறையில் தேர்தல் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்கள் ஊழல், அதிகாரப்பிரயோகம், அதிகார துஷ்பிரயோகம், ஜனநாயக விரோதம் என்று மக்களுக்கு விரோதமான அத்தனையையும்செய்துகொண்டிருக்கின்றனர். இது மட்டுமல்ல, பொருளாதார நெருக்கடி, இன முரண்பாடு, இராணுவ நெருக்குவாரங்கள் என்று நாட்டுக்குப் பொருத்தமில்லாத காரியங்களையும் சாதனையாக நிகழ்த்துகின்றனர். இதனால் சனங்கள் தொடர் நெருக்கடிகளுக்குள்ளாக வேண்டியுள்ளனர். சனங்களுக்கு வரவரப் பிரச்சினைகள் கூடுகின்றனவே தவிரக் குறைகிற மாதிரித் தெரியவில்லை. இதில், தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், மலையக மக்கள் என்ற எந்தச் சுருதி பேதங்களுமில்லை. கடன் சுமையில் நாட்டையும் மக்களையும் தவிக்க விட்டிருப்பதே இந்த அரசியலாளர்கள் செய்த “அரும்பணி”. போதாக் குறைக்கு இந்தியா, அமெரிக்கா, சீனா என்று வெளிச்சக்திகளின் தலையீடுகள் வேறு உச்சமடைந்துள்ளன. இலங்கையில் காய்ச்சப்படும் கறிக்கு உப்புப் போடுவதென்றால்கூட, இவைகளைக் கேட்டுத்தான்போடவேண்டும்என்றஅளவுக்கு நிலைமை உருவாகியுள்ளது. இதற்குக்காரணம், வயிற்று வலி என்றாலும் வயிற்றால் போகவில்லை என்றாலும் ஓடோடிப் போய் அமெரிக்காவிடம் முறையிடும் தலைவர்களே. இதில் யாரும் விதிவிலக்கல்ல. ஒருவர் அமெரிக்காவிடம் போனால் மற்றவர்கள் இந்தியாவின் கால்களில் போய் விழுந்து முறையிடுகிறார்கள். இன்னொருவர் ஒன்றுக்குப் போவதற்கே சீனாவைத்தான் கேட்டுப்போக வேண்டும் என்ற நிலையில்.

இப்பிடி ஆளாளுக்கு தங்களையும் அடைவு வைத்துச் சனங்களையும் சில்லறைக்கு விற்க முற்பட்டால் நாடும் அரசியலும் சீரழியாமல் உருப்படுவது எப்படி?

இந்தச்சீரழிவின் இன்றைய வடிவமே “அலரிமாளிகையைவிட்டு வெளியேவரமாட்டேன்” - என்று ரணில் அடம் பிடிப்பதும் “ரணிலை அலரி மாளிகையில் இருக்க விடமாட்டோம்” - என்று மைத்திரி - மகிந்த கூட்டணி அடம் பிடித்துக் கொண்டிருப்பதும் ஆகும். இந்தப் பிரச்சினைக்கு விலக்குப் பிடிப்பதற்கென்று இந்தியா, அமெரிக்கா, சீனா, ஐ.நா என்று சர்வதேசத் தரப்புகள் கச்சையை இறுக்கிக் கட்டிக் கொண்டிருக்கின்றன.

விளைவு - நாட்டின் இறைமை, பாதுகாப்பு, கௌரவம் எல்லாம் கிழிந்து தொங்குகின்றன.

சுயமாகச் சிந்திக்கக்கூடிய, சுயமரியாதை உள்ள எவரும் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆனாலும் இதற்கு மறுப்பாக சனங்களால் உடனடியாக எதையுமே செய்யவும் இயலாது. மாற்று அரசியல் சிந்தனையாளர்களையும் புதிய சக்திகளையும் இனங்கண்டு மக்களிடம் அவர்களுக்கான ஆதரவைப் பலப்படுத்துவதற்கும் யாரும் தயாரில்லை. அப்படி மாற்றுக்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் எப்படியோ ஓரங்கட்டும் முயற்சிகளே நடந்து விடுகின்றன. இதற்குப் படித்தவர்களும் சிந்திக்கக் கூடியவர்களும் உடந்தையே. இந்த நிலையில் சனங்களின் தேவையைநிறைவேற்றுவதுயார்? அதிருப்தியைப் போக்குவது எப்படி? பிரச்சினைகளைத் தீர்ப்பது யார்? நாட்டைக்காப்பாற்றுவது எப்படி? சிறந்த ஆட்சியை வழங்கக் கூடியவர் எவர் - என்ற கேள்விகள் எல்லாப் பக்கத்திலிருந்தும் எழுந்துள்ளன.

தங்களுக்குரிய தலைமை எது என்று தெரியாத நிலை இன்று தமிழ்ச்சமூகத்துக்கு ஏற்பட்டுள்ளதை எல்லோரும் அறிவர். மாற்றுத் தலைமை வேண்டும் என்ற குரல்கள் எழுந்திருப்பது நம்பிக்கைக்குரிய - பொருத்தமான - தலைமைகள் இல்லைஎன்பதனால்தானே. இதே நிலைதான் முஸ்லிம்களிடத்திலும் மலையகத்திலும். ஏன் சிங்களத் தரப்பிலும்தான். ஆக மொத்தத்தில் நாடே புதிய தலைமைகளையும் புதிய நிலைமைகளையும் தேடிக் கொண்டிருக்கிறது, எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்த இடத்தில்தான் யாருமே எதிர்பார்க்காத சங்கதிகளுக்கும் மாற்றங்களுக்கும் வாய்ப்புள்ளது. ஜனநாயக வழிமுறையில் பொருத்தமான - சிறப்பான - தலைமைகள் இல்லை என்றால் அந்த இடத்தைத் தவிர்க்க முடியாமல் ஏதோ ஓர் அதிகார சக்தியே தலையெடுக்கும். இலங்கையில் ஏற்கனவே இவ்வாறான சூழலில், புரட்சிகர இயக்கங்களாக ஜே.வி.பியும் தமிழ் விடுதலை இயக்கங்களும் ஆயுதப்போராட்டத்தில் எழுச்சியடைந்தன. ஆனால் அவை இராணுவ அதிகாரத்தின் மூலமாக ஒடுக்கப்பட்டன. ஆகவே மீண்டும் இப்போதைக்கு அப்படியான புரட்சிகர ஆயுதப்போராட்ட இயக்கங்கள் எழுச்சியடைவதற்கான சூழல் குறைவு. அந்த இடத்தை இனியொரு சக்தியாக இராணுவமே நிரப்ப முற்படும். இலங்கையில் இது இலகு. மட்டுமல்ல ஆச்சரியமானதும் இல்லை.

எத்தனையோ அரசியல் ஆச்சரியங்களைக் கண்டது இலங்கை அரசியல் வரலாறு. ஜனநாயக ஆட்சி என்று சொல்லிக் கொண்டே ஜனநாயக விரோத ஆட்சியை நடத்தியிருக்கிறது. மனித உரிமைகளைக் காப்போம் என்று பிரகடனப்படுத்திக் கொண்டே மனித உரிமைகளுக்கு எதிராகச் செயற்பட்டிருக்கிறது. பயங்கரவாதச் சட்டத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு இராணுவ ஆதிக்கத்தைப் பிரயோகித்திருக்கிறது. உயிரும் குருதியும் சிந்தச் சிந்த ஆட்சி நடத்தப்பட்டிருக்கிறது. வடக்குக் கிழக்கில் கடந்த 40 ஆண்டுகளாக இராணுவ மேலாதிக்கத்தின் கீழான நிர்வாகமே நடந்து கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் இந்தியா தன்னுடைய படைகளை இலங்கைக்குள் இறக்கியிருக்கிறது. ஆயுதப் போராட்ட எழுச்சிகளும் போராட்டங்களைக் குரூரமாக ஒடுக்கியதும் நடந்திருக்கிறது. எதிரும் புதிருமாக 50 ஆண்டு காலப் போட்டிப் பாரம்பரியத்தை உடைய கட்சிகளான ஐ.தே.கவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றாகச் சேர்ந்து ஆட்சியை அமைத்திருக்கின்றன. இதற்கு வரலாற்றுப் பகைமுரணுடைய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, எதிர்க்கட்சி வரிசையிலிருந்து கொண்டே ஆதரவளித்திருக்கிறது. இப்பொழுது இரண்டு பிரதமர்கள் அதிகாரத்திலிருக்கிறார்கள் என்ற நிலை வந்திருக்கிறது.

இப்படி ஆச்சரியமான அரசியல் நிகழ்வுகள் நடக்கும்போது ஏன் இராணுவ ஆட்சி மட்டும் நிகழாது? தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களே ஜனநாயக மறுப்பு, மனித உரிமை மீறல், அதிகார துஷ்பிரயோகம், வன்முறை அரசியல் என்றெல்லாம் செய்ய முற்படும்போது இவை எல்லாவற்றையும் தூக்கிச்சாப்பிட்ட துணிச்சல் படைத்தரப்புக்கு ஏன் வராது?

இதற்கு வாய்ப்பாகக் கடந்த காலங்களில் படைத்துறைக்கு அரசாங்கம் வழங்கிய முக்கியத்துவம் உள்ளது. அரச எதிர்ப்புப் போராட்டங்களை ஒடுக்குவதற்குப் படைகளைப் பயன்படுத்தியதால் அவற்றை மகிழ்விக்கவும் குளிர்விக்கவும் வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டது. இதனால் படைகளின் தளபதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் உச்ச அங்கீகாரத்தையும் மதிப்பையும் வளங்களையும் அளித்தது. போதாக் குறைக்கு பல சந்தர்ப்பங்களில் சிவில் நிர்வாகத்திலும் படைகள் பங்கேற்றிருக்கின்றன. வடக்குக் கிழக்கில் இன்னும் இந்த நிலை நீடிப்பதைக் காணலாம். இதன் மூலம் சிவில் அனுபவமும் சிவில் நிர்வாகத்தில் பங்கெடுக்கும் விருப்பமும் படைத்துறைக்கு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே அனுருத்த ரத்வத்த, சரத் பொன்சேகா போன்றவர்கள் அரசியலில் ஈடுபட்டு உயரிடங்களில் இருந்திருக்கிறார்கள். இராணுவத்தளபதியாக இருந்த சரத் பொன்சேகா ஜனாதிபதி வேட்பாளராகக்கூடப் போட்டியிட்டிருக்கிறார். பிறகு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும் இருந்தார். இன்னொரு படை அதிகாரியாக இருந்த கோத்தபாய ராஜபக்ஸ அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்ற நிலை ஏற்பட்டிருப்பதையும் இங்கே கவனத்திற் கொள்ளலாம். ஆனால், இதெல்லாம் எப்படியோ, ஜனநாயக வழிமுறையில் தேர்தல் மூலமாகவே நடந்தவை. நடக்கக் கூடியவை. இதில் எப்படி இராணுவ ஆட்சிக்கான இடம்? என்று யாரும் கேட்கக் கூடும்.

இலங்கை அரசு கடந்த காலத்தில் படைத்துறையைச் சேர்ந்தவர்களையே உலகெங்கும் தூதர்களாகவும் ராஜதந்திரிகளாகவும் நியமித்திருக்கிறது. 51 ஆவது படையணியின் தளபதி சாந்த கோட்டேகொட - பிரேஸிலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டார். தற்போது தாய்லாந்துக்கான தூதுவர்.

(07ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரக்கதிரைக்கு அடுத்து ஏறப்போகும் அரிதாரம் பூசிய “சிங்களத்துப்பாக்கிகள்”



(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் இராணுவத்தளபதி ஜெகத் ஜெயசூரிய பிரேஸிலுக்கான தூதுவரானார். பின்னர், ஆர்ஜென்டீனா, கொலம்பியா, பேரு, சிலி ஆகிய நாடுகளுக்கும் தூதுவராகப் பதவி வகித்தார். 58 ஆவது படையணியின் இராணுவத்தளபதி சவேந்திர டி சில்வா - ஐ.நாவுக்கான இலங்கையின் துணைத் தூதுவரானார். கடற்படைத் தளபதி திஸர அமரசிங்க - ஆஸ்திரேலியாவுக்கான தூதுவரானார். ரொஹான் தளுவத்தை பிரேஸிலுக்கான தூதுவராகவும் ஜானக பெரேரே ஆஸ்திரேலியாவுக்கான தூதுவராகவும் சந்திரிகா அரசினால் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இப்படிப் பலரைக் குறிப்பிடலாம்.

இவர்களை அன்றைய அரசியல், இராணுவத் தேவைகளுக்காக நியமித்தது அரசாங்கம். ஆனால், இவர்கள் அப்பொழுது என்ன செய்திருப்பார்கள்? இவர்கள் உருவாக்கிய தொடர்புகளும் ராஜதந்திர உறவும் முறைமையும் எப்படியானதாக இருந்திருக்கும்? அவற்றின் செல்வாக்கு எப்படியிருக்கும்?

இப்பொழுது கொழும்பு அரசியலில் தலைவிரித்தாடும் அதிகாரப் போட்டிகளும் தாராள மயமாகியிருக்கும் மக்களுக்குப் புதியதொரு அரசியல் தெரிவை நோக்கியே சிந்திக்க வைக்கிறது. ஊழலும் அந்நியத் தலையீடுகளும் நாட்டின் ஸ்திரமற்ற நிலையும் சனங்களுக்கு உண்டாகிய சலிப்பும் எப்படியாவது ஓர் உறுதியான தலைமை வேண்டும் என்ற உணர்வையே ஏற்படுத்தியுள்ளது. அதற்குப் பொருத்தமான தலைமை இல்லையென்றால் அதற்குப் பதிலாக, அந்த இடத்தில் இராணுவம் தலையெடுத்தால் அதை அங்கீகரிப்பதற்கே சிங்கள மக்கள் முன்வருவர். இதைப் பௌத்த சிங்களச் சிந்தனையாளர்களும் அனுசரிப்பார்கள்.

இது ஓர் அபத்தமான கற்பனை என்று சிலர் மறுக்கக் கூடும். ஆனால், தாம் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றிய தேசத்தை இப்படிச் சீரழிய விடலாமா என்ற எண்ணம் படைகளுக்கு ஏற்படுவதற்கான சூழல் இதைச் செய்ய முயற்சிக்கலாம். போர் வெற்றியைக் கொண்டாடியதன் மூலம் படைகளின் முக்கியத்துவத்தையும் மாண்பையும் ஏற்கனவே அரசு மக்களிடத்திலே உண்டாக்கியிருக்கிறது. இதன் மூலம் படையினரைத் தங்கள் பிள்ளைகள் சாதனையாளர்கள், தேசத்தின் காவலர்கள் என்றே சிங்கள மக்களில் பெரும்பாலானோர் கருதுவதற்கு இடமளித்துள்ளது. அவர்களைப் பொறுத்தவரையில் படையினர் தேசத்தைக் காப்பாற்றிய போராளிகளே. எனவே படைகள் ஆட்சியில் ஏறினால் அதையிட்டு யாரும் ஆட்சேபிக்கப்போவதில்லை. இப்போதுள்ளவர்களை விட அது பரவாயில்லை என்றே சிந்திப்பர். கூடவே படை-கள் ஆட்சிபீடமேறி அதிகாரத்துக்கு வந்துவிட்டால் போர்க்குற்ற விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வராது என்ற எண்ணமும் சிங்கள மக்களிடம் உருவாகும். வேண்டுமானால் இந்தியா, சீனா, அமெரிக்கா, ஐ.நா. போன்ற வெளிச் சக்திகள் அதிர்ச்சியடைந்து கூக்குரலிடலாம். இதை எதிர்க்கலாம். முறியடிக்க முயற்சிக்கலாம். இதை ஒரு எல்லை வரையில்தான் அவற்றினாலும் செய்ய முடியும். அதுதான் ஏற்கனவே கூறியிருக்கிறோமே, பல நாடுகளின் குடியுரிமையைப் பெற்றவர்களாகவும் பல நாடுகளின் இராஜதந்திரிகளாகவும் படைத்தளபதிகள் இருக்கிறார்கள் என. இவர்கள் இந்தப் படையாட்சிக்கான பங்களிப்பைச் சிறப்பாக செய்வற்கு முயற்சிப்பர். இவர்களுக்கு ஜூனியர்களாக இருந்தவர்களே தற்போது படை நிலைகளில் இருப்பவர்கள் என்பதால் தங்கள் ஜூனியர்களுக்கான ஆதரவை வழங்குவதற்கு இவர்கள் முன்வருவர்.

எப்போதும் பொறுப்பானவர்களின் அரசியல் தவறுகளும் பலவீனங்களும் தலைமைத்துவக் குறைபாடுகளுமே எதிர்நிலைச்சக்திகளை அரங்குக்குக் கொண்டு வருவதுண்டு. அண்மைய எளிய உதாரணங்கள், மகிந்த ராஜபக்ஸவின் தவறுகளும் பலவீனங்களுமே மைத்திரி - ரணில் - தமிழ், முஸ்லிம், மலையக் கூட்டை அரங்கேற்றியது. ரணில் தரப்பின் பலவீனங்களும் தவறுகளுமே மீண்டும் மைத்திரியையும் மகிந்தவையும் இணைத்து அரங்குக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதைப்போலவே கூட்டமைப்பின் பலவீனங்களே விக்னேஸ்வரன் தரப்பைப் பலப்படுத்துவதற்கு உதவுகின்றன. இந்த வகையில் நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களின் தொடர் தவறுகளும் பலவீனங்களும் நீடிக்காது. அதற்கான இடமளிக்கப்படாது. இது வரலாற்றின் விதி. இதற்கான மாற்றுகளை (படைகள் அல்லாத மாற்றுச் சக்திகளை) உருவாக்கவில்லை என்றால், அந்த இடத்தில் படையதிகாரமே தலையெடுக்கும். இராணுவ ஆட்சி தென்னாசியாவுக்குப் புதியதல்ல. பாகிஸ்தான் முதற்கொண்டு பல நாடுகள் இராணுவ ஆட்சியின் கீழிருந்திருக்கின்றன.

2004 டிசம்பரில் “சுனாமிப் பேரலைகள்” இலங்கையின் கடலோரங்களைத் தாக்கிப் பேரழிவை உண்டாக்கின. இந்த அழிவைத் தாங்க முடியாமல் தவித்தது இலங்கை. ஆனால் இது ஒரேயொரு நாள் சுனாமி மட்டுமே.

1958 இலிருந்தே ஓயாது அடித்துக் கொண்டிருக்கும் “அரசியல் சுனாமிகள்” இலங்கையைத் தொடர் அழிவுக்குள்ளாக்கிக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது இலங்கையை அது ஏறக்குறைய மூழ்கடிக்கும் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. இதைவிட எதிர்காலத்தில் இன்னும் எத்தனை அரசியல் சுனாமிகளோ....!

1948 இல் பிரித்தானியர்கள் இலங்கையின் ஆட்சியை இலங்கையர்களின் கைகளில் ஒப்படைத்து விட்டுச் சென்றபோது இலங்கை மீளவும் அமைதியும் சுயாதீனமும் உள்ள நாடாக ஒளிரும் என்று நம்பப்பட்டது. இலங்கையைப் போல தங்களுடைய நாட்டையும் வளமுடையதாக ஆக்க வேண்டும் என்று கனவு கண்ட உலகத்தலைவர்கள் பலருண்டு. ஒரு தடவை இலங்கைக்கு வந்திருந்த சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ தன்னுடைய நாட்டை இலங்கையைப் போல உருவாக்க வேண்டும் என்றார். சொன்ன மாதிரியே அவர் பிரித்தானியாவிடமிருந்து விடுபட்ட சிங்கப்பூரை உலகம் வியக்கக் கூடியமாதிரி உருவாக்கிவிட்டார்.

ஆனால் இலங்கையர்களின் இலங்கை?

சுதந்திரமடைந்த பத்து ஆண்டுகளிலேயே அரசியல் முரண்பாடுகளைச் சரியாகக் கையாளத்தவறியதன் விளைவாக இனவன்முறை வெடித்தது. 1958 (1958 riots in Ceylon) வன்முறையில் 300 வரையான தமிழர் கொல்லப்பட்டனர். லட்சம் வரையானவர்கள் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்தனர். இது எல்லோருக்கும் தெரிந்த மிகப் பழைய சேதியே. ஆனால், இதை ஒரு தவறான விசயமென்றோ படிப்பினைக்குரிய சங்கதியெனவோ இன்னும் தான் இலங்கையின் ஆட்சியாளர்களும் சரி, மக்களும் சரி எடுத்துக் கொள்ளவில்லை.

இதிலிருந்து கடந்த அறுபது ஆண்டுகளில் இலங்கையின் உள்நாட்டு அரசியல் மோதல்களில் எல்லாத் தரப்பிலிருந்தும் எல்லா இனத்திலிருந்தும் (ஜே.வி.பி - அரசு, தமிழ் இயக்கங்கள் - அரசு, இந்திய அமைதிப்படை - புலிகள், இயக்கங்கள் - முஸ்லிம் தரப்பு, முஸ்லிம் தரப்பு - அரசு மற்றும் தமிழ் இயக்கங்களுக்கிடையிலான மோதல்களில்) கொல்லப்பட்டோரின் தொகை நான்கு லட்சத்துக்கு மேல் என்கின்றன புள்ளி விவரங்கள். காணாமலாக்கப்பட்டோரின் எண்ணிக்கை முப்பது ஆயிரத்துக்கு மேல். இதை விட உடல் உறுப்புகளை இழந்து இன்னும் நடமாடக் கடினமாக இருப்போர் நம் கண் முன்னே லட்சக்கணக்கில் உள்ளனர்.

இதற்குப் பிறகு?

எல்லா அரசியல் முரண்பாடுகளும் மோதல்களும் அதிகாரத்தின் வழியாகவே அடக்கியொடுக்கப்பட்டன. பேச்சுகளும் உடன்படிக்கைகளும் சமாதான முயற்சிகளும் ஒன்றுக்கும் பயன்படவில்லை. இலங்கையர்களின் கைகளில் இலங்கையின் ஆட்சி வந்த பிறகு நடந்த, நடந்து கொண்டிருக்கும் அழிவுக் கொண்டாட்டம் இது. இதன் உச்சக்கட்டம் “முள்ளிவாய்க்கால் அழிவு அல்லது முள்ளிவாய்க்கால் துயரம்” என்று சொல்லப்படும் புலிகள் - அரசு தரப்புகளுக்கிடையிலான இறுதிப்போர் அழிவுகள்.

இவ்வளவுக்கு இலங்கையில் பொருளாதார முன்னேற்றமோ, இயற்கை வளப் பேணுகையோ, மனித உரிமை மேம்பாடோ, ஜனநாயக மாண்போ, அரசியல் நாகரீகமோ, பரஸ்பரத் தன்மையோ, அறிவுப் புலப்பாடுகளோ உயர்வடையவில்லை. ஆனால், இவையே நடந்திருக்க வேண்டியவை. இவற்றைக் குறித்த படிப்பினைகளும் அக்கறைகளும் மீள்பார்வைகளும் கூட நிகழவில்லை. புதிய நிலைப்பாடுகள் எதுவும் உருவாக்கப்படவில்லை. “எல்லா அழிவுகளிலிருந்தும் தவறுகளில் இருந்தும் கற்றுக் கொள்ளுங்கள். பகையை மறவுங்கள். மீளிணங்குங்கள். புதியன சிந்தியங்கள், புதியவற்றை உருவாக்குங்கள்.” என்று இலங்கையர்களுக்கு உலகம் சொல்லிக் கொண்டேயிருக்கிறது. இதற்காக பெருமளவு காசையும் கொடுத்து உலக அனுபங்களைக் காட்டியும் வருகிறது. ஆனால், அதையெல்லாம் நடைமுறையில் யாருமே பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. கையை நீட்டிக் காசை வாங்கிக் கொண்டு எல்லோருக்கும் “பெப்பே” காட்டிவிடுகிறார்கள்.

அப்படியென்றால் அடுத்த கட்டம் என்ன?

மேலும் முரண்பாடுகளை வலுவாக்கம் செய்யும் விதமாக இனமுரண்பாடு, அரசியல் முரண்பாடுகளையெல்லாம் பகை முரண்பாடுகளாக வளர்த்தெடுப்பதிலேயே எல்லோருடைய ஆர்வமும் உள்ளது. இதில் அரசியல்வாதிகளையும், கட்சிகளையும் விட மும்முரமாக நிற்பது ஊடகத்துறையினர், மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழகம் போன்ற சமூக மட்டத்தினரே.

இலங்கையின் தீராத் துயரம் இதுவே.

தற்போதைய நிலை / சிக்கல்

இந்தச் சீரழிந்த வளர்ச்சிப்போக்கின் இன்னொரு வடிவம்தான் இலங்கையில் தற்போது நடந்துகொண்டிருக்கும் அதி-காரப் போட்டிகள். ஒரு சின்னஞ்சிறிய நாட்டுக்கு இரண்டு பிரதமர்கள் என்ற நிலை வந்திருக்கிறது. உண்மையில் யார் பிரதமர்? என்று உறுதியாகச் சொல்ல முடியாது யாராலும். அரசியலமைப்பு கேலிக்குரியதாகிவிட்டது. சனங்கள் எதிலும் நம்பிக்கை கொள்ள முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டுவிட்டனர். எல்லோருக்கும் குழப்பமே. அடுத்ததாக என்ன நடக்கும் என்றும் அறுதியிட்டுக் கூறவியலாது எந்தக் கொம்பராலும். அந்தளவுக்கு நாடு குழியில் வீழ்ந்து கிடக்கிறது.

1948 இல் பிரித்தானியர்கள் இலங்கையின் ஆட்சியை இலங்கையர்களின் கைகளில் ஒப்படைத்து விட்டுச் சென்றபோது இலங்கை மீளவும் அமைதியும் சுயாதீனமும் உள்ள நாடாக ஒளிரும் என்று நம்பப்பட்டது. இலங்கையைப் போல தங்களுடைய நாட்டையும் வளமுடையதாக ஆக்க வேண்டும் என்று கனவு கண்ட உலகத்தலைவர்கள் பலருண்டு. ஒரு தடவை இலங்கைக்கு வந்திருந்த சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ தன்னுடைய நாட்டை இலங்கையைப் போல உருவாக்க வேண்டும் என்றார். சொன்ன மாதிரியே அவர் பிரித்தானியாவிடமிருந்து விடுபட்ட சிங்கப்பூரை உலகம் வியக்கக் கூடியமாதிரி உருவாக்கிவிட்டார்.

எதிரொலி ETHIROLI மெல்பேர்ண்
குரல் 02 அதிர்வு 17 நவம்பர் 2018 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162

# மலரும் மண்டபம்

ஆஸ்திரேலியாவில் தமிழ் மக்களுக்கான கலாசார மண்டபம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற மாபெரும் கனவு முதன் முறையாக மெல்பேர்ணில் கைகூடியிருக்கிறது.

பரவசமூட்டுகின்ற இந்த வரலாற்று முன்னெடுப்பினை ஈழத்தமிழ் சங்கத்தின் விக்டோரிய கிளை சாத்தியமாக்கியதன் மூலம் சாதித்திருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக செயல்வடிவம் காணத்தொடங்கியிருக்கும் இந்த ஒழுங்கமைப்பு வேலைகள், திட்டமிட்டபடி நகரத்தொடங்கினால் இன்னும் சில மாதங்களில் நிறைவடைந்துவிடும், தமிழர் கலாசார மண்டபம் மெல்பேர்னில் உதிக்கும் என்று ஈழத்தமிழ் சங்கம் பெருமையுடன் அறிவித்திருக்கிறது.

இந்த கலாசார மண்டம் குறித்த விரிவான அறிமுகக் கட்டுரை ஒன்றினை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் "எதிரொலி" வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மண்டபத்துக்கு விக்டோரிய பல்கலாசார அமைச்சு ஐந்நூறாயிரம் டொலர்களை வழங்கியிருக்கின்றமை இந்த முயற்சியை முன்னெடுத்த அமைப்புக்கும் தமிழ் மக்களுக்குமான மிகப்பெரிய ஊக்குவிப்பாகும். பல்கலாசார அமைச்சர் நிதியை வழங்கும் இந்த நிகழ்வுக்கு "எதிரொலி" பத்திரிகையும் உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டிருந்தது.

இந்த கலாசார மண்டபம் மெல்பேர்ணில் தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள டண்டிநொங் பிராந்தியத்தில்அமைந்துள்ளது.ஏற்கனவேவேறுதேவைக்குப் பயன்படுத்தப்பட்டுவந்த ஒரு விசாலமான மண்டபத்தினை கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முற்பணம் செலுத்தி வாங்குவதற்கான ஒப்பந்தத்தை வங்கியுடன் கைச்சாத்திட்டிருக்கிறது ஈழத்தமிழ் சங்கம்.

ஈழத்தமிழ் சங்கத்தின் கீழ் பிரைவேட் லிமிட்டெட்டாக பதிவு செய்யப்பட்ட கம்பனியின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற இந்த நடவடிக்கைகளுக்கு ஐந்து பேர் கொண்ட செயற்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. சமூகத்தின் சகல மட்டத்தினருடனும் ஆலோசனைகளை மேற்கொண்டு இந்தக் குழுவினர் தங்களது நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகிறார்கள்.

மண்டபத்தில் தேவைகள் உள்ளடங்கியதாக அதை நிர்மாணம் செய்து தளவாடங்களை தருவிப்பது உட்பட சகலவிதமான வேலைகளையும் நேர்த்தியாகச் செய்து முடிப்பதற்கு, மேலதிகமாக நேரமும் பணமும் தேவைப்படுவதால் மொத்த செலவு 40 லட்சம் டொலர்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்தில் தமிழர்களாக அடையாளம் காண்பிக்கக்கூடிய மாபெரும் குறியீட்டு நிறுவனமாக வியாபித்து நிற்கவுள்ள இந்த மண்டபத்தின் பங்குகளை தங்கள் பிள்ளைகளின் பெயரிலோ பேரப்பிள்ளைகளின்பெயரிலோவாங்குவதன்மூலம் பல பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம். இலாப நோக்கத்தில் பார்த்தால்கூட இப்போது வாங்கும் ஐயாயிரம் டொலர் பெறுமதியான பங்குகள் எதிர்காலத்தில் மிகப்பெரிய பெறுமதியை எட்டும்போது அவற்றை விற்பதன் மூலம் கணிசமான நன்மையை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களும் இதில் உள்ளது.

ஆஸ்திரேலியாவின் மிகப்பழமையான தமிழ் அமைப்பாகவும் சமூக பொறுப்புள்ள நிறுவனமாகவும் தொடந்து தனது மக்கள் பணியை மேற்கொண்டு வருகின்ற ஈழத்தமிழ் சங்கம், தற்போது முன்னெடுத்துள்ள இந்த வரலாற்று முன்னெடுப்புக்கு மெல்பேர்ண் வாழ் தமிழ்மக்கள் தாங்குதளமாக நின்று உறுதுணை நல்குவது காலத்தின் கடமையாகும்.

## இலங்கை அரசியல் குழப்பம்:

# அகதிகளுக்கு சுபநேரமா?

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை குறித்து வெளிநாடுகள் அனைத்தும் மிக உன்னிப்பாக அவதானித்துவருகின்றன. மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் அவைரும் ஐ.தே.க. தலைமையிலான ரணில் தரப்பினரை நேரடியாகசந்தித்துப்பேச்சுநடத்தியிருந்தார்கள். அரசமைப்புக்கு முரணாக ஜனாதிபதி மைத்திரி மேற்கொண்ட நடவடிக்கை பற்றி அதிருப்தி வெளியிட்டிருந்தார்கள்.

கிட்டத்தட்ட அனைத்து நாடுகளுமே சிறிலங்கா அரசு ஜனநாயக விழுமியங்களை பேணவேண்டும். அரசமைப்புக்கு அமைவாக ஆட்சி நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தன. ஐக்கிய நாடுகள் சபைகூட சிறிலங்காவின் நிலை குறித்த தனது கரிசனையை அறிக்கையாக வெளியிட்டிருந்தது.

இவற்றை ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது, சிறிலங்கா நிலைவரம் குறித்த விரிவான பார்வை கொண்டவர்களுக்கு ஒருவிடயம் தெளிவாகப்புரிந்திருக்கும்.



அதாவது, நல்லாட்சி என்றும் சுபீட்ச வாழ்வென்றும் இலங்கையில் என்னதான் அரசுகள் மாறி மாறி வந்து நின்று அறிக்கைகளை விடுத்தாலும், அங்குள்ள அரசியல் நிலமை என்பது எப்போதும் நொருங்கி விழுந்துவிடக்கூடிய ஒரு கட்டத்தில் தான் காணப்படுகிறது.

போரை முடித்துக்கொண்டு அதற்கான பலாபலனாக மீண்டும் பல ஆண்டுகளுக்கு ஆட்சி நடத்துவதற்கு விரும்பிய மகிந்த ராஜபக்ஷ, தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டாலும் சளைக்காத குதிரையாக ஆட்சியைப்பிடிப்பதற்கு போராடிக்கொண்டிருக்கிறார். அவரது போர்க்குற்றங்களுக்கு சாமரம் வீசிக்கொண்டு நின்ற பழைய பரிவாரங்களோடு மீண்டும்ஆட்சிபீடமேறுவதற்கு துடித்துக்கொண்டிருக்கிறார்.

மேற்குலக நாடுகளும் சர்வதேச தரப்புக்களும் யாரை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றினால் இலங்கையில் ஜனநாயகம் நிலைநாட்டப்படும் என்று கருதினார்களோ, அந்தத் தரப்பு மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய ஏதுநிலைதான் காணப்படுகிறது. அவருக்கென்று பெரிய பரிவாரங்களும் ஏன் பெருந்தொகையான மக்களாதரவும்கூட காணப்படுகிறது.

இப்படியானதொரு நிலையில் - அங்குள்ள சிறுபான்மையின மக்களின் எதிர்காலமென்பது தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே காணப்படப்போகிறது என்பது நூறுசதவீதம் உறுதி. சிங்கள மேலாதிக்கத்தின் நெருக்குவாரத்துக்குள் சிக்கிச் சீரழியப்போகிறது என்பதும் முடிந்த முடிவு.

இவற்றை வெளிநாட்டுத்தரப்புக்கள் இனிமேலாவது எவ்வாறு அணுகப்போகின்றன என்பது மிகப் பெரிய கேள்விக்குறி.

சிறிலங்காவில் சிறுபான்மையின மக்களுக்கு தீர்வு தருவதற்கு விரும்பும் இந்த நாடுகள் தலையிடிக்கு தலையணையை மாற்றியதுபோல தற்காலிக தீர்வுகளை முன்வைக்காமல் நிரந்தர தீர்வுகளை நடைமுறைப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதைவிடுத்து, தொடர்ந்தும் சிங்கள தேசத்துக்குப் பொருளாதார சலுகைகளை வழங்கிக்கொண்டு, இராஜதந்திர அங்கீகாரங்களை வழங்கிக்கொண்டு, அங்கிருந்து வந்து தூதரகங்களுக்குள் ஒளித்துக்கொள்கின்ற முன்னாள் இராணுவத்தினரை இராஜதந்திரிகளாக ஏற்றுக்கொண்டவாறு வெளிவிவகார கொள்கைகளை தொடர்வதென்பதும்கூட இந்த வெளிநாடுகள் பின்பற்றுகின்ற ஜனநாயகத்துக்கு முரணான நடவடிக்கைகள்தான். இன்னொரு வகையில் சொல்லப்போனால், இப்பேற்பட்ட சிறிலங்கா அரசின் பங்காளிக்குற்றவாளிகள்தான்.

இந்த நாடுகள் எப்போதும் தாங்கள் கறைபடியாத பஞ்சாயத்துத் தலைவர்கள்போல பிரச்சினைவரும்போது மாத்திரம் சொம்போடு வந்து ஆல மரத்துக்குக்கீழ் குந்தி விடுகிறார்களே தவிர, நிரந்தரத் தீர்வுகளை வழங்குவதற்கு முயற்சிப்பதுமில்லை. சிறுபான்மையின மக்களின் குரல்களை நியாயாமாக செவிசாய்ப்பதுமில்லை. இதுதான்தொடரும்அவலமும் வரலாறும்.

அவ்வாறு இந்த நாடுகளினால்சிறிலங்காவிலுள்ள சிறுபான்மைச் சமூகத்துக்கு தங்களால் உரிய தீர்வினை வழங்கமுடியாவிட்டால், ஆகக்குறைந்தது அங்கிருந்து வெளிநாடுகளுக்கு அரசியல் தஞ்சம்கோரி வருகின்ற அகதிகளுக்காவது இந்த அரசுகள் அடைக்கலம் கொடுக்கவேண்டும். சர்வதேச நியமங்களின்படி அதுதான் மரபும்கூட.

குறிப்பாக ஆஸ்திரேலியாவில் அகதிகள் பிரச்சினை என்பது நவுறு - மானஸ் தீவுகளைத்தான் சுற்றி சுற்றிப்பேசப்படுகிறது.

ஆஸ்திரேலியாவின் ஆளும் லிபரல் அரசும்கூட நவுறு - மானஸ் அகதிகள்பிரச்சினையைத்தான்இந்த நாட்டின் தேசியப்பிரச்சினை போல பூதாகாரப்படுத்திப் பேசிக்கொண்டிருக்கிறது.

உண்மையில், இந்த அகதிகளை விடப் பெரும் எண்ணிக்கையிலான அகதிகள் ஆஸ்திரேலியாவில் தற்காலிக விசா வழங்கப்பட்ட நிலையில் ஸ்திரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளமுடியாமல் இடர்களுக்குள் வாழ்ந்து வருகிறார்கள்.

தாய்நாட்டிலிருந்து தங்கள் குடும்பத்தை அழைத்துக்கொள்ள முடியாதவர்களாக, நிரந்தர வதிவிட உரிமை கிடைக்கும்வரைக்கும் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியே பயணம் செய்யமுடியாதவர்களாக இன்னும் பல இன்னல்களோடு வழக்கறிஞர்களுக்குபெருந்தொகையானபணத்தை நித்தமும் கொடுத்தவண்ணம் தங்களது வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் ஒற்றைக்காரணம் என்ன?


சிறிலங்கா என்பது ஜனநாயச் செழிப்போடு அமைதியுடன்காணப்படுகின்ற நாடு என்றும் நல்லாட்சி நடைபெறுகின்ற சுபீட்சம் மிக்க நாடு என்றும் ஆஸ்திரேலியாவும் ஏனைய நாடுகளும் நிச்சயமாக நம்புகின்றன. அந்த நாட்டின் அரசாங்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நாடுகளே பிரசாரம் செய்து அங்கு திரும்பவும் அனுப்பிவிடுவதற்கு ஆலாய்ப் பறக்கின்றன.

ஆனால் யதார்த்தம் என்ன என்று பார்த்தால் -

போர்க்குற்றங்களைபுரிந்ததாகக் கூறப்படுகின்ற ஒரு நபரின் தலைமையிலான அரசு மீண்டும் வரக்கூடிய ஏதுநிலை அங்கு உச்சத்தில் இருப்பதும் - சிறுபான்மையின மக்கள் பெரும்பான்மையினத்தவருடன் சமமாக வாழக்கூடிய நிலை இன்னமும் கிட்டவில்லை என்பதுமே ஆகும்.

ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை, இந்த யதார்த்தத்தை தொடர்ச்சியாக அது ஏற்க மறுக்கிறது. இங்கு வந்துபோகின்ற சிறிலங்கா அமைச்சர்களும் அரசுத்தலைவர்களும் வழங்குகின்ற போலி வாக்குறுதிகளையும் அரிதாரப்பேச்சுக்களையும் வேதவாக்காக நம்பி, அகதிகளின் மீது அழுத்தங்களைப் போடுகின்றது. அடைக்கலம் தேடி வருபவர்களை எப்படியாவது திருப்பி அனுப்புவதன் மூலம் தனது நாட்டின் இறைமையைப் பாதுகாக்க எண்ணுகிறது பின்னர், சிறிலங்காவில் போய் நின்றுகொண்டு தமிழர்களின் இறைமைக்கு மதிப்பு கொடுக்குமாறு சிறிலங்கா அரசிடம் ஒப்புக்குப் பேசுகிறது.

ஆக, சிறிலங்காவில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்பத்தின் பிறகாவது ஆஸ்திரேலியா இங்குள்ள அகதிகளின் கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலிக்கவேண்டும். அதற்கான, காரணங்களையாவது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளவேண்டும். ■




உலக வரலாற்றில் பெரும் அறிஞர்களாக, தத்துவஞானிகளாக, விஞ்ஞானிகளாக வலம்வந்தவர்கள், வருகிறவர்கள் எல்லோருமே பொதுச்சமூகத்தின் கருத்துக்கு மாறாக கருத்து தெரிவிப்பவர்களாகவே இருந்திருக்கிறார்கள். உலகம் உருளை எனச் சொன்ன கலிலியோவில் இருந்து, டார்வினில் இருந்து பெரியார் வரை இது தொடர்கிறது. இவர்களில் பெரும்பாலானோரின் கருத்துக்கள் சமகாலத்தில் ஏற்கப்படவில்லை எனினும் பிற்காலத்தில் இவர்கள் முற்போக்காளர்களாக கொண்டாடப்பட்டிருக்கிறார்கள். தாங்கள் வாழ்ந்த சமூகத்தினின்று மாறுபட்டு சிந்தித்ததால்தான் இவர்கள் முற்போக்காளர்களாக கொண்டாடப்பட்டார்கள். அதே நேரம் இவர்களின் மீது அடக்குமுறையையும், முன்முடிவுகளையும் கட்டவிழ்த்துவிட்டவர்கள் வரலாற்றில் ஃபாசிஸ்டுகளாகவே பதிந்திருக்கிறார்கள்.

நிற்க -

நம் சமகாலத்தில் ஃபாசிசம் என்பது பழமைவாத கும்பலிடம் மட்டுமல்லாது தங்களை முற்போக்காளர்களாக அடையாளப்படுத்திக்கொள்ளும் ஆட்களிடமும் பரவியிருக்கிறது என்பதுதான் வேதனையான உண்மை. இதற்கு ஆதாரபூர்வமான பல உதாரணங்களைத் தர முடியும். அதற்கு முன்பு, எதையெதையெல்லாம் முற்போக்கு என நம் சமூகம் கொண்டாடுகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

ஊழல் ஒழிப்பு, தமிழுணர்வு, ஆணாதிக்க எதிர்ப்பு, கல்வி பொதுமயமாக்கல், கம்யூனிசம், பெரியாரிசம் என பலவற்றைச் சொல்லமுடியும். இவர்களில் எல்லோரையும் நாம் முற்போக்கு ஃபாசிஸ்டுகளாகச் சொல்லமுடியாதெனினும், இதில் அரைகுறை ஆர்வலர்களாக இருக்கும் ஒரு 10 சதவிகிதம் பேரை தாராளமாகச் சொல்லலாம்.

அன்னா ஹஜாரே என ஒரு ஆள் இருந்தார். ஊழல் ஒழிப்பின் இலச்சினை அவர்தான். சங்கர், முருகதாஸ் படங்களைப் பார்த்து இந்தியாவின் பிரதான பிரச்சினை ஊழல்தான் என நினைத்துக்கொண்டிருந்த - மூளைச்சலவை செய்யப்பட்ட - இளைஞர் பட்டாளம் எல்லாமே இந்த ஆளை ஊழல் ஒழிப்பின் பிதாமகராக - இந்தியாவையே புரட்டிப்போட வந்த புரட்சியாளராக - பார்த்தார்கள். லோக்பல் வந்துவிட்டால் இந்தியாவே ஒளிர்ந்துவிடும், குளிர்ந்துவிடும் என்பது போன்ற மாயத்தோற்றம் உருவாக்கப்பட்டது. ஆனால் அப்போதே அந்த ஆளின் வரலாற்றை தெரிந்துகொண்டு, அவர் ஓர் ஆர்.எஸ்.எஸ் கைக்கூலி என நிறுவிய என் போன்ற ஆட்கள் அப்போது ஊழல் ஆதரவாளர்களாக சித்தரிக்கப்பட்டோம். என் கல்லூரி நண்பர்கள் பலரும்கூட என்னுடன் கோபம் கொண்டு பேசாமல் இருந்தார்கள்.

ஆனால் இப்போது என்ன நடக்கிறது? அம்பானிக்காக மோடி நடத்திய மாபெரும் ரஃபேல் விமான ஊழலைப் பற்றி உலகமே சந்தி சிரிக்கும்போது அன்னா ஹஜாரேவை காணவே இல்லை.

வினோத் ராய் என்கிற ஆள் 2ஜி ஏலத்தில் ஊழல் எனச் சொன்னார். "தினமலர்" போன்ற ஏடுகள் 2ஜியில் ஊழல் செய்யப்பட்ட பணத்தை அடுக்கினால் கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை அடுக்கலாம் என எழுதினார்கள். ஆ.ராசா குற்றம் சாட்டப்பட்டவுடனேயே இந்தியாவிலேயே மிகப் பெரிய ஊழல்வாதியாக சித்தரிக்கப்பட்டார். ஆனால் நாங்கள் வினோத்ராயின் உள்நோக்கத்தை சந்தேகப்பட்டோம். 2ஜி ஊழல் வழக்கு என்பதே சித்தரிக்கப்பட்ட ஒன்று என்பதை எழுதிக்கொண்டே இருந்தோம். எனவே ஊழலுக்கு ஆதரவாளர்களாக சித்தரிக்கப்பட்டோம். எங்களை முறைத்துக்கொண்ட நண்பர்கள்தான் தெளிவாக இல்லையே தவிர, எதிரிகள் மிகத்தெளிவாக தங்கள் எதிரி ஆ.ராசா மற்றும் தமிழ்நாடு என்பதில் தெளிவாக இருந்தார்கள். இன்று 2ஜி வழக்கை ஒன்றுமில்லாத வழக்கு என நீதிபதியே ஊதித்தள்ளியிருக்கிறார்.

பின்னர் ஈழப்பிரச்சினை வந்தது. யாரெல்லாம் ஈழ இனப்படுகொலையை விமர்சித்துக்கொண்டே விடுதலைப்புலிகள் மீதான விமர்சனத்தையும் வைத்தார்களோ, அவர்களெல்லாம் எந்த சீராய்வும் இன்றி துரோகிகளாக சித்தரிக்கப்பட்டார்கள். உடனே இனத்துரோகிப்பட்டம் வழங்கப்பட்டது. இன்று பலர் அதை ஏற்கவும் விவாதிக்கவும் துவங்கி இருக்கிறார்கள். இப்படி அடுக்கடுக்காக ஒரே இலக்கை நோக்கி பயணிப்பவர்களிடையேயான ஃபாசிச போக்கை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

இன்னொரு விஷயத்தையும் நாம் கவனமாக பார்க்க வேண்டும்.

எந்த ஒரு விஷயத்திற்கு உலகில் ஒரு அளவுகோல் இருக்கிறதென்றால் அதற்கு இந்தியாவில் ஒரு அளவுகோல் இருக்கும். உதாரணத்திற்கு, சைவ உணவுப்பழக்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஜீவகாருண்யம் சரியா தவறா என்பது பற்றியெல்லாம் நான் விவாதிக்க முற்படவில்லை. ஆனால் வீகனிசம் (Veganism) எனப்படும் கொல்லாமை உணவுப்பழக்கத்தை பின்பற்ற முயற்சித்து அதுகுறித்து இந்தியாவில் எந்த மாதிரியான பார்வை இருக்கிறதென்று ஆராய முற்பட்ட போதுதான் முகத்தில் அறைவதைப் போன்ற பல உண்மைகள் புலப்பட்டன. இந்திய சைவ சங்கங்கள் எல்லாம் பிராமண சங்கங்களாக இயங்குகின்றவை. சைவ உணவுப்பழக்கம் என்பது எப்படி இந்திய இந்துமத கலாசாரத்தில் 'புனிதமாக' திணிக்கப்பட்டுள்ளதோ அப்படியே இந்த சங்கங்களும் அதை பார்க்கின்றன. உதாரணத்திற்கு மீனவர் படுகொலை பற்றி இப்போது பரபரப்பாக பேசப்படும் சின்மயியின் கருத்து ஒன்றையே எடுத்துக் கொள்ளலாம். "தமிழக மீனவர்கள் மீன்களைக் கொல்கிறார்கள். இலங்கை கடற்படை மீனவர்களைக் கொல்கிறது" - என அற்புதமான கருத்து ஒன்றை ட்விட்டரில் உதிர்த்திருந்தார். இந்தியாவில் சைவு உணவுப் புரிதல் என்பதும் இப்படித்தான் மேல்சாதிக்காரர்களால் பீடித்து வைக்கப்பட்டிருக்கிறது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் மேற்கத்திய உலகத்திலிருந்து என்ன ஒரு புதிய இயக்கமோ, கருத்தோ இந்தியாவிற்குள் வந்தாலும் அதைப் பார்ப்பனர்கள் பெருவாரியாக போய் பிடித்துக் கொண்டு அதை தங்களது ஆக்கிக் கொள்வார்கள். அதன்பின் அது பிராமணர் சங்கமாகத்தான் இருக்கும். இதற்கு கம்யூனிசம், வெஜிடேரியனிசம் மட்டுமல்ல, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகள்கூட அடக்கம். வேண்டுமானால் இவற்றின் பதவிப் புள்ளிவிவரங்களை சோதித்துக் கொள்ளலாம்.

தமிழகத்திலிருந்து
டான் அசோக்

ஆக, இந்த ஒரு ஜாக்கிரதை உணர்வுடன்தான் நாம் தற்போது பரபரப்பாக பேசப்பட்டுக் கொண்டிருக்கும் "மீடூ" விவகாரத்தையும் அணுக வேண்டும்.

"பாட்ஷா" படத்தில் யுவராணியை கெஸ்ட் ஹவுசுக்கு வந்து படிக்கச்சொல்வார் ஒரு மெடிக்கல் காலேஜ் ஓனர். அதுதான் #metoo. அப்போது நமக்கெல்லாம் கோபம் வந்ததல்லவா? அந்தப் பொண்ணின் அண்ணன் "பாட்ஷா" என்பதால் காப்பாற்றிவிட்டு சீட்டும் வாங்கிக் கொடுத்துவிட்டார். ஒருவேளை பாட்ஷாவாக இல்லையென்றால் அந்தப் பெண் கெஸ்ட் ஹவுஸ் போயிருப்பார். இல்லையென்றால் அந்த பெண் இடத்தில் வேறொரு பெண் கெஸ்ட் ஹவுஸ் போயிருப்பார். "அந்த பெண் போனது அவரின் முடிவுதானே, போகாமல் இருக்க வேண்டியதுதானே" - என நாம் கேட்கலாம். நாங்கள் எங்களது இடத்தில் சொகுசாக இருந்து கொண்டு கேட்பது மிகவும் ஈசி. ஆனால் ஒரு வேலைக்கு - ஒரு சீட்டுக்கு கோடி பேர் போட்டி போடும் இந்தியா போன்ற இடத்தில் - இந்த மாதிரியெல்லாம் கேள்வி கேட்பது அபத்தம். அது குற்றவாளிகளுக்குத்தான் ஆதரவாக அமையுமே தவிர, அதில் எள்ளளவும் நியாயமில்லை.

ஒரு ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் ஈர்க்கப்பட்டு உறவில் இருப்பது இயற்கை. அது அழகினால், கலையால், திறமையால், நல் உள்ளத்தால் என பல காரணங்கள் இருக்கலாம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# பூனையும் தமிழும்!



ஆழியாள்

தீபாவளி மேளா நிகழ்வுகளை ஒருங்கிணைக்கும் குழுவில் இந்த வருடம் அங்கத்துவம்வகிக்கும் நண்பியொருவரைச் சந்தித்தேன். அவர் சலித்துக் கொண்டார்,

'இந்தமுறை பொலிவூட் டான்ஸ் போட்ருங்க"

'வித்தியாசமா செந்தில் ராஜலட்சுமிய கூப்பிடலாமே"

'செண்டி மேளம் எடுங்களேன், நல்லா இருக்கும்"

"இப்பிடி ஆளாளுக்கு ஐடியா தர்றாங்க, எனக்குப் பெரிய டோச்சரா இருக்கு" - என்றார்.

"டோச்சர்" என்ற சொல்லைக் கேட்டதும், அந்த நண்பியை எங்கள் வட்டாரத்து 'கங்காலின்" பொலிஸ் நிலையத்துக்கே கூட்டிக் கொண்டுபோய் விடலாமா என்று பட்டது.

விளையாட்டில்லை!

Torture என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையாக தமிழில் "சித்திரவதை" என்ற பதத்தைப் பாவிக்கிறோம். அதன் குறைந்தபட்ச - அடிப்படை - வரைவிலக்கணமாக ஒரு உயிரி மீது இன்னோர் உயிரியால் உடல் மற்றும் மன ரீதியாக ஊறுவிளைவிக்கவென்று நிகழ்த்தப்படுகின்ற அசாதாரணச்செயல்களை சித்திரவதை என்கிறோம்.

சித்திரவதை ஒரு அசாதாரணமான ஒரு செயற்பாடு. மேலும் சொல்லப் போனால் அது தண்டனைக்குரிய குற்றமும்கூட .

இப்படியாக வாழ்வின் அசாதாரண-மானதொரு நிலைமையைத்தான் சித்திரவதை குறிக்கிறதே ஒழிய, நம் சராசரி வாழ்க்கை நிலைமைகளை அல்ல. வாழ்க்கையின் சாதாரண நிகழ்வுகளை இப்படியானதொரு வலிய சொல்லால் அடையாளப்படுத்திப் பேசுவதற்கு நாம் எங்கிருந்து கற்றுக்கொண்டிருக்கிறோம் என்று தெரியவில்லை.

"சித்திரவதை" என்று தமிழில் சொல்லும்போது அல்லது எழுதும்போது அந்தச் சொல்லிற்கான முழு அர்த்தமும் தமிழ்மொழியில் உள்வாங்கப்பட்டே பாவிக்கப்படுகிறது. ஆனால் "டோச்சர்" அல்லது "டாச்சர்" என்று தமிழ்ப் பேச்சில் பாவிக்கும்போது அந்தச் சொல்லின் அர்த்தமானது சுருதி குறைந்து, திரிபடைந்து - தொல்லை, அலுப்பு, அரியண்டம், கரைச்சல் போன்ற அர்த்தப்பாடுகளோடு வருகிறது.

ஆளாளுக்கு ஐடியா தருவது நண்பிக்குப் பெரிய தொல்லை அல்லது அரியண்டமாக, அலுப்பாக இருக்கிறது அல்லது கரைச்சலாக இருக்கிறது என்று சொல்லலாம்.

ஆனால் "டோச்சர்" என்று அதைத் தமிழில் சொல்வது அபத்தமாக இருக்கிறது. இந்த இடத்தில் "டோச்சர்" என்ற சொல்லுக்கான பிரத்தியேக அர்த்தம் திரிந்து, வலுவிழந்து போகிறது என்பதோடு இன்னொரு விடயமும் நடக்கிறது. அதாவது, அன்றாட செயற்பாடுகளைத் தூக்கி அப்படியே அசாதாரணங்களின் மீது வைக்கிற அபத்த நாடகமும் மொழியில் நிகழ்கிறது.

ஆங்கிலத்தைப் பொறுத்தவரையில் - அவுஸ்திரேலியாவில் - தொல்லை, அலுப்பு, அரியண்டம், கரைச்சல் போன்ற அர்த்தப்பாட்டோடு வருகின்ற தமிழ்ச் சொற்களுக்கு இணையாக pain in the butt அல்லது pain in the bum என்று பாவிக்கிறார்கள். கொஞ்சம் நாகரீகமா-கச் சொல்வதானால் pain in the neck, pain in the back side என்பர்.

உதாரணமாக -

'He is a pain in the neck' என்பதை 'அவன் ஒரு அலுப்பன்" - அல்லது

'அவனோடு பெரிய தொல்லை" - அல்லது 'கரைச்சல்காரன்" எனவும் -

இன்னும் வெவ்வேறு விதங்களிலும் இடத்துக்குத் தகுந்தமாதிரியும் தமிழில் மொழியாக்கம் செய்யலாம்.

அதே நேரம் 'He tortured the cat' என்பதை 'அவன் பூனையைச் சித்திரவதை செய்தான்" - எனலாம்.

ஆனால், அவன் பூனையை டோச்சர் பண்ணினான் என்று நண்பி பாவித்த தமிழ் அர்த்தத்தில் சொல்வது ஒருக்காலும் பொருத்தமாக இருக்காது. அப்படிச் சொன்னால் 'அவன் அந்தப் பூனைக்கு அலுப்புக் கொடுத்தான்" - என்றல்லவா பொருள் வரும்.

பூனை பாவம்!

தமிழ் அதைவிடப்பாவம்!!

ஏனென்று கேட்பவர்களுக்கு, தமிழ் நாமிருக்கும் காலத்தில் வாழும் மொழி, நம் மொழி அதனால் நாம் அதைப் பேண வேண்டும், அதனைச் சரியான பாவனைக்கு உட்படுத்த வேண்டும் என்பதற்கெல்லாம் அப்பால் ஒன்றைச் சொல்லலாம்.

அதாவது, தமிழ் எம் ஊடாக, எம்மையும் கடந்து, எம் பலநூறு சந்ததிகளூடாகப் பயணித்து, அவர்களையும் கூடக் கடந்து - பல்லாயிரம் ஆண்டுகள் உயிர்ப்புடன் வாழ வேண்டி நிற்கிற செழுமையுடைய மொழி என்பதையே ஒரே காரணமாக முன்வைக்க முடியும்.

# #metoo

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ஒரு பெண்ணை தன் அதிகாரத்தைக் காட்டியோ, பணபலத்தைக் காட்டியோ அவளுடன் உறவுகொள்ள முயற்சிப்பதைப் போல ஒரு கேவலம், அயோக்கியத்தனம், கையாலாகாத்தனம் எதுவும் கிடையாது.

அதிகாரத்தை, பதவியைக் காட்டி படுக்கைக்கு அழைக்கும் கலாசாரத்தை, இன்று இல்லை என்றாலும் ஏதோ ஒருநாள் அம்பலப்படுத்தப்படுவோம் என்கிற பயத்தினால் மட்டும்தான் உடைக்க முடியும். அதற்கு #metoo நிச்சயம் தேவை. நிறைய opportunists, attention seekerfs; இந்த #metooit பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பது உண்மைதான். அதற்காக ஒட்டு மொத்தமாக அதை கேலியோ, கிண்டலோ செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. வன்கொடுமை சட்டத்தை இணையத்தில் இருக்கும் சில எலைட் தலித் போராளிகள் தங்களை விமர்சிப்பவர்களை மிரட்ட பயன்படுத்துகிறார்கள் என்பதற்காக நாம் கோடிக்கணக்கான தலித்துகளுக்கு பாதுகாப்பாக உள்ள அச்சட்டத்தை கேலிக்குள்ளாக்கவோ எதிர்க்கவோ முடியாதில்லையா? அப்படித்தான் இதையும் அணுக வேண்டும்.

இதெல்லாம் ஒருபக்கம் இருக்க, சின்மயி இந்தக் குற்றவாளிகளை வெளிப்படுத்தும்போது எழும் சத்தம், ஸ்ரீரெட்டி வெளிப்படுத்தியபோது எழாமல் இருந்தது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. சின்மயி பாதிக்கப்பட்டவராகத் தெரிகிறார். ஸ்ரீரெட்டியோ வேடிக்கை பொருளாகத் தெரிந்தார். பல யூட்யூப் சேனல்கள் அவரை அழைத்து கேவலமான கேள்விகளைக் கேட்டார்கள். பத்திரிகைகள் மோசமான படங்களைப் போட்டு ஆபாசமாக எழுதினார்கள்.

இதையெல்லாம் எப்படி எடுத்துக்கொள்வது? சின்மயி மேல் கொண்ட பாசமா? ஸ்ரீரெட்டி மேல் கொண்ட வெறுப்பா? வைரமுத்து மேல் உள்ள வெறுப்பா? லாரன்ஸ் போன்றவர்கள் மேல் உள்ள பாசமா? #Metoo என்னும் மிக நியாயமான, தேவையான விஷயத்திற்கு குரல் கொடுப்போரே இவ்வளவு prejudiced ஆக இருப்பது எவ்வளவு பெரிய கேவலம்? இங்கே பாதிக்கப்பட்டவர்களுக்குக்கூட ஒரு lobby தேவைப்படுவது எவ்வளவு அசிங்கம்? அதுவும்போக, சின்மயியை கேள்விக்குள்ளாகின்றவர்கள், ஒரு இணைய பயன்பாட்டாளரை சிறைக்கு தள்ளமுடிந்த சகலபலம் பொருந்திய சின்மயியின் இந்த காலதாமதமான புகாரை கேள்விக்கு உட்படுத்தினார் என்பதற்காகச் சுபவீ மீது தான் எத்தனை எத்தனை தாக்குதல்கள், அவதூறுகள்? இதைத்தான் நான் முற்போக்கு ஃபாசிசம் என்கிறேன்.

இந்த உள்ளடி அரசியலும், partial அணுகுமுறையும் இருப்பதனால்தான் இந்தியாவில் முன்னெடுக்கப்படும் பல நியாயமான - தேவையான - விஷயங்கள்கூட வலுவின்றி காணாமல்போகின்றன.

அதேநேரம் எந்த சூழலிலும், எந்த ஒரு நாளிலும் எது எதற்கு எந்த அளவில் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பது முக்கியம். நமக்கேற்படும் பிரச்சினைகள் எல்லாமே நாம் நமது முக்கியத்துவங்களை மாற்றி வைத்திருப்பதனால்தான்.

வெள்ளத்தைப் பற்றி பேச வேண்டிய நேரத்தில் "பீப் சாங்" பற்றி பேசுவோம்.

ரஃபேல் ஊழலைப் பற்றி பேச வேண்டிய நேரத்தில் "உம்முனு கம்முனு ஜம்முனு" பத்தி பேசுவோம்.

நிர்மலாதேவியின் #Metooவில் பல அப்பாவி மாணவிகளின் #Metooவும் சம்பந்தப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு #Metooக்களுக்கும் காரணம் என கைகாட்டப் படுகிறவர்கள் நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். இந்த #Metooக்களைப் பற்றி பேசினாலே கைது என்ற அளவில் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என பதறுகிறார்கள். இது நாட்டுக்கும், சமூகத்திற்கும் கண்முன் இருக்கும் ஆபத்து.

இப்போது நிர்மலா தேவி Metoo மட்டுமல்ல பல மோசமான பிரச்சினைகள் தமிழ்நாட்டை சூழ்ந்திருக்கின்றன. மக்களிடம் கருத்து கேட்மாலேயே கேஸ் பைப் லைன் பதிப்பது, ரோடு போடுவது உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தலாம் என அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இது மாபெரும் சர்வாதிகார போக்கு. நாம் இந்த நாளில் இதைக் கண்டிக்காமல், இதைப் பேசாமல் வேறு எதையோ பேசிக்கொண்டிருக்கிறோம்.

வைரமுத்து குற்றவாளி என்றால் சின்மயி தாராள-மாக அம்பலப்படுத்தட்டும். தண்டனை பெற்றுத் தரட்டும். ஆனால் சின்மயி போல சகலபலம் பொருந்தியவர்களாக இல்லாத அப்பாவி மாணவிகள் பல்லாயிரம் பேர் இருக்கிறார்கள். இன்னொரு நிர்மலா தேவிக்கு ஒரு Metoo ஏற்பட்டு, அந்த Metoo இந்த மாணவி-களைத் தாக்காமல் இருக்க நாம்தான் பேசவேண்டும். இல்லையென்றால் இந்தியாவில் #Metooவும் இன்னொரு சைவ உண்ணிகள் சங்கமாக சுருங்கித்தான் போகும்.


20 ஆண்டுகளைக் கடந்து புதிய ஒலித்தரத்தில் உலகெங்கும் பரந்து ஒலிக்கிறது

உலகத்தமிழரின் உரிமைத் தோழன்

இன்பத்தமிழ் ஒலி

24 மணிநேர தமிழ் ஒலிபரப்புச் சேவை

Mobile App

TUNE IN

Inbathamil

www.inbathamil.com

இணைய வானொலிப் பெட்டிகள்



02-9798 2993

02-8542 2016

0451 051 767

0425 324 953

inbathamil@gmail.com

inbathamiloli

Inbathamil Studio
2/251 Liverpool road,
Ashfield - NSW2131,
Australia

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட இணைப்புச் சந்தா
$159

புதுப்பித்தல்
$129

SET TOP BOX INCLUDED



50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்


NOW AVAILABLE ON LYCATV

SUN NXT + TENTKOTTA + EROSNOW

SALES
0470 030 300 | 0470 216 619

CUSTOMER SERVICE
02 8072 7002

www.lycatv.tv



# புலம்பெயர்ந்த நாட்டில் புலிக்கொடிக்கு வந்த புதிய பிரச்சினை?







●லண்டனிலிருந்து நந்தன்

பிரித்தானியாவுக்கு கடந்த மாதம் வருகை தந்திருந்த இலங்கையின் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கபிரபல்யமானOxford Union மண்டபத்தில் முக்கிய விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார். இந்த நிகழ்வு யூனியனுக்கு உள்ளேநடைபெற்றுக்கொண்டிருந்தவேளை, புலம்பெயர்ந்த தமிழர்களால் அந்த மண்டபத்துக்கு வெளியே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் ஏந்திக்கொண்டுநின்ற கொடி பற்றி விசாரித்த Thames Valley பொலிசார், புலிச்சின்னம்பொறித்த கொடியினை விநியோகித்தவர்கள் என நான்கு பேரை கைது செய்தனர். பயங்கரவாதத்தடுப்பு சட்டத்தின் கீழ் இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கபட்டிருந்தது. நால்வரினதும் வதிவிடங்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரால் சோதனை உட்படுத்தப்பட்டன. 24 மணி நேர தடுப்பிற்கு பின்னர், தொடர் கண்காணிப்புக்குரிய நிபந்தனையின் கீழ் இவர்கள் நால்வரும் விடுவிக்கபட்டுள்ளனர்.

இதேபோல, இலங்கையின் வடமாகண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் பிரித்தானியாவருகையின்போதும்ஏற்பாடுசெய்யப்பட்ட கூட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சிலர் லண்டன் மெட்றோ பொலிட்டன் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

பிரித்தானியாவில் புலம்பெயர் தமிழர்கள் இவ்வாறான போராட்டங்களில் ஈடுபடுவது ஒன்றும் புதிய விடயமல்ல. புலிச்சின்னம் பொறித்த கொடியினை பாராளுமன்ற முன்றலில் ஏற்றி பல போராட்டங்களும் கூட்டங்களும் முன்னர் நடைபெற்றிருக்கின்றன. லண்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பாக போராட்டங்கள் நடைபெறும்போதெல்லாம் இலங்கை அதிகாரிகளால் பொலீசிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும்இவ்வாறானகைதுகளும்கெடுபிடிகளும் இடம்பெற்றதில்லை.

ஆனால், இப்போது தீடீரென்று பொலிசார் மதம் பிடித்து நிற்பதற்கான காரணம் வேறுவகையில் பெரும்பூதமாக கிளம்பியிருக்கிறது.

கடந்தவருடத்தின்இறுதியில், Birmingham, Coventry மற்றும் Leicester ஆகிய நகரங்களில்உள்ளசீக்கிய மக்களின் வீடுகள் மற்றும் வேலைத்தளங்கள் ஆகியவை பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிசாரால் அதிரடி சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சீக்கிய மக்களின் உரிமைகளுக்காக போராடும் Jagtar Singh Johal இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் கைது செய்யப்பட்டதை தொடர்ந்தே இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பிரித்தானிய சீக்கிய மக்கள் பேரவை தெரிவித்திருந்தது. மேலும், பிரித்தானிய பொலிஸ் இந்திய அரசின் அறிவுறுத்தல்களுக்கு அடிபணிந்து வேலை செய்கின்றனர் என்று கேலி செய்து அறிக்கையும்வெளியிட்டிருந்தனர்.

அப்படியானால், Jagtar Singh Johal என்பவர் யார்? அவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டதற்கு லண்டனில் ஏன் பொலீஸார் பதற்றப்படவேண்டும்? தேடுதல் நடத்தவேண்டும்?

காரணம் உள்ளது.

ஒருகாலத்தில், ஈழத்தமிழர்களுக்கு இடம்பெற்ற அதே பிரச்சினைதான் இவர்களுக்கும்.

இந்தியாவில் சீக்கியர்களின் தாயகத்துக்காக ஆயுதம் ஏந்திப்போராடும் “காலிஸ்ரான் விடுதலை இயக்கம்” எனப்படுவது இந்திய அரசினால் தடைசெய்யப்பட்டதொரு அமைப்பாகும். புலம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான சீக்கிய மக்கள் இன்னமும் இந்த தனித் தாயக்கோரிக்கைக்கு ஆதரவளித்துக்கொண்டுதானிருக்கிறார்கள். மட்டுமல்லாமல், வெளிப்படையாக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் ஆகியவற்றை மேற்கொண்டு தங்களின் கோரிக்கையை வலியுறுத்தியும் வருகிறார்கள்.

இவ்வாறான, புலம்பெயர்ந்த சீக்கிய செயற்பாட்டாளர்தான் Jagtar Singh Johal. இந்தியாவில் பிறந்தாலும் தற்போது பிரித்தானிய குடியுரிமையைப் பெற்றுள்ளவர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் இவர் தனது திருமணத்துக்காக பஞ்சாப் சென்றிருந்தார். திருமணம் முடிந்த அடுத்த வாரம் தனது மனைவியுடன் அங்காடியொன்றில் பொருட்கள் வாங்கிகொண்டிருந்தபோது அங்கு வெள்ளை வானில் வந்த சிலர், அவரது கண்களைக்கட்டி குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு போய் வாகனத்தில் போட்டு கடத்திச் சென்றுள்ளார்கள்.

பின்னர், அவர் பஞ்சாப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. Jagtar Singh Johal ஆயுதம் ஏந்திப்போராடும் பயங்கரவாத அமைப்பான காலிஸ்ரான் விடுதலை இயக்கத்துக்கு நிதியுதவி வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்றும் பஞ்சாப் இந்துத் தலைவர் ஒருவரின் படுகொலையுடன் தொடர்புடையவர் என்றும் பஞ்சாப் பொலிஸார் பயங்கரவாதக்குற்றச்சாட்டுக்களை சுமத்தி வழக்கு பதிவு செய்துவைத்திருக்கிறார்கள்.

Jagtar Singh Johal இற்றைவரைக்கும் சுமார் 55 தடவைகள் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டு மீண்டும் தடுப்புக்காவலுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறாரே தவிர, பிரித்தானிய அரசு எத்தனையோ கோரிக்கைகளை முன்வைத்தும்கூட அவர் விடுவிக்கப்படவில்லை. அவர் தடுப்புக் காவலில் கொடிய சித்திரவதைகளை அனுபவிப்பதாக எத்தனையோ அமைப்புக்கள் ஆதாரத்துடன்கூடிய அறிக்கைகளை விட்டிருக்கின்றன. ஆனால், இன்றுவரைக்கும் இந்திய அரசு மேற்கொண்டிருக்கும் இந்த தான்தோன்றித்தனமான - மிலேச்ச செயலை யாரும் தட்டிக்கேட்கவோ - தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பிரித்தானிய பிரஜைக்கு நீதியைப்பெற்றுக்கொடுக்கவோ எவராலும் முடியவில்லை.

இந்த சீக்கிய மக்களின் தேசிய கோரிக்கை பஞ்சாப் பிராந்தியந்தில் வலுப்பெற்று வருவதற்கு பிரித்தானிய மற்றும் கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் சீக்கிய சமூகம்தான் முக்கிய காரணம் என நரேந்திர மோடி அரசு வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டி இருந்தது.

இறுதியாக, இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி பிரித்தானிய வந்திருந்தபோது அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது வெஸ்மினிஸ்டர் சதுக்கத்தில் ஏற்றப்பட்டிருந்த இந்தியக்கொடி ஆர்ப்பாட்டக்காரர்களால் இறக்கப்பட்டு எரிக்கப்பட்டது. இந்தச்சம்பவத்தின்போது போராட்டக்காரர்களை முடக்குக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என பிரித்தானிய அரசினை கடுமையாக சாடியிருந்து இந்திய அரசு.

உலகெங்கிலும் நிகழும் போராட்ட சக்திகள்மீதானஒடுக்குமுறையின்தொடர்ச்சியாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. இலங்கை, இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இது அரசு வன்முறையாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஐரோப்பிய நாடுகளிலும் போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு அரசுகள் தமது அதிகாரங்களை மிலேச்சதனமாக பயன்படுத்தியமையை ஸ்பெயினின் கற்றலோனியா மற்றும் வடஅயர்லாந்தில் நடைபெற்ற சம்பவங்கள் எடுத்து காட்டுகின்றன.

பிரித்தானியாவில் எதிர்கட்சி தலைவராக ஜெர்மி கோர்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட எழுச்சியானது முதலாளித்துவ சக்திகளை ஆட்டம்கொள்ள வைத்துள்ளது. “பிராக்சிட்” முன்னேடுப்புக்கள் ஆளும் தரப்பான கன்சவேர்ட்டிவ் கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்தி உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் போராட்ட சக்திகள் மக்களிடையே பலம்பெற்றுவருவது ஆளும் தரப்புக்களுக்கு பெருந்தலைவலியாக உள்ளது. நிலைமையை தமது கட்டுக்குள் கொண்டு வருவதற்கு இன்றைய பிரித்தானிய அரசு பகீரதப்பிரயத்தனம் செய்துவருகிறது. ஆம் அரசு தன் கடமையை செவ்வனவே செய்யும்.

இம்மாதிரியான சூழ்நிலையில், புலம்பெயர்ந்த தமிழர்கள் என்ன செய்யப்போகிறார்கள், உலகளாவிய ரீதியில் போராட்டங்களை ஒரேயடியாக ஒரு தராசில் போட்டு நிறுத்து ஒடுக்கும் இந்த அடக்குமுறைக்கு எதிராக புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் வைத்திருக்கும் வியூகம் என்ன? ■

ஆஸ்திரேலியா

# எதிரொலி

ETHIROLI

நவம்பர் 2018 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162


## மாவீரர் வார சிறப்பிதழ்




மெல்பேர்ணிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# மாவீரர் துயிலும் இல்லங்கள்



**மட்டக்களப்பு:**
தரவை
தாண்டியடி
கல்லடி
மாவடி

**கிளிநொச்சி:**
கிளிநொச்சி
முழங்காவில்
வவுனியா:
ஈச்சங்குளம்

**முல்லைத்தீவு:**
முள்ளியவளை
அலம்பில்
ஆலங்குளம்
வன்னி விளான்குளம்
விசுவமடு
இரணைப்பாலை

**அம்பாறை:**
கஞ்சிகுடிச்சாறு

**மன்னார்:**
ஆட்காட்டி வெளி
பண்டிவிரிச்சான்

**யாழ்ப்பாணம்:**
கோப்பாய்
கொடிகாமம்
சாட்டி (வேலணை)
எள்ளங்குளம்
உடுத்துறை

**திருகோணமலை:**
பெரியகுளம்
ஆலங்குளம்
உப்பாறு
தியாகவனம்

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் – உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது – எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் – அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியரசு(சு) என்றிடுவோம் – எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

# தமிழர் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக மாறியுள்ள மாவீரர் வழிபாடு!

"தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்....."

என்றொலிக்கும் இந்தப் பாடலை மாவீரர் நினைவாகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதியபோது, ஒரு காலை வேளையில் கையெழுத்துப் பிரதியாக முதலில் படித்திருந்தேன். அதற்குப் பிறகே இது பாடலாக இசைக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளி மேஜர் சிட்டுவும் வர்ணராமேஸ்வரனும் இந்தப் பாடலைப் பாடினார்கள். கண்ணனும் அவருடைய மகன் முரளியும் இசையமைத்திருந்தனர். இந்தப் பாடல் எழுதப்பட்ட காலத்தில் மாவீரர் வழிபாடும் சுடரேற்றுவதும் நவம்பர் 27 நள்ளிரவு 12 மணிக்கே நடந்தன. அதனால், இந்தப் பாடலின் இரண்டாவது சரணத்தில் உள்ள வரிகள் -

"நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் – உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்.."

என்றிருந்தன.

பிறகு சுடரேற்றும் நேரம் நவம்பர் 27 மாலை 6.05க்கு மாற்றப்பட்டது. விடுதலைப் புலிகளின் போராளியான லெப் சங்கர் என்ற செல்வச்சந்திரன் சத்தியநாதன் முதன் முதலில் சாவடைந்த - 1982.11.27 மாலை 6.05 என்ற - நேரத்தையே மாவீரர் வணக்கத்துக்குரிய நேரமாகப் புலிகள் அறிவித்தனர். சங்கர் சாவடைந்து, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகே மாவீரர்நாள் என்ற நினைவு கூரல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்திய அமைதிப்படைகளுடன் புலிகள் போரிட்டுக் கொண்டிருந்த 1989 இல் புலிகள் தீவிர முற்றுகைக்குள்ளாகியிருந்தனர். அந்த நாட்களில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது. இளைஞர்கள் ஊர்களில் இருக்க முடியாதென்ற நிலை. இதனால் பலரும் வெளிநாடுகளுக்குப் பறந்தனர். இன்னொரு தொகுதியினர் காட்டில் புலிகளைத் தேடிப் போனார்கள். காடு புலிகளால் நிறையத் தொடங்கியது. போர் உக்கிரமடைந்தது. இழப்புகளும் அதிகமாகிக் கொண்டிருந்தன. இந்த நிலையிலேயே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், மாவீரர்நாளை அனுஸ்டிப்பதற்கு முடிவெடுத்தார். இதற்குக் காரணம், விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்தவர்களின் நினைவுகளைப் போற்றவும் அதற்குரிய குடும்பத்தினரின் உளநிலையை ஆற்றுப்படுத்தவுமே.



கருணாகரன்

விடுதலைப் போராட்டமானது எதிர்பார்க்கப்பட்டதற்கும் அதிகளவிலான உயிரிழப்பைச் சந்திக்கத் தொடங்கியிருந்தது. யுத்தம் விரிய விரிய இழப்புகளின் தொகையும் கூடியது. இது சமூகத்திலே பெரும் உளத்தாக்கத்தை உண்டாக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியது. "இந்த நிலை நீடித்தால், ஒவ்வொரு வீட்டிலும் சாவையே எதிர்கொள்ளவேண்டி நேரிடும் என்ற எண்ணம் - அச்சம் - மக்களிடத்திலே உருவாகி, எதிர்மறையான நிலைமைகளை உண்டாக்கும். அது பெரியதொரு சவாலாகவே மாறக்கூடும்" என்று புலிகள் கருதினர். இதனால், "போராடிக் களத்தில் வீழ்கின்ற போராளிகள் உன்னதமான இலட்சியத்துக்காக மரணித்தவர்கள். அவர்களுடைய வாழ்வும் மரணமும் மகத்துவமானது. வரலாற்றுச் சிறப்புக்குரியது. அவர்களுடைய மரணம் புகழ்மிக்கது, புனிதமானது" என்ற விடயங்களை உணர்த்தக்கூடிய வகையில் மாவீர் நினைவு கூரல் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்குப் பிறகு, ஒவ்வொரு போராளியும் தன்னுடைய சாவுக்கு ஒரு அர்த்தமும் மகத்துவமும் இருப்பதாகக் கருதத் தொடங்கினர். உயிரையும் விட உன்னதமான ஒரு காரியத்துக்காக மரணத்தைச் சந்திப்பது மகத்துவமானது என்ற எண்ணம் போராளிகளிடத்திலே உருவானது. இதேபோன்ற இன்னொருவிதமான உணர்நிலை மக்களிடத்திலும் ஏற்பட்டது. தங்கள் பிள்ளைகளும் சோதரரும் பெறுமதியான காரியங்களுக்காகவே மரணத்தை ஏற்கின்றனர். அவர்களுடைய சாவு சமூகத்தினால் மதிக்கப்படுகிறது. வரலாற்றுப் பெறுமதிமிக்கது. அவர்கள் ஒரு புனிதப்போராட்டத்திலே வரலாற்றைப் படைக்கும் மாவீர்கள் என்ற எண்ணம் உண்டானது.

இதைப் பின்னாளில் ஒழுங்கு முறைப்படுத்தி, ஒரு கட்டமைப்பாக்கி, தமிழ்ச்சமூகத்தின் மனதில் ஆழப் பதிந்த பண்பாடாக்கினர் விடுதலைப்புலிகள். இதற்காகப் பின்னாளில் அவர்கள் நடுகல் முறையை நடைமுறைப் படுத்தினர். இதற்காகத் தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேடிய பயணங்கள் நிகழ்ந்தன.

தமிழ்ப்பண்பாட்டிலும் அதனுடைய வரலாற்றிலும் வீரமும் அதனோடிணைந்த வீர வழிபாடும் வீரர்களுக்கான நடுகல் பண்பாடும் இருப்பதைக் கண்டறிந்த புலிகள் அவற்றை மீளுருவாக்கம் செய்தனர். சமகாலப் போரில் புறநானூற்றுக்காட்சிகள் இணைக்கப்பட்டன. தொடக்க காலத்தில் விடுதலைப்புலிப் போராளிகள் சாவடைந்திருந்தால், அந்த உடல் அந்தப் போராளியின் குடும்பத்தின் பண்பாட்டுச் சூழலின் அடிப்படையிலேயே இறுதி வணக்கத்துக்குரியதாக்கப்படுவதுண்டு. அவரவர் சார்ந்த மதப் பின்னணியில் அமைந்த சடங்குகளின் அடிப்படையிலேயே அந்த உடல் இறுதிக்குள்ளாக்கப்படும்.

ஆனால், காட்டில் விடுதலைப்புலிகள் இருந்த காலப் பகுதியில் சாவடைந்த போராளிகளின் உடல்கள் மதச் சடங்குகள் எதுவுமே இல்லாமல், புலிகளின் இராணுவ மரியாதையுடன் புதைக்கப்பட்டன. அவ்வாறு புதைக்கப்பட்ட இடங்கள் நினைவிடங்களாகக் கொள்ளப்பட்டு, உரிய போராளியின் நினைவு நாளில் நினைவு கூரப்பட்டது. இதை ஒரு வழிமுறையாகக் கொண்டே, பின்னர் மாவீரர் நினைவிடங்கள் எனப் பொதுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய விதிமுறைகளோடு அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்படியே, மாவீரர் துயிலுமில்லங்கள் உருவாக்கப்பட்டன. மாவீரர் துயிலுமில்லங்கள் உருவாக்கப்பட்ட பிறகு, சாவடையும் போராளிகளின் உடல்கள் வித்துடல்கள் என்று கொள்ளப்பட்டன. சாவடைந்த பிறகு அவர்கள் போராளிகள் என்ற நிலையிலிருந்து மாவீரர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டனர். "வீழ்ந்த வீரர்கள் மண்ணோடு மடிவதில்லை" எனவும் "வீரர்கள் புதைக்கப்படுவதில்லை. மண்ணில் விதைக்கப்படுகிறார்கள்" என்றும் சொல்லப்பட்டன. இதன்படியே பின்னாளில் மாவீரர்களின் உடல்கள் வித்துடல்கள் என்று கூறப்பட்டன. இந்த உடல்கள் விதைக்கப்படுவதாகவும் கொள்ளப்பட்டன. அப்படியே விதைக்கப்பட்ட வீரர்கள் நிரந்தரமாக விழி மூடிக் கொள்ளவில்லை. அவர்கள் துயில்கின்றார்கள் என்றழைக்கப்பட்டது. வீரர்கள் துயிலுமிடம் துயிலுமில்லங்கள் என்றாயின.

இந்த வீர வழிபாட்டைப் பற்றி, போராட்டத்தில் ஈடுபட்டுச் சாவடைந்த போராளிகளுக்குரிய மதிப்பை வழங்குவதைப்பற்றிய ஒரு உரையாடல் 1991 ஒக்டோபரில் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் நடந்தது. கலை, இலக்கியப் படைப்பாளிகளுடனான அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட சிலர் இந்தக் கேள்வியை பிரபாகரனிடம் நேரிலே எழுப்பியிருந்தனர். விடுதலைப்போராட்டத்தில் பல இயக்கங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் சாவடைந்திருக்கின்றனர். அவர்களுடைய சாவுக்குரிய மரியாதையை எப்படி வழங்குவது? அவர்களுக்கான நினைவிடங்களை எப்படி அமைப்பது? எங்கே அமைப்பது? என்ற கேள்விகளாக அவை நீண்டன.

இதற்குப் பதிலளித்த பிரபாகரன் -

"அனைத்து இயக்கப்போராளிகளின் தியாகங்களும் போற்றுதற்குரியவையே. அவர்களுக்கான இடத்தை வரலாற்றில் நிச்சயம் பதியவே வேண்டும். தற்போதைய சூழலில் அதற்கான உடனடிச் சாத்தியங்கள் குறைவாக இருப்பதால், அவர்களை இந்தத் துயிலுமில்லங்களில் நாம் சேர்த்துக் கொள்ள முடியவில்லை. எதிர்காலத்தில் சில பொது இடங்களில் அனைத்துப் போராளிகளுக்குமான நினைவிடங்கள் அமைக்கப்பட்டு, அவர்கள் நினைவு கூரப்படுவார்கள். குறிப்பாக யாழ்ப்பாணக் கோட்டைக்குப் பக்கத்திலே இருக்கின்ற இடத்தை இவ்வாறு அனைத்துப் போராளிகளுக்குமான நினைவுச் சதுக்கமாக மாற்றலாம். அப்படியான திட்டம் எமக்குண்டு" என்றார்.

இப்படியே, உயர்ந்த இலட்சியத்துக்காக தமது உயிரை அர்ப்பணித்தவர்களுக்குரிய மாண்பை மாவீரருக்கு வணக்கம் செலுத்துவதன் மூலம் வழங்க முடியும் எனப் புலிகள் சிந்தித்தனர். இதன்மூலம் அழியாத வரலாற்றைப் படைக்க முடியும் என்று நம்பப்பட்டது. இதை மக்களும் ஏற்று புலிகளுடன் இணைந்து அதைப் பின்பற்றினர். மாவீரரை வழிபடுவது என்பது இன்று தமிழ்ச் சமூகத்தின் பெருந்திரள் பண்பாடாக மாறி விட்டது. அதேவேளை, அது கொண்டுள்ள புகழும் சிறப்பும் நெருக்கடிகளையும் சந்தித்துக்கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியில் தமிழ்ச் சமூகத்தினரும் எதிர்ச்சமூகத்தினரும் இணைநிலையில் பங்கேற்றுள்ளனர் என்பதே வரலாற்றுத் துயர். ■



எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
நவம்பர் 2018

# மலையகம் தந்த மாவீரம்!



ஆர்.சனத்

“நீர் இன்றி அமையாது உலகு
உங்கள் நினைவின்றி விடியாது பொழுது
கல்லறை முன் கைகள் தொழும்போது – நாங்கள்
தமிழர் என்று தலைநிமிர்ந்து கொள்ளும்”

ஆம். மண்டியிட்டு வாழ்வதைவிட, சண்டையிட்டு மடிவதே மேலானது என்பதை உலகுக்கு உணர்த்தியவன்தான் வீரத்தமிழன். அதுமட்டுமல்ல, இறுதிமூச்சு இருக்கும்வரை இலக்கை அடைய தன்மானத்துடன் தளராது போராடுபவன் என்ற பெருமையும் தமிழனுக்கே இருக்கின்றது.

இதை சொல்லளவில் மட்டும் உச்சரிக்காது, செயலிலும் செய்துகாட்டியவர்கள்தான் விடுதலைப்புலிகள். தம்மைக் காப்பதற்காக அவர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. தம் இனத்தைக் காக்கவே களமாடினார்கள். காவல் தெய்வங்களாக வலம் வந்தார்கள். அப்படிப்பட்ட மாவீரர்களை எம் உடலில் இறுதிமூச்சு இருக்கும்வரை எம்மால் மறந்திட முடியாது. மறந்திடவும் கூடாது.

விடுதலைப்புலிகள் என்ற அமைப்பு முப்படைகளுடனும் வீறுநடைபோடுவதற்கு ஒற்றுமையே பக்கபலமாக இருந்தது. அது சிதைவடையத் துவங்கிய பின்னர்தான் தமிழர்களின் ஆயுதப்போராட்டமும் மௌனிக்கத் தொடங்கியது.

தற்போதுகூட ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணராமல் தமிழர்கள் பல்வேறு கோணங்களில்பிரிந்துநிற்கின்றனர். பிரதேசவாதம் பேசுதல், குலபேதம் பார்த்தல், அரசியல் குத்துவெட்டுக்கள் என்ற அசிங்கமான சம்பவங்கள் அனைத்தும் எங்களின் கண்முன்னால் இடம்பெற்றுவருகின்றன. வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களையும், மலையகத் தமிழர்களையும் பிரித்தாளும் சூழ்ச்சி வகுக்கப்பட்டு மிகக்கச்சிதமாக இனவாத அரசினால் அரங்கேற்றப்பட்டுவருகிறது. இந்தப்பிடிக்குள் தமிழர்கள் சிக்கக்கூடாது.

ஈழவிடுதலைப்போராட்டத்தின் வரலாற்றை விரித்துப்பேசுகின்றபோது ஒரு சிலரால் மலையகத்தமிழர்கள் மலினப்படுத்தப்படுவதுண்டு. மலையகத் தமிழர்கள் ஈழவிடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை என்றும் அவர்களுக்கு போராட்டக்குணம் இல்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுவதுண்டு. வீரம் என்றால் என்னவென்றே தெரியாத மலையகத்தவர்கள் கொத்தடிமைகளாக வாழும் கூட்டம் என ஏளனமாக பேசப்படுவதுமுண்டு.

அத்தகையவர்களுக்கு ஈழப்போராட்டத்தில் மலையகத் தமிழர்களின் பங்களிப்பை எடுத்துரைப்பதே இப்பத்தியின் நோக்கமாகும்.

“1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர் தாயகமெங்கும் போர் மேகம் சூழ்ந்து கிடந்தது. தமிழர்களுக்கு எதிரான ஒட்டுமொத்த அடக்குமுறைகளும்சிங்கள இனவாத அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இதனால், ஏற்பட்ட இழப்புகளை வெறும் வார்த்தைகளால் மட்டும் விபரித்துவிடமுடியாது!

வறுமை தலைவிரித்தாடியதால் குடும்பச் சுமையை தாங்குவதற்காக மலைநாட்டிலிருந்து பலர் கொழும்பை நோக்கி புறப்பட்டார். அவ்வாறு கொழும்புநோக்கி புறப்பட்டு வந்தவர்களில் ஒருவன்தான் சுதாகரன். அங்கு கடையொன்றில் வேலைபார்க்கத் தொடங்கினான்.

தினமும் கடைக்கதவு அடைக்கப்பட்ட பின்னர், இரவுப்பொழுதில் கூடவிருப்போருடன் கதைத்து பேசி நேரத்தைக் கழித்துவிட்டு உறக்கத்துக்குச் செல்வதுதான் வழமை.

ஆனால் அன்றுமட்டும் எல்லோரும் வானொலியைச் சுற்றியிருந்து எதையோ கூர்ந்து கேட்டபடியிருந்தார்கள். அன்றைய நாள் பி.பி.சி வானொலியில், செய்தியாளர் ஆனந்தி, தமிழீழத் தேசியத் தலைவரை சந்தித்துப் பெற்ற நேர்காணல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. சுதாகரனும் கூட இருந்தவர்களுடன் இணைந்து தலைவரின் எண்ணங்களை செவிமடுத்தான்.

தலைவர் உதிர்த்த வார்த்தைகள் அவனை மெய்சிலிர்க்க வைத்தன. அன்றுதான் தமிழர்களுக்கென்றொரு தலைமை இருப்பதும், ஒருகட்டுக்கோப்பான விடுதலைப்போராட்டம் நடந்துகொண்டிருப்பதையும் அவன் அறிந்துகொண்டான். அவனது நெஞ்சில் புதிய உத்வேகம் உருவானது. தலைவர் மீதும் விடுதலைப்போராட்டம் மீதும் இனம் புரியாத பற்று அவனுள் கருக்கொண்டது.

அன்றிலிருந்து அவனுள் மூண்ட விடுதலைத் தீ 1994 இல் அவனை தாயகம் நோக்கி நகர்த்தியது. பதுளையில் இருந்த அம்மாவிடம், “கொழும்பில் அடிக்கடி பிடிக்கிறாங்கள் அம்மா, நான் யாழ்ப்பாணம் போறன்” - என்று சொல்லி அம்மாவை சமாளித்துவிட்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்று இயக்கத்தில் இணைந்துகொண்டான்.

இந்தச் சுதாகரன் பின்னர் போராளியாகி களங்களிலே துணிச்சல் மிக்க ஒரு படைவீரனாக மாறினான்.

அது “ஜெயசிக்குறு” படை நடவடிக்கை மூலம் சிங்களப் படைகள் வன்னியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலம். முன்னேறி வரும் சிங்களப் படையை வழிமறித்து மாங்குளத்தில் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆதித்தன் (இயக்கப் பெயர்) அந்தச் சண்டைக் களத்தில் 82 mm எறிகணைச் செலுத்தி ஒன்றுடன் சிங்களப் படைக்கெதிராக சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அந்த மோட்டார் அணியில் பொறுப்பாளனும் அவனே. எத்தகைய நெருக்கடியான சூழல் ஏற்படினும், முடிவெடுத்துச் செயற்படுவது அவன் கையிலேயே தங்கியிருந்தது.

சண்டை கடுமையானதாயிருந்தது. “ஓயாத அலைகள் 2” என்ற பெருந்தாக்குதலை கிளிநொச்சிப் படைத்தளம் மீது புலிகள் மேற்கொண்டிருந்ததால், குறிப்பிட்ட அளவு போராளிகள்தான் அன்றைய சண்டையை எதிர்கொண்டனர்.

சண்டையின் ஒரு கட்டத்தில் புலிகளின் முன்னணி நிலைகளை ஊடறுத்து படைகள் தமிழர் பகுதியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. தொலைத்தொடர்புக்கருவி மூலம் இராணுவம் நிற்கும் நிலைகளைக் கேட்டறிந்து மோட்டார் மூலம் எறிகணைகளை அவன் வீசிக்கொண்டிருந்தான்.

நீண்ட நேரமாகச் சண்டை தொடர்ந்தது. நேரம் செல்லச் செல்ல எறிகணையை வீசுவதற்கான தூரவீச்சு குறைந்துகொண்டே போனது. இந்தத் தரவின் மூலம் இராணுவம் எங்களை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றதென்பதை ஆதித்தன் அறிந்துகொண்டான். அந்தக் களமுனையில் ஒரு நெருக்கடியான சூழல் உருவாகிக்கொண்டிருந்தது. ஆனால் ஆதித்தன் பதற்றப்படாமல் கூடவிருந்த போராளிகளுக்குத் தெம்பூட்டியபடி இடைவிடாமல் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தான். எறிகணை வீச்சுக்கான தூரம் தொடர்ந்தும் குறைந்தபடியிருந்தது.

இன்னும் கொஞ்ச நேரம் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் அவனது மோட்டார் நிலை எதிரியால் முற்றுகையிடப்படும் என்று அவனால் கணிப்பிட முடிந்தது. அப்படி முடிவெடுத்தால் எறிகணைகளை எதிரியிடம் இழக்கவேண்டிய நிலை ஏற்படும். அந்தநேரம் ஆதித்தன் ஒரு அதிரடி முடிவை எடுத்துக்கொண்டான். கடைசியாக மோட்டாரை அழிப்பதற்கு ஒன்றும், தங்களை அழிப்பதற்கு ஒன்றுமாக இரண்டு எறிகணைகளை வைத்துவிட்டு, ஏனையவற்றை எதிரி முன்னேறும் பகுதி நோக்கி விரைவாக அடித்து முடிப்பதென்பதே அந்த முடிவு.

இப்போது எதிரியின் தாக்குதல் இவர்களை அண்மிக்கின்றது. எதிரியின் துப்பாக்கிச் சன்னங்கள் இவர்களின் நிலையை நோக்கியும் சரமாரியாக வரத்தொடங்கியது. மிகக் கிட்டவாக எறிகணைகள் பறந்து வந்து கொண்டிருந்தன.

கடைசியாக 200 மீற்றர் வீச்செல்லைக்கு எறிகணையை அடிக்கும் கட்டளை கிடைத்தது. இராணுவம் துப்பாக்கிச் சண்டைக்கான வீச்செல்லைக்குள் வந்தாலும் அவர்கள் மோட்டார் சூடுகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். இராணுவம் அவர்களைச் சூழ்ந்துகொள்ளும் கணங்கள் அண்மித்துக் கொண்டிருந்தன. ஆனால், பதற்றமில்லாமல் ஆதித்தனின் சுடுகுழல் இயங்கிக் கொண்டிருந்தது.

இராணுவம் இப்போது இவர்களின் மோட்டார் நிலையைக் குறிவைத்து தாக்கத் தொடங்கியது. இத்தனை நெருக்கடிக்குள்ளும் ஆதித்தன் தான் முடிவெடுத்த நிலை வரும்வரை தாக்குதலைத் தொடர்ந்தான். இராணுவத்தின் முற்றுகை வலைக்குள் மோட்டார் நிலை உள்ளாகிக்கொண்டிருந்தது.

ஆதித்தன் நினைத்தபடி எறிகணைகள் அனைத்தும் சுடப்பட்டு விட்டன. இனி, மோட்டாரை தகர்ப்பதற்கான நேரம். அதைவிட மாற்றுவழிகள் இல்லை. நூற்றுக்கணக்கான எறிகணைகளைச் சுட்டதினால் தணல் போலப்பழுத்துப்போயிருக்கும் அந்தஎறிகணைக் குழலைக் கொண்டு செல்வதென்பது சாத்தியமே இல்லாத ஒன்று. அத்தோடு எதிரியால் அவர்கள் சூழப்பட்டுக் கொண்டுமிருந்தார்கள்.

எனவே சுடுகுழலைத்தகர்த்துவிட்டு பின்வாங்குவதென்ற முடிவைத் தவிர மிச்சமாக எதுவுமில்லை. ஆயினும், ஆதித்தன் அப்படிச்செய்யவில்லை. கூட இருந்தவர்கள் எவருமே எதிர்பார்க்காத முடிவை அவன் எடுத்தான். இயக்கம் ஒரு எறிகணை செலுத்தியைப் பெறுவதற்கு எத்தகைய விலைகளைச் செலுத்துகின்றதென்பது அவனுக்கு நன்கு தெரியும். அதனால், அந்த எறிகணைச் செலுத்தியை அவன் இழக்க விரும்பவில்லை.


வெப்பத்தால் தகதகத்துக் கொண்டிருந்த அந்தச் சுடுகுழலை தனது தோளில் வைத்தபடி எதிரிக்கு எதையும் விட்டுவைக்காமல் முற்றுகையை உடைத்து வெளியேறினான் அவன்.

ஆதித்தன் மீண்டு வந்தபோது அவனது சுடுகுழல் பத்திரமாயிருந்தது. அவனது தோள்பட்டை மட்டும் வெந்துபோய் பொக்களம் போட்டிருந்தது.

இப்படி களங்களில் பல சாதனைகளை நிகழ்த்திய வீரன் பின்னர் கரும்புலியாகி விடுதலைப் போருக்குப் பெரும் பலம் சேர்த்து வீழ்த்த முடியாத பெருங்கோட்டையென எதிரி மார்தட்டிய ஆனையிறவை மீட்கும் சமரொன்றிற்கு வலுச்சேர்த்து 25.12.1999 அன்று பாவப்பட்ட மக்களை மீட்கவந்த இயேசுநாதர் பிறந்ததாகச் சொல்லப்படும் நத்தார் நாளில், அடிமைப்பட்ட தன் இனத்தின் மீட்சிக்காகத் தன்னையே கொடையாக்கினான்.

■

# “என் பாடல்கள் எழுப்புகின்ற ஏக்கத்தின் மீளமுடியாத தவிப்பில்தான் வாழ்கிறேன்”



## ஈழத்து இசைக்கோன் கண்ணன் எதிரொலிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி

மாவீரர் துயிலும் இல்லம். எங்கும் அமைதி நிலவுகிறது. உடலங்கள் விதைக்கப்பட்ட அந்த மண்ணில் ஒளி தீபங்கள் ஏற்றுகின்ற தருணத்தில் அந்த இசை, ஒரு தாயின் தாலாட்டாக, - ஆன்மாவின் அரவணைப்பாக - இயற்கையின் தவிப்பாக - மெல்ல எழுகின்றது. அந்தப் பாடல். மெல்ல மெல்ல எழுந்து வானத்தை தொட்டவுடன், பொய்க்காத வானத்தின் திவலைகளாக கூடியிருந்தவர்கள் எல்லோர் கண்களும் பனிக்கின்றன. பாடல் வரிகளும் அதற்கமைந்த இசையும் அன்று கேட்டதைப் போலவே இன்றும் எல்லோர் காதுகளிலும் கேட்டுக் கொண்டே இருக்கிறது. ஆன்மாக்களின் கீதமாய் ஒலித்த அந்த இசையினால் உணர்வுகள் உந்தப்படுவதுதானே நியாயம்.

“தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே....”

அந்தப் பாடலில் கவிஞரின் வரிக்கு வலுவூட்டி, கல் மனங்களையும் கட்டிப்போட்ட அந்த இசையின் நாயகனை ஒரு அனுபவப் பரிமாற்றத்திற்காகச் சந்தித்தோம்.

**வணக்கம் ஐயா. உங்கள் விரல் இசைவுகளிலிருந்து எழுகின்ற சங்கீதம் உங்களை ஈர்த்துக்கொண்டதா? அல்லது அந்த இசையை நீங்கள் வசீகரித்துக் கொண்டீர்களா?**

மொத்தத்தில் இரண்டுமே நடைபெற்றிருக்கிறது. எனது குடும்பம் இசைக் கலைஞர்களாலானது. எல்லோருமே பிறப்பில் இசை ஞானத்தோடு பிறந்தவர்கள். எனது தந்தையும் அவர் தந்தையும் நாடகக் கலைஞர்கள். அதுவும் இசை நாடகக் கலைஞர்கள். ஆதலால் எங்களது வீடு எப்போது பார்த்தாலும் பயிற்சி, ஒத்திகை என்று கலைஞர்களால் சூழப்பட்டே காணப்படும். நான் சிறு வயது முதல் அவர்களோடு பேசிப்பழகியதையும் அங்கு காணப்பட்ட வாத்தியக் கருவிகளை இசைத்துப் பார்த்ததையும் எனது இசைத்துறையின் ஆரம்பம் எனலாம். அத்துடன் இயல்பிலும் எனக்குக் கலை ஆர்வம் இருந்திருக்கிறது. சொல்லப் போனால் இசை ஆர்வம் பிறப்பிலேயே என்னைத் தொற்றிக் கொண்ட விடயம் என்றுதான் நான் சொல்லுவேன்.

பின்பு எனக்கிருந்த இசை ஆர்வத்தில் - இசையை முறைப்படி கற்கவேண்டும் என்ற எண்ணத்தில் - தந்தையைக் காண வருகின்ற கலைஞர்களிடம் ஆரம்பத்தில் இசையின் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டேன். வருகின்ற எல்லோரிடமும் எனது ஐயப்பாடுகளைக் கேட்பேன். அவர்கள் எனது தந்தையிடம் பெருமதிப்புக் கொண்டவர்கள். அதனால் அவர்கள் எனக்குச் சகல விடயங்களையும் சொல்லித் தந்தனர். இராஜலிங்க மாஸ்டர், உடுவில் சண்முகசுந்தரம் என்று பலரிடம் கலையைக் கற்றிருக்கிறேன்.

நான் ஆரம்பத்தில் ஒரு கர்நாடாக இசைக் கலைஞராகத்தான் இசை உலகிற்கு அறிமுகமாகினேன். மேடையிலே இசைக்கச்சேரி செய்ய ஆரம்பித்த நான் படிப்படியாக எனது சுய முயற்சியிலேயேதான் இசை வாத்தியக் கருவிகளை இசைக்கக் கற்றுக் கொண்டேன். அது எனது சுயமுயற்சி என்றதில் எனக்குப் பெருமை அதிகம்.

எனது பதினாறாவது வயதில் இசைக் குழுவை ஆரம்பித்த நான் முதலில் சிறு கச்சேரிகளை செய்யத் தொடங்கி இரசிகர்களது ஆர்வத்தினாலேயே பெரிய கலைஞன் ஆகினேன். உண்மையிலேயே என்னை நிகழ்சிக்கு அழைப்பவர்கள்தான் எனது தாயார் வைத்த செல்லப் பெயரான கண்ணன் என்றதை முன்னெழுத்தாகக் கொண்டு கோஷ்டி என்ற பெயரோடு “கண்ணன் கோஷ்டி” என்று அழைக்கத் தொடங்கினர். மக்களால் தரப்பட்ட அந்தப் பெயரையே எனது இசைக் குழுவுக்குச் சூட்டினேன். எனது நிஜப் பெயர் கோபாலகிருஷ்ணன் என்பது இன்றுவரை யாருக்கும் தெரியாது.

**1970 – 80 க்கு இடைப்பட்ட காலத்தில் தயாரிக்கப்பட்ட பிரபலமான பல ஈழத்து தமிழ் சினிமாக்களில் நீங்கள் பணி புரிந்திருக்கிறீர்கள். அந்த சினிமாப் பிரவேசம் எப்படி நடந்தது? எப்படி சினிமா இசை அமைப்பாளரானீர்கள்?**

அதுவும் எதிர்பாராமல் நடந்தது. அப்போது வருடாவருடம் யாழ்ப்பாணத்தில் தினகரன் விழா நடைபெறும். அதில் வர்த்தகப் பவனி இடம்பெறும். ஒரு வருடம் நானும் எனது கண்ணன் கோஷ்டியை வர்த்தகப் பவனியில் இடம்பெறச் செய்தேன். பல வர்த்தகக் கம்பனிகள் கலந்து கொண்டன. அதில் எனக்கு முதலாவது இடம் கிடைத்தது. அதற்குப் பரிசு வழங்கப்பட்டது. அதை அறிந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பகுதிக்கு அப்போது பொறுப்பாக இருந்த நடராசா அவர்கள் என்னை அழைத்துப் பாராட்டி என்னை ஒரு இசைக் கலைஞராக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் உள்வாங்கிக் கொண்டார். அங்கு பல ஈழத்துப் பாடல்களுக்கு நான் இசையமைத்திருக்கிறேன். அவை இன்றும் ஒலிபரப்பப்படுகின்றன. அத்துடன் பலரது நெஞ்சங்களிலும் இன்னும் - இன்றும் - வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றைவிட பல சிறப்பு நிகழ்சிகளுக்கும் இசை என்னுடையதாக இருந்தது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பிரவேசத்தினூடாகப் பல கொழும்பு தமிழ் மற்றும் சிங்களக் கலைஞர்களின் நட்புக் கிடைத்தது. அதுவே ஏமாளி - கோமாளி, தெய்வந் தந்த வீடு ஆகிய படங்களில் எனக்கு இசையமைப்பாளராக வாய்ப்பைப் பெற்றுத் தந்தது. அத்தகைய படைப்புக்களுக்கூடாக இன, மத ஒற்றுமையைத்தான் அன்று வலியுறுத்தியிருந்தோம். அங்கேயே நேசன் எனக்கு அறிமுகமாகிக் கண்ணன் - நேசன் இசைக்குழு ஆரம்பிக்கப்பட்டு தேசிய மட்டத்தில்பலஇசைநிகழ்ச்சிகள்செய்வதற்கு வழிவகுத்தது. பல மேடை நிகழ்ச்சிகள் எமக்குப் பிரபலத்தைத் தேடித்தந்தன. அந்தக் காலத்தில் இன, மத, மொழி வேறுபாடு இருந்ததாகச் சொல்லமாட்டேன். எல்லோரும் ஒருவரோடொருவர் மிகவும் அன்பாக இருந்ததாகத்தான் ஞாபகம்.

**எப்படி இந்த எழுச்சிப் பாடல்களை உங்களால் இசையமைக்க முடிந்தது? அந்த சந்தர்ப்பம் எப்படி ஏற்பட்டது?**

அது பெரிய கதை. நான் ஒரு இசைக் கலைஞர் என்று *1959* முதல் அறியப்பட்டவன். பின்பு திரைப்படங்களின் மூலமாக என்னையும், எனது இசைப் புலமையையும் எல்லோரும் நன்கு அறிவர். கோயில் உபயகாரர்கள் மற்றும் தனியார் என்று பலர் என்னிடம் வருவார்கள். அதேபோல *1983* க்குப் பிறகு நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது பல விடுதலை இயக்கங்கள் என்னிடம் வருவார்கள். அவர்கள் கேட்டுக் கொண்டதுக்கு இணங்க சில பாடல்களுக்கு இசையமைத்துக் கொடுத்திருக்கிறேன். பின்பு இடம்பெயர்வு ஏற்பட்டபோது நாங்கள் முற்றாக விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்த வன்னிக்குள் இருக்க வேண்டியதாயிற்று. அப்போது அங்கு வழமைபோல என்னிடம் இசையைக் கற்கவெனப் பிள்ளைகள் வருவார்கள். அவர்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். முன்பு போல இயக்க உறுப்பினர்களும் வந்து கேட்டபோது மறுக்க முடியாத சூழ்நிலையில் நானிருந்தேன்.

எனினும் எனது உறவுகளுக்குள்ளும் நண்பர்களுக்குள்ளும் நடைபெற்ற அவலத்தை - அவர்கள் குடும்பங்களில் நடந்த மரணங்களை - அறிந்த குடும்பங்களுக்கு நடந்த பேரிழப்புகளை - என்று நான் பார்த்த, அனுபவித்த சூழல்களின் உந்துதல்களின் வெளிப்பாடும்தான் எனது இசையே ஒழிய வேறு ஒன்றுமில்லை.

நடந்தவைகளை இசைக்கூடாகப் பார்த்தேன். இசையாக வடித்தேன். அதில் ஒரு கலைஞனின் ஆன்மா பேசியது. எனது கைவிரல்கள் தானாக இசைக் கருவிகளை இயக்கிக்கொண்டன. சிலவேளைகளில்இயற்கை எனக்கூடாக சில பதிவுகளை மேற்கொண்டதாகத்தான் நான் உணர்கிறேனே தவிர வலிந்து கட்டாயத்திற்காகவோ, ஒரு எதிர்ப் புணர்வின் சாடலாகவோ நான் அவற்றைப் பார்க்கவில்லை. அவை வெளிப்பட்டதுமில்லை. ஒரு உண்மைக் கலைஞனின் வெளிப்பாடுகள் அப்படித்தானிருக்கும். அப்படித்தானிருக்க வேண்டும்.

ஏனெனில் இசை கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. சில நேரங்களில் கவிஞர்கள் அவர்களை அறியாமலே “வசை” பாடுவார்கள். அது நடக்கும். கலைஞனை அறியாமலே ஒரு பிரக்ஞை பூர்வமாக அது நிகழும். அது பெரும்பாலும் ஏன் நடந்தது? எப்படி நடந்தது என்று அவரைக் கேட்டால் அவரிடம் அதற்குரிய பதில் இருக்காது. அதேபோல மனிதன் ஒரு ஊடகமேயொழிய கலை இயற்கையானது. எந்தச் சூழ்நிலையில் ஒரு இசைக் கலைஞன் இருக்கிறானோ, அதற்கேற்ப ஆன்மாவினால் உணர்வுபூர்வமாகப் பேசப்படுவது இசையாக வெளிப்படும். ஒரு கலைஞன் சூழ்நிலைக் கைதியாகவும் இருப்பான். அது அவரவர் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டது.

**அத்தகைய பாடல்களை அன்று கேட்டபோது அந்தச் சூழலில் அது பொருத்தமானதாக இருந்திருக்கும். பல ஆண்டுகள் கழித்து அவற்றை இன்று கேட்கும்போது என்ன எண்ணுகிறீர்கள்? உங்கள் உள் உணர்வுகள் எதைப் பேசுகின்றன?**

ஒரு செயற்கைச் சூழ்நிலையில் அவை உருவாக்கப்பட்டிருந்தால் காலத்துக்கும் இடத்திற்கும் ஏற்ப உணர்வுகள் மாறுபடும். ஆனால், நீங்கள் ஒன்றை விளங்கிக்கொள்ளவேண்டும். பொதுவிலேயே ஆத்மார்த்தமான படைப்புகள் என்றும் வாழும் தகமையுடையவை. தேவாரங்கள் எப்படி இன்றும் மக்களிடையே நடைமுறையில் இருக்கின்றனவோ எப்படி அவை இன்றும் வாழ்கின்றனவோ அப்படித்தான் ஜீவனுள்ள படைப்புகள் என்றும் வாழும் தகமை பெற்றவை. அதனால்தான் பாரதியார் பாடல்கள் இன்றும் எமக்கு உபயோகப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அந்த அடிப்படையில் இந்தப் பாடல்களை அல்ல அத்தகைய பாடல்கள் உருவாக்கப்பட்ட ராக அடிப்படையிலான எந்தப் பாடல்களைக் கேட்கும்போதும் அந்தப் பாடல்களும் அதை அடியொற்றி நடைபெற்ற நிகழ்வுகளுமே மனத்தில் திரைப்படமாக ஓடி மறைகின்றன. அதுவும் ஒரு கலைஞன் என்ற வகையில் அவற்றினின்று மீள முடியாத தவிப்பையும் என்னால் உணரமுடிகிறது.

**தற்போது இங்கு இசை ஆர்வம் எப்படி இருக்கிறது. முன்பைவிட மக்கள் ஆர்வமாக இருக்கிறார்களா?**

உண்மையைச் சொன்னால் முன்பைவிட இசையைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் குறைந்திருக்கிறது. கலை ஒரு வேடிக்கைப் பொருளாகப்போய்விட்டது. அதில் ஆழமான சிந்தனையும் ஆழமான பக்தியும் ஆழமான உறவும் மக்களிடம் இல்லை. அன்றைய நாட்களில் கோயில்களில் நடக்கும் எமது கச்சேரியைப் பார்க்கவென கூடுகின்ற மக்கள் கச்சேரிக்காகக் காத்திருப்பர். சில சமயங்களில் அதிகாலை மூன்று மணிக்குக்கூட எமது கச்சேரிகள் கோயிலில் நடைபெற்றிருக்கின்றன. மக்கள் கலைந்து போகமாட்டார்கள். அத்தகைய சூழ்நிலைகள் எம்மையும் உற்சாகப்படுத்தியிருக்கிறது. மக்கள் எம்மை அதிகம் மதித்தார்கள்.

தற்போது காணப்படும் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பார்க்கின்றபோது அந்தக் காலத்தில்இது போலஇல்லையேஎன்று வருத்தப்படுவேன். அன்று குறைந்த தொழில் நுட்ப வளத்தைக் கொண்டு எம்மிடமிருந்த புலமை மிக்க மனிதர்களை உள்வாங்கித்தான் தரமான இசையை மக்களுக்கு வழங்க முடிந்தது. தற்போது எதையும் செய்யக் கூடியதுபோல தொழில் நுட்பம் இருக்கின்றபோது மக்கள் மத்தியில் ஆர்வம் குறைந்து காணப்படுவது ஒரு பின்னடைவாகத்தானிருக்கும். இருந்தும், பலர் என்னிடம் இசையைக் கற்றுக் கொள்ள வருகிறார்கள். என்னிடம் வருபவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களை தயார்ப்படுத்திப் பரீட்சைக்கு அனுப்புகிறேன். அவர்கள் சித்தியெய்துகின்றனர். அது எனக்குப் புத்துணர்வைத் தருகிறது. தரமான இசைக் கலைஞர்கள் என்னிடமிருந்து உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அதுவே சான்றாகும்.

எனது ஆத்ம திருப்தியாக எனது பிள்ளைகள் அத்தனை பேரையும் இசையைக் கற்றுக் கொள்வதற்கான சூழ்நிலையை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறேன். அதன்படி அவர்கள் இசையைக் கற்றுத் தேர்ந்து அதில் அவர்கள் திறமையும், புலமையும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். தந்தை என்ற முறையில் அதுவும் ஒரு சாதனை என்றுதான் நான் எண்ணுகிறேன்.

இசையை எல்லோரும் கற்க வேண்டும். அது ஆன்மாவை ஆசுவாசப்படுத்த உதவும். தனிமையைக் கலைக்க உதவும். தன்னைச் சந்தோஷப்படுத்த உதவும். அதே நேரம் மற்றவர்களையும், உங்களைச் சுற்றி இருக்கிற உலகத்தையும் சந்தோஷப்படுத்தலாம். இறைவனே இசைக்கு அடிமையானவன். அந்த இசைக்கு இணையாக உலகில் ஏதும் உண்டோ..?

எம்முள் இருந்த சில எண்ணங்களையும், உணர்வுகளையும் புதுப்பித்துக்கொண்ட சூழலில் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டோம்.

# மாவீரர் வழிபாட்டு நடைமுறைகள்

## இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

“எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக – எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக – அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக – கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக – தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் ( தியாகிகள் ) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

“ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக – விமோசனத்திற்காக – வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்.”





## அலங்காரம் (சோடனை)

வீரச்சாவு, வீரவணக்கக்கூட்டம், துயிலுமில்ல, மாவீரர் விசேடநிகழ்வு, வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல் சிவப்பு, மஞ்சள் நிறங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

துயிலுமில்ல மைதான நடுவில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். பொதுவான ஒருவர் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில்ஒவ்வொருஇல்லங்களிலும், வாசலிலும்மாவீரரின் சுடர்ஒளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலைவிட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழர் தாயகம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழ் மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழர் தாயகமெங்கும் மாவீரர் சுடர்கள் இந் நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீபங்கள் எரியும் போது பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது, விடுதலைப்பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...



“மாவீரர்
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்க்கும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
கொடியது பறந்திட
உயிரினை ஈந்து
உடலை உரமிட்டு
செங்குருதியால்
வரலாறு படைத்து
தமிழர் மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய
வேதங்களாய்
ஈழமண்ணில் புதுவிதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவர்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ் இனவிடிவுக்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீயை தமக்குள்ளே சிறைபோட்டவர்கள் தேசமக்களின்பாசப்பிணைப்புகளுக்காகதமதுபாசங்களைப்பொசுக்கியவர்கள். பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள்.

ஊரெல்லாம் உறங்கும்வேளை உறக்கமின்றி விழித்தவர்கள் எல்லைசுற்றி வேலிச்சிலையாக நின்றவர்கள் தமது மக்களுக்காக கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் நவம்பர் 27

தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அரும்செயல்களும் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் உருவானதுதான் மாவீரர் நாள்.

விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியாக அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூருவதைத் தவிர்த்து விடுதலைப் போரின் முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்த நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாக தேர்ந்தெடுத்து 1989 ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

## மாவீரர் வாரத்தை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது தமிழர் எழுச்சி நாளாகத் தமிழ் மண்ணெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21 இல் தொடங்கி நவம்பர் 27இல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களை அனுட்டிக்கும் முகமாக நவம்பர் 21 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழர் நிலமெங்கும் புனிதப்பட்டு விடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற் படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கிவிடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு தாயகம் புதுப் பொலிவுடன் விளங்கும்.

## நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்

**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி )**

கார்த்திகை 27 அன்று 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும். உயிர்காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி )**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அக வணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச் சுடரேற்றுதல் (6.07)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடர் ஏற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்னால் 5.15 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன்மாவீரர்களின்பெற்றோர், குடும்பத்தினர்அவர்களுக்கெனஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்களில், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒலி,ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.



## நிகழ்வு விதிகளில் அலங்காரங்களும் நிறங்களும்

- சிவப்பு, மஞ்சள், நிறங்களைக் கொண்டும் கறுப்பு கரும்புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம்.

- வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிகளைப பாவித்தல் வேண்டும்.

- மேசைவிரிப்பு, பீடவிரிப்புகளும் சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும். வெள்ளைத்துணி பாவிப்பதை தவிர்த்தல் நன்று.

- இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தோன்றிப் பதிந்து எமது போராட்டத்தின்பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள்
### ஆரம்ப நிகழ்வுகள்

1. பொதுச்சுடர்
2. ஈகச்சுடர்
3. மலர்வணக்கம்
4. அகவணக்கம்

- எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது
- அகவணக்கத்துக்கு நேரம் குறிக்கக்கூடாது.

### தவிர்க்கப்பட வேண்டியவை

1. அஞ்சலி, மௌன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம் - ஒரு நிமிடம் இரு நிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.
2. தமிழரின் கலாசார உடை தவிர்ந்த ஏனைய உடையுடன் வருதல் இயன்றளவில் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. கைத்தொலைபேசி பாவனை துயிலுமில்ல வளாகத்திற்குள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.
4. பணிக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தவிர்ந்த எவரேனும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.
5. மாவீரர்களின் புனிதத்தன்மையைப் பாதிக்கும் வேறு எவ்வகையான செயற்பாடுகளிலிருந்தும் அனைவரும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்**

எமது வடக்கு கிழக்கு இணைந்த தாயக பிரதேசத்தில் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழரின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

எங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளுக்கும் எமது போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழ் மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

# “முதல் மாவீரர் நாள் - சில நினைவுகள்”

நா.யோகேந்திரநாதன்



*1989 நவம்பர் -27*

அது வன்னி மண் தன்னை ஒரு மகத்தான புனிதத்தால் அலங்கரித்துக் கொண்ட நாள். கோணாவில் பாடசாலை மைதானமெங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் காற்றில் பறக்கின்றன. அலங்கார மேடை. அதன் பின் திரையில் பொறிக்கப்பட்ட புலிச்சின்னம். அதன் கீழே மாவீரர் தினம் 1989 எனப் பொறிக்கப்பட்ட பதாதை. ஒரு புனிதம் அந்த மைதானத்தில் மட்டுமல்ல அதன் சுற்றாடலிலும் கோலோச்சி வலம் வருகிறது.

ஆம். அங்கே முதல் மாவீரர் தினத்திற்கான தயாரிப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளிலுள்ள அத்தனை வாடகைக் கார்களும், வான்களும் ஒவ்வொன்றாக வந்து சேர்கின்றன. சகல மின்பிறப்பாக்கிகளும் கொண்டு வந்து இறக்கப்படுகின்றன. எல்லாஒலிபரப்பிகளும்வந்துகுவிந்துவிட்டன. அத்தனை வாகனங்களுக்கும், அத்தனை ஒலி பெருக்கிகளுக்கும், அத்தனை மின்பிறப்பாக்கிகளுக்கும் அங்கு என்ன தான் தேவை வந்து விட்டது?. உண்மையாகவே எல்லாமே பாவிக்க வேண்டிய அளவுக்கு தேவை எதுவுமே இல்லை.

சிலவே போதுமானவை. அங்கே ஒரு தந்திரோபாயம். ஒன்றிரண்டு வாகனங்கள் மின்பிறப்பாக்கிகள், ஒலிபெருக்கிகள் மட்டும் அந்த மைதானத்திற்குள் கொண்டுவரப்பட்டால் அதன் உரிமையாளர்கள் அடுத்த நாளே புலியென்றுநையப்புடைக்கப்படலாம். கைது செய்யப்படலாம். சித்திரவதைக்கு உட்படுத்தப்படலாம், கழுத்து வெட்டப்பட்டு வீதியிலும் வீசப்படலாம்!

அனைவருமே மாவீரர் தின நிகழ்வுக்கு தங்கள் வாகனங்களையும் சாதனங்களையும் கொண்டு வந்து விட்டால் எவரைப் பலியாக்குவது? எவரைப்பிடிப்பது? எவரை அடிப்பது? எவரைக் கழுத்தறுப்பது.?

ஏறக்குறைய இரண்டு மணிக்கே வீதிகளில் நெடுந்தூரத்திற்கு வாகனங்கள் அணிவந்து நிற்கின்றன. ஒலி பெருக்கிகள் கார்களில் கட்டப்பட்டு விட்டன. மின் பிறப்பாக்கிகள் மேடையின் பின் அடுக்கப்பட்டு விட்டன.

அன்று காலையிலே இப்படி ஒரு விழா நடக்கவிருப்பதாக மக்களுக்கு வாய்மொழியாக அறிவிக்கப்பட்ட போதிலும் இரண்டு மூன்று மணிக்கே கால் நடையாகவும் சைக்கிள்களிலும் மக்கள் பெரும் திரளாக கூட ஆரம்பித்துவிட்டனர்.

நாலு மைல் தொலைவில் உருத்திரபுரத்தில் இந்தியப்படை முகாம். எதிர்ப்புறத்தில் ஆறு மைல் தொலைவில் அக்கராயனில் இந்தியப் படை முகாம். இன்னொரு புறத்தில் கிளிநொச்சி நகரில் ஆறு மைல் தொலைவில் இந்தியப்படை முகாம். பக்கத்தில் ஈ.என்.டி.எல்.எவ் முகாமும். மூன்று பக்கங்களிலும் ஆபத்து நாக்கை நீட்டிக்கொண்டு நிற்க நடுவே மாவீரர் நாள் விழா மெல்ல மெல்லப் பிரமாண்டமடைகிறது. இந்தியப்படையோ, ஈ.என்.டி.எல். எவ் குழுவோ வந்தால், அவர்களை எதிர்கொண்டு விரட்டி அடிக்கத் தயாராக விடுதலைப் புலிகளின் படையணி மறைவிடங்களில் காத்திருக்கிறது என்பதை மக்கள் எவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் மாவீரர்களின் மகத்துவம் அவர்களை துணிச்சலுடன் அணிதிரள வைக்கிறது.

மாலையானதும் மைதானமெங்கும் மின்சார ஒளி வெள்ளம் பாய்ந்தது. விழா மாவீரர் வணக்கத்துடன் ஆரம்பமானது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டுவிட்டனர். இன்னும் சிலர் காடுகளுக்குள் போய் விட்டனர். இன்னும் ஒரு பகுதியினர் கொழும்புக்கு தப்பியோடி விட்டனர். இப்படியான நெருக்கடியான நிலையிலும் வன்னி மண்ணிலேயே தலை மறைவாக இருந்து கொண்டு இயக்கப் பணிகளுக்குத் தோள்கொடுத்து வந்த ஆதரவாளர்களின் ஒத்துழைப்பில் இப்பிரமாண்டமான விழா அரங்கேறுகிறது.

மைதானம் நிறைந்த மக்களின் வெள்ளம். உணர்வு பூர்வமான ஒரு சூழல் எங்கும் பரவி ஒரு உன்னதத்தைச் சொரிய வைக்கிறது. அங்கே மாவீரர் துயிலும் இல்லம் இல்லை. ஆனால், மாவீரர்களின் தியாகத்தால் விம்மிப் புடைத்த இதயங்கள் இருந்தன. அங்கே தாயகத்துக்காக உயிர் தந்த தியாகிகளின் கல்லறைகள் இல்லை. ஆனால், அவர்கள் ஒவ்வொருவரையும் காலம் காலமாக நெஞ்சில் நிறுத்தும் நினைவுகள் இருந்தன. நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. மாவீரர் நினைவான பாடசாலை மாணவ மாணவிகளின் ஆடல்கள் பாடல்கள் அரங்கேறுகின்றன.

அடுத்து ‘வானம் பூமியானது. பூமி வானமானது...’ என்ற ஆசிரியர் கணேசனின் பாடல் பாடகர் சாந்தனின் குரலில் செவிகளை நிறைக்கிறது. அடுத்து இந்தியப்படையின் கொடுமைகளை, தேசத்துரோகிகளின் நயவஞ்சகத்தை விளக்கும் சில உரையாடல்கள், தாளலயம் வில்லுப்பாட்டு என நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. இறுதி நிகழ்ச்சியாக நா.யோகேந்திரநாதனின் நாடகம் மேடையேற்றப்படுகிறது. இதில் சிங்கள அரசு எவ்வாறு இந்தியாவைத் தமிழ் மக்களுக்கு எதிரகப் பயன்படுத்துகிறதுஎன்பதையும்,இந்தியப்படை தோற்கடிக்கப்பட்டு விரட்டப்படும் என்பதையும் தேசத்துரோகிகளும் துரத்தப்படுவார்கள் என்பதையும் வெளிப்படுத்திய ஒரு நவீன பாணியில் அமைந்த படைப்பாக விளங்கியது.

மாவீரர்களை நினைவு கூர்ந்து நடத்தப்பட்ட இந்த முதல் நினைவு விழா, பிரமாண்டமான முறையில் அமைந்திருந்ததோடு மக்களுக்கு உணர்வூட்டி எழுச்சிபெற வைத்த ஒரு அரங்காக அமைந்தது. மறுநாள் கிளிநொச்சி நகரில் சிலரை பிடித்து வைத்து “நீ நேற்று கோணாவில் போனனீ தானே?” என்று கேட்டு கோழைத்தனமாக அடித்து துன்புறுத்தினர். ஒரு சில வாரங்களிலே அவர்கள் இந்தியப்படையினரின் பின்னே துண்டைக்காணோம் துணியைக்காணோம் என்று ஓடியதுதான் வரலாறு. மூன்று புறமும் இந்தியப் படையும் தேசத்துரோகிகளும் சூழ்ந்து நிற்க, எந்தக் கொடுமைகளையும் அவர்கள் எந்த நேரத்திலும் செய்யலாம் என்ற நிலை நிலவ இப்படிப் பெருந்தொகையான மக்கள் எப்படி இந்த நிகழ்வில் அணிதிரள முடிந்தது? இவ்வளவு பெரும் துணிச்சல் எப்படி வந்தது? இங்கு தான் மக்கள் சக்தி என்ற அற்புதம் முளைவிட்டு கிளைபரப்பி பெரும் விருட்சமாகிறது.

மக்கள் உணர்வு கொண்டு எழுச்சி பெறும் போது அதை எந்தச் சக்தியாலும் அச்சுறுத்த முடியாது, எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது, எந்த சக்தியாலும் அழித்துவிட முடியாது. இது காலாதி காலமாக உலகம் கண்ட யதார்த்தம். இந்தியப் படையின் அச்சுறுத்தல்களோ மிரட்டல்களோ தியாகி திலீபனின் உண்ணா விரதத்தில் பல்லாயிரம் பேர் கலந்து கொள்வதைத் தடுக்க முடியவில்லை. வெஞ்சினம் கொண்டு விடுதலைக்காக உயிரையும் கொடுப்போம் என்று சபதமிட்டதை தடுத்து விட முடியவில்லை.

இவ்வாறே கோணாவில் முதல் மாவீரர் தினத்தில் பல்லாயிரம் மக்கள் கலந்து கொண்டு உணர்வெழுச்சியில் சங்கமமானதை எந்தக் கொடியவர்களாலும் தடுக்க முடியவில்லை.

இது மட்டுமல்ல, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் இறுதி நிகழ்வுகள் கிளிநொச்சியில் இடம்பெற்றபோது சிறீலங்கா வான் படையின் கிபிர் மிக் விமானங்கள் தொடர்ந்து வட்டமிட்டன. தாழப்பறந்து பயங்கர ஒலி எழுப்பி மிரட்டின. ஆனால் ஒரு குழந்தை கூட அந்த இடத்தை விட்டு அகலவில்லை எந்த ஒருவரும் அஞ்சி ஓடவில்லை. ஆம், வீரச்சாவுகள் எங்கள் மக்களை துயரத்தில் தோய வைக்கின்றன. ஆனால், துவண்டு போக வைக்கவில்லை. துணிச்சல் ஊட்டுகின்றன இதயங்களுக்கு உரமூட்டி எழுச்சி பெற வைக்கின்றன. அவை அச்சத்தைத் தூக்கியெறிந்து ஆக்கிரோசத்தை உருவாக்கின்றன. மக்கள் இதய பூர்வமாக எழுச்சி பெறும்போது அவர்கள் எந்தப் பயங்கரத்துக்கும் துணிச்சலாக முகம் கொடுப்பார்கள் என்பதற்கு வன்னியில் இடம் பெற்ற முதல் மாவீரர் தினம் ஒரு நல்ல உதாரணமாகும்.

# முதலாவது மாவீரர் தின உரையில் தலைவர் சொன்னது என்ன?



இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம். வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல்எமதுவிடுதலைப்போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாராணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள்.

அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்.”

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!.

(1989இல் முதலாமாண்டு மாவீரர் நாள் விழாவில் மேதகு பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியே மேற்படி உரையாகும். அன்று முதல் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையை 2008ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)





# தேசியத் தலைவரின் 20 வருட மாவீரர் நாள் உரைத் துளிகள்!



"பிரபாகரன் தனிமனிதன் அல்ல. ஓர் இனத்தின் பிரதிநிதி. பிரபாகரன் தமிழீழத்திற்கு துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொல்லப்பட வேண்டியவரே"

"இந்தியா ஒரு இயக்கத்தை மட்டும் நம்பியிருக்க கூடாது என்று எண்ணியது. அதனால் எல்லா இயக்கங்களுக்கும் பயிற்சியளித்து தமக்கு ஒத்துப்போகும் இயக்கங்களை பாவித்து ஒத்துவரா இயக்கங்களை அழிக்க எண்ணியது. அங்குதான் இந்தியா தவறிழைத்தது. அதில் எங்களையும் இணைத்துக்கொண்டது"

**- 1989**

"இந்த மண்ணின் மைந்தர்களை பெற்றெடுத்த பெற்றோர்களை நான் போற்றுகிறேன். உங்களுடைய பிள்ளைகள் தமது உயிருக்கும் மேலாக தாய் நாட்டை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை புனித இலட்சியத்திற்காக உகந்தளித்த பெற்றோர்களாகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களுடைய குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமானவர்கள்"

**- 1990**

"நாம் இனத்துவேசிகள் அல்லர். போர்வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாகவோ பார்க்கவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கிறோம். சிங்கள பண்பாட்டை கௌரவிக்கிறோம்"

**- 1991**

"எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் நிதியையும் அள்ளி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கை நீட்டி நிற்கவில்லை. எவரிடம் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்களில் சொந்த கால்களில் தங்கி நிற்கிறோம்"

**- 1992**

"எமது இயக்கம் சமாதான முயற்சிக்கு தடையாக இருந்ததில்லை. சிங்கள அரசுக்கு எத்தனை சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்பு முதல் கொழும்பு வரை பேச்சுக்கு சென்றோம். ஆனால் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியை கைவிட்டு போர்க்களத்தில் தீர்வுகாண விரும்பியது. தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என சித்திரித்துகாட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லை எனபகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது"

**- 1993**

"சமாதான வழியில் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முயற்சிகளை எடுக்கும் எனில் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப்போரட்டத்தின் இன்றைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சி திட்டங்கள் முன்வைக்கப்படுமாயின் நாம் அதனை பரிசீலனை செய்ய தயாராக இருக்கின்றோம்"

**- 1994**

"யாழ்நகரையும் வலிகாமப் பகுதியையும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த மக்களும் சென்ற வரலாற்று நிகழ்வானது அரசின் தந்திர உபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிற்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம் பெயர்வு நிகழ்வு எடுத்துகாட்டுகிறது. ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எவ்விதத் துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம் பெயர்வு உலகத்திற்கு பறைசாற்றியுள்ளது"

**- 1995**

"மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப் பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை"

**- 1996**

"மாவீரரின் வீர வழிபாட்டு மரபானது தமிழினத்தின் விடுதலைஎழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத்துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடு எதிர்ப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச்சிதைத்தழித்த இச்செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன்"

**- 1997**

"எமது மக்களை அரவணைத்து - இணைத்து - வாழவும் விரும்பாமல், பிரிந்துசென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக்கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவேதான், அன்று தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயங்களுக்கு ஏற்ப எமது போராட்ட வடிவங்கள் மாறிய போதும் எமது உரிமைகளுக்கான எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப்போராட்டம் வளர்ந்து விரிந்து இன்று இருதேசங்கள் மத்தியிலான போராக பேயுருவம் பெற்றிருக்கிறது"

**- 1998**

"போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த 'ஓயாத அலைகள் மூன்று; என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது"

**- 1999**

"எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்பு முனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்" **- 2000**

"விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சுக்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடைநீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கைகள் மேலும் வலுச்சேர்க்கும்"

**- 2001**

"தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன"

**- 2002**

"எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதே போன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன"

**- 2003**

"சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை"

**-2004**

"சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்"

**-2005**

"சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழிநடக்கும் உலகநாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்"

**-2006**

"எமது மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமாகத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றனர்"

**- 2007**

தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்" **-2008**



# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

**போரில் உயிரிழந்த தங்களது உறுப்பினர்களை எரிக்கப்போவதில்லை என்றும் புதைக்கப் போவதாகவும் முடிவெடுத்த விடுதலைப்புலிகள் அமைப்பு தொண்ணூறுகளில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. வித்துடல்கள் என்ற பதம் பயன்படுத்த தொடங்கிய இந்த வரலாற்று காலகட்டம் தொடர்பான பதிவு இது.**

வீரமரணமடைந்த புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப் படமாட்டாது. அவைகள் புதைக்கப்பட வேண்டும் என்று நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலை பெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

## போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்று சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாக சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திர பெருஞ்சுடரை ஏற்ற உதவும் நெருப்பு கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான், போராளிகளது உடல்களைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச்சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

## அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாய சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதே என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக - பொக்கிசமாக - இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இது புறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழ நின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும்கூட அப்போராளியை பெற்றெடுத்து சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ அல்லது உடன்பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாதுவிட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப்போகிறோம்?

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகிறோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும் அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான், தனது பிள்ளையின் உடலைப்பார்க்காதுவிட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவிசெய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்கு சென்று அவனது நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால், அந்த சோகத்தை மறைக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாதுதானே?

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்ட காலம்தொட்டு இருந்து வரும் “தகனம் செய்வது” தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழரின் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புற நானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்க போதுமானது.

ஆனாலும், இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொது மக்களுக்கல்ல. எனவே, இங்கே பண்பாட்டு பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன், புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

**நன்றி - விடுதலைப்புலிகள்**

# பேய்களுக்கும் முனிகளுக்குமிடையே பெரிய வேறுபாடில்லை

அறுவடை முடித்த வயல்கள்
வெறிச்சோடின
ஒரு சிறங்கை மணிகூடக் கிட்டவில்லை
நமக்கு.

காற்று அடித்ததுதான்
எடுத்துத் தூற்றவில்லையே எம் நெற்சூடு.

மழை பெய்தது
எம் தாமரைக்குளத்துக்கு மட்டும்
தண்ணீர் வரவில்லை.

வெளி வீதி சுற்றி
காவடி தோளிருந்து இறங்கும்
நேரம் வந்தாச்சா?

வலிக்கிறது தோள்மூட்டு
வரமேதும் கிட்டவில்லையே நமக்கு.

ஈழத்தமிழர் மீண்டுமொருமுறை
இளிச்சவாயர் ஆனோமா?

பூ மலரும் வடிவு பார்க்க
வாசலிருந்தோம் நம்பிக்கையுடன்.

பூவும் மலரவில்லை
பூ மரத்தின் வேரும் தெரியவில்லை.

நிலவு பார்க்கும் ஆசையில்
இரவெல்லாம் விழித்திருந்தோம்.

நிலவையும் காணவில்லை
விழித்திருந்த இரவையும் காணவில்லை.

பத்து நாள் அலங்காரத்திருவிழா
முற்றுப்பெறுகின்றது.
எஞ்சியிருப்பது கொடியிறக்கம் மட்டுமே.

சிகரங்கள் இறங்குகின்றன.
சின்னமேளங்கள் போய்விட்டன.
தவில்காரரும் புறப்படுகின்றனர்.

காப்புக்கடைகளைக் கலைத்து
கட்டத்தொடங்கியாயிற்று.
சில கடலைக்காரரே மீதி.

இனி அவர்களும் போய்விடுவார்கள்.

எல்லோரும் போகலாம்.
கோவில் வீதிக்குடியிருப்பாளர்கள்
எங்கே போவது?

ஜிகினா வெளிச்சத்தில் குதித்த
அலுப்புத்தீர
ஒரு பகல் உறங்கலாம்
அதன்பிறகு என்ன?

வேள்வி நடத்த கோயிலில்
அலங்கார உற்சவத்துக்கு ஆசைப்பட்டோம்
நடந்தது என்ன?

கூத்து நடந்தது பார்த்துப்
பரவசமடைந்தோம்.
இப்போ கூத்தும் முடிந்துவிட்டது.
எந்த வாழ்வும் கிட்டவில்லயே எமக்கு.

எங்கேனும் சின்னக்கிளைகளில்
அரும்பு கட்டத்தொடங்கினால் போதுமே
ஆதிக்க மாடுகள் அதனை
மேய்ந்துவிடுகின்றன.

அழகிய ஜீவிதத்திற்காக
சின்னக் கூடு கட்டுவோமென
சிட்டுக்குருவிகள் சுள்ளி பொறுக்கினாற்கூட
பருந்துகள் பொறுத்துக்கொள்வதில்லை.
குருவிகளை அடித்து வாயிற் போடுகின்றன.

நம் வயலின் விதைப்புக்கு நாமுழுதாற்கூட
அண்டை வயற்காரன் சண்டைக்கு
வருகின்றான்.

ஈழத்தமிழருக்கு
இது எழுதிவைத்த விதியாச்சு.

எட்டு மூலைப்பட்டம் கட்டி
இரவிலேற்றினோம்.
விடியும்வரை விண்சத்தம் கேட்டது.
பட்டத்தைத்தான் எவரும் பார்க்க
முடியவில்லை.

சப்த நதிகளும் கூடி



அட்ட திக்கு யானைகளும் கூடி
ஊரையடித்து உலையிற்போடும்
பகாசுரர்களும் கூடி
எமக்கு பந்தி பரிமாற வந்தனர்.
பாயாசம் என்றனர்.

வாழையிலை விரித்து வரிசையிலிருந்தோம்
என்ன விழுந்தது இலையில்?

ஆக்கித் தந்ததும் ஒன்றுமில்லை.
தூக்குச் சட்டியிலும் ஒன்றுமில்லை.

மின்சாரம் வந்தது,
எரிசாராயம் வந்தது,
டயலொக் வந்தது,
மொபிற்றல் வந்தது,
அங்கர் பட்டரும்
மக்கி நூடில்சும் வந்தது,

பிதாமகன் வந்தான்,

போய்சும் வந்தார்கள்
எமக்கான விடுதலைதான் வரவில்லை.

வீதியெங்கும் விளம்பரப் பலகையும்
காதிலெங்கும் சமாதானப் பாடலுமாய்
விளங்குகின்றன நம் ஊர்கள்.

ஈழத்தமிழனே!
பட்டும் பட்டும் உனக்கேனடா புத்தி
வரவில்லை.

ஒன்றில் போராடு
இல்லையேல் சரணாகதி அடைந்துவிடு.
இரண்டுக்குமிடையில் நின்று
நசிந்து விடாதே.

உன் தாகத்துக்கு நிறைவான தண்ணீரை
எவரும் தரமாட்டார்கள்.
வாய் நனைக்க மட்டுமே வார்ப்பார்கள்.
நீ சொண்டைத்தான் நக்க வேண்டி வரும்.

பேய்களுக்கும் முனிகளுக்குமிடையே
பெரிய வேறுபாடுகளில்லை
ஒன்று கடிக்கும்
மற்றது அடிக்கும்.

எதிரே வருபவன் பலவானென்றால்
இரண்டுமே ஒன்றாகிவிடும்.

எரிகிற கூரையில் கொள்ளியெடுத்து
சுருட்டுப் பற்றவைத்தானாம்
கிழவனொருவன்.
பக்கத்து வீட்டுக்காரனின் கதைதான்.
எமக்குப் பழைய கதையாச்சே.

உலகெங்கும் டெங்குக் காய்ச்சலாம்
அவரொருவர் நுளம்புநாசினி விசுறுகின்றார்.

இறுதியில் நுளம்பு இங்குதானென்று
மகாபிரபு மருந்துடனும் வரலாம்..

வருபவர்கள் எல்லோரும் வரட்டும்.
முதலில் நீ முதுகிற் கூனலில்லாமல்
முற்றத்தில் நில்

உடுக்கடித்து ஆடப் பழகு.
தலையில் தலைப்பாகை கட்டு.
நறுக்குத் தெறித்தாற் போல
உன் வாயிலிருந்து வார்த்தைகள் வரட்டும்.

நீ திரும்பினால்
திசைகளும் உன்னோடு திரும்பட்டும்.

நீ பாடினால்
பட்ட மரத்திற்கூடப் பால் தெறிக்கட்டும்.

மழையுன் தோளின் கீழேயே
பெய்யும்படியாய்
தலையை முகிலுக்கு மேலே வைத்திரு.

இத்தனைபேரையும் குழியில் விதைத்தது
தேர்தலில் நிற்க அல்ல.

தெருக்களைச் செப்பனிட அல்ல.
மாகாண சபையின் நிர்வாகமெடுத்து
மதவு கட்ட அல்ல.

வேண்டும் எமக்கு கூண்டில்லா வாழ்வு.
வேண்டும் எமக்கு விடுதலைக்கான சிறகு.

**– புதுவை இரத்தினதுரை**




கனடாவிலிருந்து
நடராஜா முரளிதரன்

# ஒன்ராறியோ தேர்தல் முடிவுகள்: தமிழர்கள் அடைந்தது என்ன?

கனடாவின் ஒன்ராறியோ மாநகர சபை, நகரசபைத் தேர்தல்கள் கடந்த மாதம் நடைபெற்று முடிந்துள்ளன. இது கட்சி அடிப்படையில்வேட்பாளர்கள்போட்டியிட்ட தேர்தல்கள் அல்ல. கூட்டாட்சிக் கோட்பாடு நடைமுறையில் உள்ள கனடாவில் மாநகரசபைகளுக்கு, நகரசபைகளுக்கு பல அதிகாரங்கள் உள்ளன. அதனால் இத் தேர்தல்களுக்கு ஒரு வகை முக்கியத்துவம் உண்டு.

குறிப்பாக நகரங்களில் மக்கள் தொகை ஆண்டு தோறும் மிகப் பெரியளவில் அதிகரிக்கின்றது. அதனால் மக்களின் தேவைகளும், பிரச்சினைகளும் எல்லை மீறுகின்றபோது சிக்கல்கள் எழுகின்றன. அவற்றைத் தீர்த்து வைக்கின்ற கடப்பாடு கொண்டவையாக மாநகரசபைகள், நகரசபைகள் ஆகியவை காணப்படுகின்றன. எனவே அவற்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் அங்கத்தவர்கள் திறமை படைத்தவர்களாக இருக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள்.

உதாரணமாக, ரொறொன்ரோ மாநகரத்தை எடுத்துக்கொள்வோம். இந்த நகரத்துக்கு உணவுச்சாலைகள், வதிவிடங்கள், பாதுகாப்பு, மின்சார விநியோகம், நீர் வழங்கல், போக்குவரத்து, பூங்காக்கள், ஏரிகள், வீதிகள், கழிவுப் பொருளகற்றல் எனப் பல்வேறு தேவைகள் உள்ளன. அவற்றை மாநகரசபை நிர்வாகமே கையாளுகின்றது. ஆகவே மாநகரசபை உறுப்பினர்களும், மேயரும் அவற்றைச் செம்மையாக நெறிப்படுத்தி உரிய முறையில் நிதியையும், சேவையையும் வழங்குதல் அவசியமானது.

முப்பது இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட ரொறொன்றோ 45 உறுப்பினர்களைக் கொண்ட மாநகரசபையாக இதுவரை காலமும் இருந்தது. இன்னும் இரண்டு அங்கத்தவர்களை இம்முறை தேர்தலில் அதிகரிப்பதற்கான யோசனையும் முன்மொழியப்பட்டது. ஆனால் அண்மையில் இடம்பெற்ற ஒன்ராறியோ மாகாண அரச தேர்தலில் Ford தலைமையில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்த முற்போக்கு பழமைவாதக் கட்சி 25 அங்கத்தவர்களைக் கொண்ட மாநகரசபையாக ரொறொன்ரோ அமைதல் வேண்டுமெனச் சட்டம் இயற்றி அதனை நடைமுறைப்படுத்தியது.

அதனால் ஒவ்வொரு வட்டாரங்களினதும் எல்லையளவு இரட்டிப்பாகியுள்ளது. போட்டிகள் மிகக் கடுமையாக அமைந்தன. ஏற்கனவே மாநகரசபை உறுப்பினர்களாக பல ஆண்டுகள் பணியாற்றிய சிலர் தோல்வியைத் தழுவிக்கொண்டனர்.

சென்றதடவை ரொறொன்ரோ மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோன் ரொறி இம்முறை பெரு வெற்றி பெற்றுள்ளார். கடந்த இடைத்தேர்தலின்போது வெற்றி பெற்றுக் கவுன்சிலரான நீதன் சான் என்ற தமிழர் இம்முறை 25 ஆம் வட்டாரத்தில் வெறும் 154 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப்போயிருக்கிறார். இவரது தொகுதி தமிழர்கள் மிகப்பெருமளவில் செறிந்து வாழும் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

மாநகரசபை, நகரசபை தேர்தல்கள் நடைபெறும்போது கல்விச்சபைத் தேர்தல்களும் ஒன்றாக நடைபெறுவது வழக்கம். மாணவர்களின் கல்வி குறித்த செயற்பாட்டுத் திட்டங்களை இச்சபைகள் உருவாக்குகின்றன. பல்லினச்சமூகங்கள்வாழும் ரொறொன்ரோமற்றும்ஒன்ராறியோவின் மற்றைய நகரங்களில் பெற்றோர்களின் விருப்பங்களை அடிப்படையாக வைத்துப் பாடத்திட்டங்களை, பயிற்சித் திட்டங்களை உருவாக்கவேண்டிய கடப்பாடு கல்விச்சபைக்கு உரியது. ஆகவே கல்விச் சபைகளுக்கான அறங்காவலர்களும் (Trustees) மக்களாலேயே தேர்வு செய்யப்படுகிறார்கள்.

இத்தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் கல்விசார் விடயங்களில் அறிவும், ஆற்றலும் உடையவர்களாக இருப்பதை மக்கள் விரும்புவார்கள். மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகிய முத்தரப்பாருடனும் இணைந்து பணியாற்றவும் அவர்களுக்கிடையே ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான பொறுப்புணர்வும் கல்விச்சபை உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டியதாகிறது.

கடந்த காலங்களோடு ஒப்பிடுகின்றபோது இம்முறை அதிகமான தமிழர்கள் கல்விச்சபைக்கான தேர்தலில் பல்வேறு பாகங்களிலும் போட்டியிட்டார்கள்.

ரொறொன்ரோ கல்விச்சபையில் இம்முறை மூன்று தமிழர்கள் அறங்காவலர்களாக (Trustees) வெற்றி பெற்றுள்ளார்கள். பார்த்தி கந்தவேள், அனு சிறீஸ்கந்தராஜா, யாழினி இராஜகுலசிங்கம் ஆகியோரே வெற்றிபெற்ற தமிழர்கள் ஆவர். இவர்களில் பார்த்தி கந்தவேள் என்ற தமிழர் கடந்த தடவையும் கல்விச் சபை அறங்காவலராகத் தேர்வு செய்யப்பட்டவர். அனு சிறீஸ்கந்தராஜா, பார்த்தி கந்தவேளின் துணைவியாவார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மார்க்கம் கல்விச் சபை அறங்காவலராக மூன்றாவது தடவையாக இம்முறையும் யுவனிதா நாதன் என்ற தமிழ் பெண்மணி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மொத்தமாக, இந்தத்தடவை ஒன்ராறியோ மாகாணத்துக்கான மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை, கல்விச்சபை ஆகியவற்றுக்காக தேர்தல்களில் 29 தமிழர்கள் களம் இறங்கியிருந்தார்கள். அவர்களில் மூன்று தமிழ் பெண்களும் ஆணொருவரும் வெற்றி பெற்றவர்களாகின்றனர். அனைவரும் கல்விச்சபை உறுப்பினர்களாகவே (அறங்காவலர்களாக) வெற்றியைச் சுவீகரித்திருக்கிறார்கள்.

மார்க்கம் நகரசபைக்காக நடைபெற்ற தேர்தலில் ஏழாம் வட்டாரத்தில் இம்முறை ஐந்து தமிழர்கள் போட்டியிட்டிருந்தார்கள். அவ்வட்டாரத்தில் கடந்த மூன்று தடவைகளும் வென்றவர் லோகன் கணபதி என்ற தமிழர். அவர் இந்த வருடம் பழமைவாதக் கட்சியில் போட்டியிட்டு மாகாண ஆளுமன்றுக்குத் தெரிவாகியதால் தனது மகளை (கீத்திகா லோகன் கணபதி) அந்த இடத்துக்கான போட்டிக்காக இறக்கியிருந்தார். மேலும் மலர் வரதராஜா, சோதி செல்லா, இலகுப் பிள்ளை சிறிநாதன், கிளி செல்லையா ஆகியோருடன் சேர்த்தால் ஐந்து தமிழர்களும் அடிபட்டு அப்பத்தை காலித் உஸ்மான் என்ற இன்னொரு வேட்பாளரிடம் பறிகொடுத்தனர்.

கனடாவில் - முக்கியமாக ஒன்ராறியோ மாகாணத்தின் ரொறொன்ரோ பெரும்பாக ஜனநாயக தேர்தல் களத்தில் - தமிழர்கள் பெருமளவில் குதித்திருப்பது குறித்துப் பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. பொதுவாழ்வில் ஈடுபடாதவர்கள், ஒதுங்கியிருந்தோர் எல்லாம் தேர்தல் என்றவுடன் வரிந்து கட்டிக் கொண்டு வந்திருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. தகுதி பெறாதார் போட்டியிடுகிறார்கள் எனச் சொல்லப்பட்டுள்ளது. குடும்பச் செல்வாக்கு, பணபலம், ஆளணி ஆகியவை வாக்குக்கான குதிரைச் சவாரியில் இவர்களை இறங்கவைத்துள்ளன. இவர்களுக்கு ஜனநாயக மரபுகளை தாண்டிய தேர்தல்வெறியையும் ஏற்படுத்திருயிருக்கிறது என்று தமிழர் தரப்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எது எப்படியிருப்பினும் வென்றுவிட்டால் புகழ் பாட ஒரு பெருங் கூட்டம் திரளும்!

**தமிழர்கள் பெருமளவில் குதித்திருப்பது குறித்துப் பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. பொது வாழ்வில் ஈடுபடாதவர்கள், ஒதுங்கியிருந்தோர் எல்லாம் தேர்தல் என்றவுடன் வரிந்து கட்டிக்கொண்டு வந்திருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. தகுதி பெறாதார் போட்டியிடுகிறார்கள் எனச் சொல்லப்பட்டுள்ளது.**

# Blinds Screens Security Doors
*Factory Direct*



**Free Measure & Quotes - Delivery and Install - Servicing all Suburbans**

**OUR SERVICES :**
- PLANTATION SHUTTERS
- TIMBER BLINDS
- SCREEN BLINDS
- VERTICAL BLINDS
- ROLLER BLINDS
- ROMAN BLINDS
- SECURITY DOORS ( All Types)
- FLY SCREENS
- WARDROBE DOORS
- CANVAS AWNINGS
- SPLASH BACKS
- MIRRORS

**Contact - Raja (Roger) Mob: 0411 734 484 Tel: 93 330 770**

Email: galalxyoz@bigpond.com

**GalaxyOZ (PVT) Ltd.** Factory 31/283 Rex Road Campbellfield Victoria 3061



# SAHA SIDDHA
HERBAL TREAMENT AND YOGA THERAPY

**TREATMENTS FOR ALL AILMENTS ARE DONE THROUGH TRIO THERAPHY**
(Herbal Treatment, Yoga & Diet plan)

A healthcare professional with a long track record of successfully diagnosing and treating patients using accurate Siddha (HERBAL) medicines along with therapeutic yoga techniques. A Gold Medallist in Doctor of Siddha Medicine



- Abnormal Menstruation
- Arthritis
- Back and neck pain
- Diabetes Mellitus
- Eczema
- Epilepsy
- IBS
- Hemiplegia
- High Cholesterol
- Hypertension
- Impotence & Infertility

**DR SELVI MANI B.S.M.S, MD, Y.T.O.T**
**SIDDHA (HERBAL), YOGA PHYSICIAN**
**0412618953**
**74 CARLTON ROAD**
**DANDENONG NORTH, VICTORIA - 3175**
www.siddhaherbsaustralia.com.au

- Urinary Tract Infection
- Jaundice
- Mental disease & disorder
- Loss of Memory
- Obesity
- Peptic ulcer
- Prostate Problem
- Sleep Disorder
- Thyroid Problems
- Tonsillitis
- Wart etc...

# CEYLON EXPRESS

## MONEY TRANSFER

- Best Rates Guarantee
- Same Day Bank Transfer
- Responsible Customer Support
- Easy, Quick Internet Money Transfer



127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052

## உங்கள் நிகழ்வுகள் பிரகாசமாக வேண்டுமா?

S&T EVENTS & DECORATIONS

WE PROMISE TO MAKE YOUR DAY THE MOST MEMORABLE AND SPECIAL FROM START TO FINISH...!



Our packages includes everything you will need for your function.
We will have your function organised from start to finish



- Wedding and Reception
- Engagement
- Anniversary parties
- Birthday parties
- Puberty ceremony
- Traditional home functions
- Valaikappu Function
- baby shower
- Mehindi Functions
- Religious Events
- Balloon and flower decoration
- Indoor of outdoor Decorations


**Example : Wedding pachages**

- Mandap
- chair and table setting
- Walkway with pillars and entrance Decoration (Ganesh and Kumbam etc)
- Rangoli Kolam
- Bridal Bouquet
- Kuttu Villaku, Flower plates, Flower Basket, Nirai kudam, Kaamachi Villaku

Extras: Flower Garlands, Cake, Photography

For more information head to our facebook & instagram page or contact us Directly anytime
milpark, melbourne, ABN : 98314136010, suthan : 0415602956
S&T Events And Decorations   st_decorations   umasuthanuma@gmail.com







MATHY FOOD CORNER
Restaurant & Bakery
MATHY FOOD CORNER
RESTAURANT & BAKERY
Experience the taste
of Sri lankan & Indian Food
KOTHU OFFER
3 pm $ 05.00
SUNDAY BUFFET
11am to 3pm $ 14.99
DAILY LUNCH
Monday to Friday
12 to 2 pm $ 05.00
FRIDAY SPECIAL
Village Style Lunch
(Thali) on Banana Leaf
with 7-8 Vege Curries
with Rice
$ 8.00
THURSDAY SPECIAL
Kothu
Choice of Lamb
Chicken
Veg / Egg $ 5.00
Cake Orders will
be Undertaken...
Special orders will
be Undertaken...
Birthday
Wedding
Anniversary
Parties
& Special Occasions..
1/24 Langhorne Street,
Dandenong VIC 3175, Australia.
Tel: +61 3 8753 5751
www.mathyfoodcorner.com.au
LIKE US ON facebook
www.facebook.com/mathyfoodcorner

# நெஞ்செரிச்சல் ஆபத்தானதா?






என் பெயர் தர்ஹினி நான் மலம் கழிக்கும் போது வலி மற்றும் இரத்தக் கசிவு காணப்படுகின்றது. இதற்கு மூலிகை மருத்துவத்தில் தீர்வு உண்டா?

உங்களுக்கு உண்டான பிரச்சினையின் மூல காரணத்தை நீக்கினாலே இந்தப் பிரச்சினையிலிருந்து விரைவில் விடுபடலாம். மலச்சிக்கல் தான் எல்லா விதமான மூல நோக்கும் முதற்காரணி அதனால் தண்ணீரை அதிக அளவில் அருந்துதல், போதுமான நடைபயிற்சி மற்றும் பழங்கள், காய்கறிகளை உணவுப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுதல். இவை அனைத்தும் மலத்தை இலகுவாக்கி வெளியேற்றும். அப்பொழுது தான் மல வாயைச் சுற்றியுள்ள இரத்த நாளங்கள் தேசம் அடையாமலும் இரத்தக்கசிவு இல்லாமலும் மலம் வெளியேறும். மன அழுத்தம் அதிகமானாலோ அல்லது அதிக நேர பயணம் செய்பவராக இருந்தாலோ மலச்சிக்கல் உண்டாகும். நீங்கள் காபி, டீ அருந்தும் பழக்கம் உள்ளவராக இருந்தால் அதனை நிறுத்தி விட்டு மற்றும் காரமான உணவுப் பொருட்களை தவிர்க்கவும். சித்த மருத்துவத்தில் எண்ணற்ற மூலிகைகள் இந்நோயைத் தீர்க்க உதவும். மூலிகை மருந்தோடு உணவுமுறை மாறுபாடு மற்றும் யோகாப் பயிற்சி மிக அவசியம்.



---

என் பெயர் சித்தனாதன் வயது 43 அடிக்கடி நெஞ்சரிச்சல் (உநயசவ டிரசெ) உண்டாகின்றது. மேலும் வாயில் புளிப்பு சுவை மேல்வயிற்றில் வலி அதனால் ருடஉநச (வயிற்றில் புண்) வந்துவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. மருத்துவ வழிமுறை கூறுங்களேன்?

முதலில் காரமான உணவுகளையும், காபி, டீ பழக்கத்தையும் விடுவீங்கள். பின்னர் எளிதில் செரிக்கக் கூடிய எளிய உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து சாப்பிடவும். முக்கியமான கோதுமை மா போன்ற செரிமானத்திற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்கின்ற சவ்வு போன்ற உணவுகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

மது, புகைபழக்கம் இருந்தால் அதனை துப்புரவாக நீக்கி விட நெஞ்சரிச்சல் குறையும்.

துளசி இலையை தினமும் சாப்பிட்டு வர வயிற்றில் உள்ள புண்கள் ஆறும். நன்னாரி இலை பொடி பாலில் கலந்து சாப்பிட்டு வந்தாலும் மகச் சிறந்த முறையில் நெஞ்செரிச்சலை குணப்படுத்தும்.



நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபமுள்ள...

PERPETUA MONEY TRANSFER
WorldWide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK · Bank of Ceylon BOC · PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE · SEYLAN BANK PLC The bank with a heart · HNB · සම්පත් බැංකුව சம்பத் வங்கி SampathBank · NSB National Savings Bank · cashXpress easier - faster - safer

Send Money to any Bank In Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com



# ஊடகவியலாளனின் உயிர்குடித்து ஏப்பமிட்ட “முடிக்குரிய” எமனும் அவன் தூதுவர்களும்!!

தூதரகத்துக்குள் போன ஜமால் கஸோஜியை ஒரே இழுவையாகஅறையொன்றினுள்இழுத்துக்கொண்டுபோய் மேசையின் மீது போட்டிருக்கிறார்கள். அதன் பின்னர், குழற குழற அவரது விரல்களைஒவ்வொன்றாகவெட்டியிருக்கிறார்கள். சத்தம் கேட்டு கீழிருந்து பதற்றத்தில் கத்திய தூதரக அதிகாரி - “டேய், இதை வெளியே கொண்டுபோய் செய்யக் கூடாதா” - என்று குழற - “நீ ஊருக்கு வந்து உயிரோடிருக்கவேணுமொன்றால் பொத்திக்கொண்டு கிட” - என்று கூறிவிட்டு, காதுக்கு headset அணிந்து பாட்டுக் கேட்டுக்கொண்டே காரியத்தை தொடருமாறு கூறப்படுகிறது. விரல்கள் வெட்டப்பட்ட உடலின் மிகுதிக்கு போதையேற்றி, பின்னர் அதனைத் துண்டு துண்டாக வெட்டத்தொடங்கியுள்ளார்கள். அதன் பிறகு உடல் சிதிலங்களை அமிலத்தில் போட்டிருக்கிறார்கள். இவ்வளவும் நடந்து முடிந்த பின்னர், உடல் சிதைவுகளையும் தூக்கிக் கொண்டு நான்கைந்து வாகனங்கள் சகிதம் தூதரகத்தைவிட்டு வெளியேறியுள்ளார்கள்.

தூதரகத்துக்குள் போனவரை காணவில்லையே என்று சுமார் நான்கு மணி நேரத்துக்கு மேலாக வெளியே காத்துக் கொண்டிருந்த ஊடகவியலாளனின் துணைவியார் Hatice Cengiz சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைத்து முறையிட்டு, அது செய்தியாகி கடந்த ஒரு மாதமாக உலக நாடுகள் அனைத்தையும் உருட்டிப்பிரட்டிவிட்டு தற்போது கொஞ்சம் கொஞ்சமாக உண்மைகளை வெளிக்கொண்டுவரத்தொடங்கியுள்ளது. அதுவும் முழுமையான உண்மையல்ல. வெட்டப்பட்ட ஜமால் கஸோஜியின் உடல் துண்டுகள்போல சிதிலமான உண்மைதான்.

அப்படி என்னதான் இந்த மனிதர் செய்தார்? அவரை ஏன் இவ்வளவு கொடூரமாக கொன்றார்கள்?

ஜமால்கஸோஜி சவுதியை சேர்ந்த ஊடகவியலாளன். விபத்தில் இறந்த டயானாவுடன் அந்த நேரத்தில் பயணம் செய்த அவரது ஆண் நண்பர் என்று கூறப்பட்ட டோடி அல்பைட்டினுடைய மைத்துனன். இவரதுகுடும்பத்தினரும்சுற்றார்களும்பரம்பரைபரம்பரையாகபணம்படைத்தவர்கள். அத்துடன் படித்தவர்கள்.

ஜமால் கஸோஜி சவுதியிலிருந்து வெளியேறிதுருக்கியிலிருந்துகொண்டுஅமெரிக்காவின் The Washington Post பத்திரிகைக்கு பத்தியாளராக பணிபுரிந்து வந்தவர். சவுதி மன்னரின் அரசியலையும் அவரது ஆட்சிமுறை தொடர்பாகவும் கடுமையானவிமரசனங்களைமுன்வைத்தவர். சுருக்ககூடும் என்று, போனவருடம்தான் சவுதியிலிருந்து வெளியேறிஅமெரிக்காவுக்குபுலம்பெயர்ந்து அங்கு வாழ்ந்து வந்தவர். இந்த வருடஆரம்பத்தில், அமெரிக்காவில் “அரபு உலகத்துக்கான ஜனநாயக்கட்சி” - என்ற கட்சியை ஆரம்பித்திருந்தார். ஜமாலின் டுவிட்டரில் அவரை 20 லட்சம் பின் தொடர்கிறார்கள். அவ்வளவு பிரபலமான அரபுலக அரசியல் பண்டிதர்.



மாக கூறினால், புலம்பெயர்ந்த ஈழத்து ஊடகவியலாளன் ஒருவன் ஒரு காலத்தில் மகிந்த தரப்பினரை விமர்சித்துக்கொண்டது போல ஜமால் கஸோஜி செயற்பட்டுவந்திருக்கிறார். இவரது குரல் சர்வதேசளவில் அதிகம் செவிசாய்க்கப்பட்டபோது அது சவுதிக்கும் சவுதி மன்னருக்கும் மிகுந்த எரிச்சலையும் குடைச்சலையும் கொடுத்திருக்கிறது.

இவை எல்லாவற்றையும்விட, சவுதிக்கு ஜமால் என்பவர் உலக மகா பிரச்சினைக்குரியவராக இருந்ததற்கு வேறு காரணங்களும் இருந்தன. அதாவது, அமெரிக்காவின் இரட்டைக்கோபுரதாக்குதல்சம்பவத்துக்கு முன்னர் சவுதி அரசகுடும்பத்தினர் பின்லேடனுடன் வைத்திருந்த தொடர்புகளை அறிந்தவர் ஜமால். அத்துடன், இரண்டாரு சந்தர்ப்பங்களில் பின்லேடனுடன் சமரசப் பேச்சுக்களை மேற்கொள்வதற்கு சவுதி புலனாய்வுத்துறையினரால் பயன்படுத்தப்பட்டவர். பிற்காலகட்டங்களில், சவுதி அரச குடும்பத்தினர் கடைப்பிடிக்கத்தொடங்கிய இஸ்லாமிய அரசியல் கோட்பாடுகளினால் சினங்கொண்ட ஜமால், சவுதி அரசை தும்பு பறக்க விமர்சிக்கத்தொடங்கினார். இதனால் தனக்கு ஆபத்து நேரக்

ஆக, தங்களுக்கு அச்சுறுத்தலான - தமது இருப்புக்கு சவால்விடுக்கின்ற - ஜமாலின் குரலை நசுக்குவதற்கு -

அதிகாரம் மிகுந்தவர்கள் - தங்களை சீண்டிப்பார்க்கும் சின்னவர்களை அடக்கி ஒடுக்குவதற்கு பின்பற்றுகின்ற - சம்பிரதாய பூர்வமான அணுகுமுறையைத்தான் ஜமால் மீதும் ஏவி விடுவதற்கு சவுதி தீர்மானித்தது. ஜமாலை போட்டுத்தள்ளுவதற்கு தருணம் பார்த்து காத்திருந்தது.

அப்போதுதான், பழம் நழுவி பாலில் விழுந்ததைப்போலஜமாலே சவுதியை நாடி வந்து வலையில் விழுந்துகொண்டார். அதாவது, சவுதியில் ஏற்கனவே ஒரு-தடவை திருமணமாகி அந்த உறவிலிருந்து பிரிந்திருந்த ஜமால், துருக்கியில் ஒரு பெண்ணுடன் பழகி அவரை திருமணம் செய்வதற்கு தீர்மானித்திருந்தார். தனது திருமணத்தை உத்தியோகபூர்வமாக நடத்துவதற்கு, தான் செய்துகொண்ட முதல் திருமணத்திலிருந்து விவகாரத்து பெற்றுவிட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணத்தை சவுதி அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. இந்தத் தேவையை மையமாக வைத்துத்தான் ஜமாலின் கொடுமையான முடிவு சவுதி தரப்பினரால் பின்னப்பட்டு, அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

கடந்தசெப்ரெம்பர்மாதம்28ஆம்திகதி துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் அமைந்துள்ள சவுதி தூதரகத்துக்கு சென்று தனக்குத்தேவையான ஆவணத்தை கோரிய ஜமாலிடம், தற்போதைக்கு உடனடியாக அதைப்பெற்றுக்கொள்ளமுடியாது என்றும் இரண்டு வாரங்களில் வருமாறும் தூதரகத்திலிருந்த புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் சொல்லி அனுப்பியிருக்கிறார். அவர்கள் கூறியதைப்போலவே, இரண்டாவது தடவையாக சவுதி தூதரகத்துக்குப் போனபோது அது தனக்கு வைக்கப்பட்டிருக்கும்பொறிஎன்பதைஒரளவுக்குஜமால் உணர்ந்திருக்கிறார் என்பது தற்போது வெளிவரும்தகவல்களைவைத்து பார்க்கும் போது ஊகிக்கமுடிகிறது.

அதாவது, அன்றையதினம் - ஒக்டோபர் இரண்டாம் திகதி - பிற்பகல் ஒரு மணிக்கு ஜமால் தூதரகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் அங்கு போவதற்கு முன்னர், தான் திருமணம் செய்துகொள்ளவிருந்த துணைவியாரிடம் கைத்தொலைபேசியை கொடுத்துவிட்டு, நான்கு மணி நேரத்தில் தூதரகத்திலிருந்து தான் வெளியே வராவிட்டால் உடனடியாக துருக்கி அரச அதிபரின் ஆலோசகரை அழைத்து விஷயத்தை தெரியப்படுத்தும்படி கூறியுள்ளார். (துருக்கி அரச அதிபரின் ஆலோசகர்ஜமாலுக்குநெருங்கியவர்)கைத்தொலைபேசியைதனதுகைக்கடிகாரத்துடன்இணைப்பை ஏற்படுத்திக்கொண்டு (he synced the Apple Watch with his phone) தூதரகத்திற்குள் சென்றுள்ளார் ஜமால்.

(19ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# ஊடகவியலாளனின் உயிர்குடித்து ஏப்பமிட்ட "முடிக்குரிய" எமனும் அவன் தூதுவர்களும்!!

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், ஜமால் ஊகித்துக்கொண்டதை விட, மிகப்பெரிய மர்ம ஏற்பாடுகள் அவரைச் சுற்றி அன்றையதினம் பின்னப்பட்டிருந்தது என்பது தற்போதைய விசாரணைகளில் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரத்தொடங்கியிருக்கிறது.

அதாவது, சவுதி மன்னரின் மெய்ப்பாது காவலர் குழுவின் முக்கியஸ்தர் ஒருவரின் தலைமையில் ஜமாலை போட்டுத்தள்ளுவதற்கு ஒரு குழு, அன்றையதினம் காலை விசேட விமானத்தில் சவுதியிலிருந்து இஸ்தான்புல்லுக்கு வந்திருக்கிறது. மூன்று வெவ்வேறு குழுக்களாக தூதரகத்துக்கு அருகிலுள்ள ஆடம்பர ஹோட்டல்களில் அவர்கள்தங்கியிருக்கிறார்கள். மதியம்நெருங்கும் வேளையில், ஹோட்டல்களிலிருந்து கிளம்பி தூதரகத்துக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் ஹோட்டலின் உள்ளே போவது, வெளியே வருவது மற்றும் தூதரகத்துக்குள் வருகின்ற காட்சிகள் அனைத்தும் சி.சி.டி.வி காட்சிகளில் பதிவாகியிருக்கின்றன. அன்றைய தினம் பிற்பகலில் தூதரகத்தில் முக்கியமாக இராஜதந்திர சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாகக்கூறி, தூதரகத்தில் பணிபுரிபவர்கள் மதியத்துக்கு பிறகு வேலைக்கு வரத்தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறானதொரு நிலையில்தான், பிற்பகல் 1.02 ற்கு ஜமால் துதரகத்துக்குள் போயிருக்கிறார். ஓரிரு நிமிடங்களிலேயே உள்ளிருந்து அவர் தனது கைக்கடிகார வட்ஸ் - அப்புக்கு வந்த செய்தியை படித்திருக்கிறார். அதற்குப்பின்னர்தான், அவர் மீதான குரூரமான தாக்குதல் ஆரம்பித்திருக்கிறது.

நான்கு மணிநேரமாக வெளியில் வராத ஜமால் குறித்து தூதரக வாயிலுக்கு சென்று விசாரித்தபோது அவர் பின் வாசல் வழியாக போயிருக்கக்கூடும் என்று ஜமாலின் துணைவியாரிடம் தூதரக காவலாளிகள் கூறியிருக்கிறார்கள். ஆனால், அப்போது ஜமாலின் உடல் துண்டம் துண்டமாக அமிலத்தில் உக்கிப்போயிருந்திருக்கிறது.

ஜமாலின் துணைவி மேற்கொண்ட அழைப்புக்களைஅடுத்து செய்தித்தீ துருக்கியையும் பின்னர் சர்வதேச ஊடகங்களையும் பரந்துகொண்டது.

தமக்கு எதுவுமே தெரியாது என்று சவுதித்தரப்பினர்தொடர்ந்தும்வாயை இறுக்கி மூடிக்கொண்டிருந்தார்கள். ஆனால், துருக்கி புலனாய்வுப்பிரிவினர் தாங்கள் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரமும் தூதரக கட்டடத்தின் உள்ளே இரகசியமாக பொருத்தப்பட்டிருந்த ஒலிப்பதிவுக்கருவிகளின் வழியாக பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையிலும் "ஜமால் தூதரகத்தில் வைத்து கொடூரமாக கொலை செய்யப்பட்டிருப்பது உறுதி" என்று அறிவித்துவிட்டார்கள். ஆனால், ஆதாரத்தை யாருக்கும் வெளியிடப்போவதில்லை என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள்.

இந்நிலையில், தனது தூதரகத்துக்குள் ஜமால் கொல்லப்பட்டதை ஏற்றுக்கொள்வதைத்தவிர வேறு வழியே இல்லை என்ற நிலையில், சவுதி அரசு எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு சப்பைக் கட்டை கட்டி ஜமாலின் மரணம் தூதரகத்தில்தான் இடம்பெற்றது என்பதை தற்போது ஒப்புக்கொண்டிருக்கிறது.

சவுதி அரசு தரப்பு மேற்கொண்டுள்ள உள்ளக விசாரணைகளில் தற்போதுவரைக்கும் சேகரிக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் வெளிவந்திருக்கும் உண்மை இது தான் என்று அவர் தெரிவித்திருப்பதாவது-

2017 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியொன்றில் சவுதியிலிருந்து வெளியேறிய ஜமால் கஸாஜி அமெரிக்காவுக்கு சென்றது சவுதி அரசுக்குடும்பத்துக்கு பேரதிர்ச்சியை உண்டாக்கியது. ஜமால் கஸாஜி தனியே ஊடகவியாளர் மாத்திரமல்லர். அரச குடும்பத்தின் சார்பில் - சவுதி அரசின் சார்பில் - பல பணிகளை உத்தியோகபூர்வமாக மேற்கொண்ட நபர். ஆகவே, தம்மோடு இணைந்து பணிபுரிந்த ஒரு நபர் வேறு நாடொன்றின் கைகளில் விழுந்துவிடவோ அல்லது அவர்களால் பயன்படுத்தப்படுவதற்கோ சவுதி அரசு விரும்பவில்லை. உடனடியாகவே, அவரை நாட்டுக்கு திருப்பியழைக்கவேண்டும் என்று முடிவெடுத்தது. அதற்காக சமரச பேச்சுக்களை நடத்துவதற்கும் தயாராகவிருந்தது.

இந்த முடிவின் பிரகாரம், ஜாமல் கஸாஜி துருக்கியில் உள்ளார் என்பது தெரியவந்ததை அடுத்து, அங்கு சென்று அவருடன் பேசுவதற்கும் துருக்கியில் வீடொன்றைஎடுத்து அங்கு அவரை அழைத்து வந்து, நாட்டுக்கு திருப்பி அழைத்துப் போவது குறித்து பேசுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இந்தப்பணியை Deputy head of the General Intelligence Presidency Ahmed al-Asiri அவர்கள் ஒழுங்கு செய்தார். தனது இந்த ஏற்பாட்டின் பிரகாரம், ஜமாலுடன் பேச்சு நடத்துவதற்கு அவருடன் லண்டனில் முன்பு பணிபுரிந்த நபர் ஒருவர் சமரசம் பேசுவதற்கென்று அழைத்துவரப்பட்டார். அவர் உட்பட பதினைந்து பேர்கொண்ட குழு துருக்கிக்கு சென்று இந்தப்பணியை முன்னெடுப்பது என்று முடிவானது.

இந்த நடவடிக்கை என்னவோ ஜமாலுடன் சமரசம் பேசுவது என்ற மென்மையான காரியமாக விளிக்கப்பட்டாலும் - சவுதி அரசின் பொதுவான நடைமுறைகளின் படி அரசுடன் வேலை செய்துவிட்டு நாட்டைவிட்டு ஓடியவர்களை திரும்பவும் நாட்டுக்கு எப்படி கொண்டுவருவது என்று அவர்களுக்கென்று தனியானதொரு ஒழுங்கு முறை உள்ளது் அந்த ஒழுங்குமுறைகளின் பிரகாரம், குறிப்பிட்ட நபரை நாட்டுக்கு திரும்பவும் கொண்டுவருவதற்கு அவர்கள் என்னவும் செய்வார்கள் அதற்கான அதிகாரம் அவர்களுக்கு உள்ளது் ஆனால், அநேக நேரங்களில் அவர்கள் அந்த அதிகாரத்தை கூடுதலாக பயன்படுத்துவதில்லை அந்த ஒழுங்குமுறையின் பிரகாரமும்தான் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஆக, ஜமாலுடன் பேச்சு நடத்தி அவரை சவுதிக்கு அழைத்துப்போவதற்கு துருக்கி வந்த குழுவினர், ஏற்கனவே அவர் தூதரகத்துக்கு வருகிறார் என்று தெரிந்ததையடுத்து தூதரகத்திலேயே அந்தப்பேச்சுக் களை நடத்தலாம் என்று அங்கு காத்திருந்துள்ளார்கள்.

சம்பவம் இடம்பெற்ற அன்று ஜாமல் தூதரகத்துக்குள் போனார். அவரை வரவேற்று பிரத்தியேக அறைக்கு அழைத்துச் சென்ற தூதரக அதிகாரிகள், அங்கு அவருடன் பேச்சு நடத்துவதற்கு தயாராக நின்றுகொண்டிருந்த அதிகாரிகளிடம் அறிமுகம் செய்துவைத்தார்கள். ஜாமலுடன் சமரசம் பேசுவதற்கு வந்த அவரது முன்னாள் நண்பர், ஜமாலிடம் சவுதி அரசின் கோரிக்கையை எடுத்துக்கூறியுள்ளார். அவரை சவுதிக்கு வருமாறு கோரியுள்ளார். அதற்கு அடியோடு மறுத்த ஜமால் குரலை எழுப்பி கத்தியிருக்கிறார்.

"நான் வரமாட்டேன் என்று சொன்னால், என்னை கடத்திக்கொண்டா போகப்போகிறீர்கள்" - என்று சீறி சினந்துள்ளார்.

அவரது கோபத்துக்கு பதிலான கோபத்தைக் காண்பித்த அங்கிருந்த சவுதி அதிகாரி -

"ஆம்! கடத்தித்தான் போகப்போகிறோம். சும்மா இல்லை, உன்னைப்போதையேற்றி அதன் பின்னர் கடத்திக்கொண்டு போகப்போகிறோம்" - என்று சீறியிருக்கிறார்.

"தூதரகத்துக்கு வெளியே எனக்காக ஒருவர் காத்துக்கொண்டிருக்கிறார். நான் சரியாக ஒரு மணிநேரத்தில் இங்கிருந்து வெளியே போகாவிட்டால் அவர் துருக்கி அரசுக்கு தகவல் சொல்வார்" - என்று பதிலுக்கு ஜாமல் சவால் விடுப்பதுபோல மிரட்டியிருக்கிறார்.

இந்த வாக்குவாதம் ஆளுக்காள் மாறி மாறி நடைபெற, ஜமால் தொடர்ந்தும் உச்சஸ்தாயியில் வாக்குவாதம் செய்ய, சவுதியிலிருந்து அங்கு வந்திருந்த குழுவிலிருந்த ஒருவன் ஜமாலை பின்பக்கமாக சென்று கைகளால் கழுத்துக்கு பூட்டுப்போட்டு, இழுத்துக்கொண்டுபோய் ஒரு இடத்தில் இருத்துவதற்கு முயற்சி செய்திருக்கிறான். அந்த முயற்சியை எதிர்த்து ஜமால் திமிறியுள்ளார். அது முடியாமல் போக - மூச்சுத் திணறிஜமால் அந்த இடத்திலேயே உயிரிழந்து விட்டார்.



(20ஆம் பக்கம் பார்க்கி)

ஊடகவியலாளனின்

# உயிர்குடித்து ஏப்பமிட்ட “முடிக்குரிய” எமனும் அவன் தூதுவர்களும்!!

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜமால் கிட்டத்தட்ட அறுபது வயதான முதியவர். அவரினால் முரட்டுத்தனமான வன்முறைக்கு பதிலளிக்க முடியவில்லை.

ஆனால், இதனை அங்குநின்றுகொண்டிருந்தவர்கள் எவருமே எதிர்பார்க்கவில்லை. அங்கு நடந்த சம்பவத்தினால் அதிர்ச்சியடைந்துவிட்டனர். அடுத்த கட்ட நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்வதற்கு தயாராகினர்.

உயிரிழந்த ஜமாலின் உடலை படங்கு ஒன்றில் போட்டு சுற்றி, தூதரக வாகனத்தில் வெளியே எடுத்துச்சென்று துருக்கியை சேர்ந்த நபர் ஒருவரிடம் கொடுத்து, எங்காவது கண்காணாத இடத்தில் சென்று தொலைத்துவிடுமாறு கட்டளையிடப்பட்டது. உடலத்தை எடுத்துச்சென்ற நபர் இஸ்தான்புல்லில் இருந்து 55 கிலோமீற்றர் தெற்குப்புறமாக உள்ள காட்டுப்பகுதியில் கொண்டுபோய் அங்கு அழித்துவிட்டுள்ளார்.

இதற்குப்பிறகு, இந்தக்கொலையை மறைப்பதற்கு அடுத்தகட்ட திட்டம் தயாரானது. அதன்படி, ஜமாலுடன் சமரசம் பேசுவதற்கென்று சவுதியிலிருந்து வந்த 15 பேர் கொண்ட குழுவிலிருந்த - கிட்டத்தட்ட ஜமாலின் உருவத்தை ஒத்த நபர் ஒருவர் - ஜமாலின் உடலத்திலிருந்து உருவப்பட்ட ஆடைகளையும் அவரது கண்ணாடியையும் அணிந்துகொண்டு - தூதரகத்தின் கமராக்களில் தெரியும்படியாக - பின்வாசலினால் வெளியேறியுள்ளார்.

ஆக, தூதரகத்துக்குள் வந்த ஜமால் கொலை செய்யப்பட்டதற்கு எந்த தடயமும் இல்லை. அவர் தூதரகத்தை விட்டு வெளியேறியதற்கும் தற்போது ஆதாரத்தை உருவாக்கியாயிற்று. ஜமாலின் உடையணிந்துகொண்டு தூதரகத்தினால் வெளியேறிய நபர் துருக்கியின் Sultanahmet மாவட்டத்துக்கு வந்து அங்கு ஜமாலின் உடைகளை அழித்துவிட்டார்.

சவுதியிலிருந்து வந்த குழுவினர் அன்று இரவே, விமானமேறி சவுதிக்கு பறந்துவிட்டனர்.

தாங்கள் செய்த கொலையை மறைத்துவிட்டு, தாங்கள் போட்ட நாடகத்தின் பிரகாரம் நடைபெற்ற அனைத்து தகவல்களையும் தான் சவுதியிலுள்ள தலைமையகத்துக்கு இந்த குழுவினர் தெரிவித்துள்ளார்கள்.

ஆகவேதான், தூதரகத்துக்கு சென்ற ஜமால் கஸாஜி காணாமல்போயுள்ளார் என்ற செய்தி, தூதரகத்துக்கு வெளியே அவருக்காக காத்துக்கொண்டிருந்த அவரது துணைவியார் ஊடாக வெளிவந்து சவுதி அரசாங்கத்தை நோக்கி கேள்வியாக எழுப்பபட்ட போது, சவுதி அரசு, தூதரகத்துக்கு வந்த ஜமால் வெளியேறிவிட்டார் என்று தனக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அறிவித்துள்ளது.

ஆனால், துருக்கி புலனாய்வுத்துறையினர் வேறு தகவல்களை வெளியிட ஆரம்பித்தவுடன், துருக்கிக்குச்சென்ற பதினைந்து பேர் கொண்ட குழு மற்றும் இவர்களுக்கு ஒத்தாசையாக பணிபுரிந்த துருக்கியர்கள் மூவர் ஆகியோர் கைதாகி சவுதி அரசினால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அப்போதுதான் நடந்த சம்பவங்களும் அவற்றை மூடிமறைப்பதற்காக போடப்பட்ட நாடகங்களும் அம்பலத்துக்கு வந்துள்ளன.

அதன்பின்னர், தூதரகத்தில் இடம்பெற்ற கொலையை சவுதி அரசாங்கமும் ஒப்புக்கொண்டு அறிக்கை வெளியிட்டது.

- இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

ஆனால், துருக்கி பாதுகாப்புத்தரப்பினரை பொறுத்தவரைக்கும் ஜமால் தூதரகத்துக்குள் வைத்து விரல்கள் வெட்டப்பட்டு, உயிரோடு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னரே படுகொலை செய்யப்பட்டார் என்ற தமது முடிவில் உறுதியாகவுள்ளனர்.

அதாவது, சவுதி மன்னரின் “புலிகள் அணி” எனப்படுகின்ற - The Tiger Squad - சிறப்பு படையினரால் படுகொலை செய்யப்பட்ட ஜமால்கஸாஜியின் உடல்பாகங்கள் துருக்கிக்கான சவுதி தூதுவரின் வீட்டிலுள்ள கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக துருக்கி நாட்டு எதிர்க்கட்சித்தரப்புக்கள் ஊடகங்களுக்கு தகவல் வெளியிட்டிருக்கின்றன. அதுவேளை, வெட்டித்துண்டாடப்பட்ட ஜமாலின் உடல்பாகங்கள் பல இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் Middle East Eye ஊடகம் தெரிவித்துள்ளது.

தன்னை விமர்சிப்பவர்களையும் தனது அரசியல்எதிரிகளையும்இரகசியமாக “போட்டுத்தள்ளுவதற்கு” சவுதி மன்னர் Mohammed bin Salman (MbS) கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த குழுவின் பெயர் “புலிகளின் படையணி” சவுதியின் பல்வேறு பாதுகாப்பு படைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட தேர்ந்த வீரர்களைக்கொண்டு அமைக்கப்பட்ட 50 பேர் கொண்ட இந்த அணியினர் சவுதி மன்னருக்கு விசுவாசமான ஏவல் நாய்களாக கடந்த காலங்களில் பல இரகசிய படுகொலை செய்திருக்கின்றன.

ஜமால் கஸாஜி விவகாரம் பல மாதங்களாக இழுபட்டுக்கொண்டிருந்ததும் அவரது நடவடிக்கைகள் கைமீறிக்கொண்டு போனதும் அவரைப்போட்டுத்தள்ளுவதை தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு சவுதி அரசரைக்கொண் டுபோய்விட்டது. இந்த திட்டத்தின் பிரகாரம், ஜமாலை படுகொலை செய்வதற்கு Mohammed bin Salman மன்னரின் புலிகள் படையணியிலிருந்து மூவர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் உள்ளடங்கலாக பதினைந்து பேர்தான் சிறப்பு விமானத்தில் ஒக்டோபர் 2 ஆம் திகதி இஸ்தான்புல் வந்திருக்கிறார்கள்.

தூதரகத்திற்குள்வந்தஜமால்படுகொலை செய்யப்படுவதற்கு முதல், ரியாத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட skype அழைப்பில் மன்னரின் விசுவாசத்திற்குரிய Saud al-Qahtani சமரசப்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகவும் அந்தப்பேச்சின்போது ஜமாலை சவுதிக்கு வருமாறு கேட்டதாகவும் கூறப்படுகிறது. அதற்கு தொடர்ந்து மறுப்பு தெரிவித்தபோது skype அழைப்பில் பேசிக்கொண்டிருந்த மன்னரின் விசுவாசி Saud al-Qahtani கெட்ட வார்த்தைகளினால் ஜமாலை திட்டி அவரைச்சீற்றத்துக்குள்ளாக்கியுள்ளார் என்றும் கூறப்படுகிறது. பதிலுக்கு, ஜமாலும் வசைச்சொற்களை தெறிக்கவிட்ட போது, Saud al-Qahtani “இந்த நாயை வெட்டி தலையை இங்கே கொண்டுவாருங்கள்” - என்று கூறியிருக்கிறார்.

இதன்பின்னர்தான், ஜமாலை தூதரக மேசையில் தூக்கிப்போட்டு அவரது விரல்களை ஒவ்வொன்றாக வெட்டினார்கள் என்று கூறப்படுகிறது. அவ்வாறு அவரது விரல்கள் வெட்டப்படுவதையும் பின்னர் போதையேற்றப்பட்டு உடல் துண்டாடப்படுவதையும் Saud al-Qahtani ஸ்கைப்பில் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. வெட்டப்பட்ட ஜமாலின் விரல்களை சவுதிக்கு சென்ற “புலிகளின் படையணி” மன்னரிடம் நேரில் சென்று கொடுத்ததாக கூறப்படுகிறது.

ஆட்சிக்கு வந்த நாள் முதல் சவுதி மன்னர் Mohammed bin Salman (MbS) தொடர்ந்து கூறிவந்த ஒரு விடயம் “என்னை யாரும் விமர்சித்து எழுதினால், அவர்களின் கை விரல்களை வெட்டுவேன்” - என்தாகும். இதன்பிரகாரம், அவரது விசுவாசப்படையணியிலுள்ள முக்கிய நபர் Maher Abdulaziz Mutrib ஜமாலின் வெட்டப்பட்ட விரல்களை அவரிடம் கொண்டுபோய் சேர்த்ததாக தெரிவிக்கப்படுகிறது. Ataturk விமானநிலையத்தினால் அன்றைய தினம் Maher Abdulaziz Mutrib வெளியேறும்போது அவரது பொதிகள் எதுவும் சோதனை செய்யப்படவில்லை என்று இப்போது துருக்கி பாதுகாப்பு தரப்பினர் கண்டறிந்துள்ளனர். Maher Abdulaziz Mutrib அன்றைய தினம் 14 தடவைகள் ரியாத்திலுள்ள சவுதி மன்னரின் அலுவலகத்துக்கு அழைப்பெடுத்து பேசியுள்ளார் என்றும் இதில் ஏழுதடவைகள் மன்னருடன் பேசியிருக்கிறார் என்றும் துருக்கி தரப்பினர் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இஸ்தான்புல்லின் புறநகர் பகுதியில் உள்ள Yalova மாவட்டத்துக்கு அன்றைய தினம் அடிக்கடி ஒரு வாகனம் போய்வந்திருக்கிறது. அந்த வாகனம் ஜமாலை கொலைசெய்வதற்காக வந்திருந்த சவுதி கூலிப்படையணியிலுள்ள ஒருவருடையது என்றும் Yalova மாவட்டத்தில் அந்த நபருக்கு உல்லாச வீடொன்று சொந்தமாக உள்ளது என்றும் தெரியவந்திருக்கிறது. இந்த தகவல்களின் அடிப்படையில்வைத்து பார்க்கும்போது ஜமாலின் உடல் துண்டங்கள் இந்த மாவட்டத்தை அண்டிய Belgrad காட்டுப்பகுதியிலும் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதி துருக்கி புலனாய்வுப்பிரிவினர் அங்கு விசாரணைக்காக விரைந்திருக்கிறார்கள்.

ஜாமாலின் மரணம் குறித்து சவுதி அரசதரப்பினர் தாங்கள் அதிர்ச்சியடைந்திருப்பதாகவே தொடர்ந்தும் தகவல் வெளியிட்டவண்ணமுள்ளனர். அத்துடன், ஜமாலின் மகனை அழைத்து சவுதி மன்னர் கைலாகு கொடுத்து தனது ஆழ்ந்த அனுதாபங்களை பகிர்ந்திருக்கிறார்.

அவுஸ்திரேலியாவில் இருந்து உலகெங்கும் தமிழ்மணம் பரப்பும்
உங்கள் தமிழ் வானொலி
தாயகம்
தமிழ் ஒலிபரப்பு சேவை
வையகம் தழுவிய வான்வழித் தோழன்
எமது நிகழ்ச்சிகளை
● www.thayagam.net இணையத்தளத்தினூடாகவும்
● Mobile தொலைபேசியினூடாகவும்
● எமது பிரத்தியேக வானொலிகளினூடாகவும் கேட்கலாம்.
Wifi
மேலதிக விபரங்கள், விளம்பரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:
0432 710 238 | 02 8458 2393
www.thayagam.net /thayagam.tamil
Thayagam Tamil Broadcasting Service (TTBS)


It's grass pollen season.
If you sneeze or wheeze from October to December, you may be at risk of thunderstorm asthma.
Talk to your doctor and learn how to protect your health from thunderstorm asthma:
betterhealth.vic.gov.au/thunderstormasthma
Authorised and published by the Victorian Government, 1 Treasury Place, Melbourne
VICTORIA State Government


Christmas IS COMING
Transco CARGO
Christmas SHIPPING SCHEDULE

| MONTH | FINAL CUT-OFF DATE | EST ARRIVAL IN SL |
|---|---|---|
| September | 2018-09-01 | 2018-10-08 |
| September | 2018-09-08 | 2018-10-17* |
| September | 2018-09-15 | 2018-10-22 |
| September | 2018-09-22 | 2018-10-31* |
| September | 2018-09-29 | 2018-11-05* |
| October | 2018-10-06 | 2018-11-14 |
| October | 2018-10-13 | 2018-11-19* |
| October | 2018-10-20 | 2018-11-28 |
| October | 2018-10-27 | 2018-12-03* |
| November | 2018-11-10 | 2018-12-17* |
| November | 2018-11-17 | 2018-12-26 |
| November | 2018-11-24 | 2018-12-31* |
| December | 2018-12-01 | 2019-01-07 |
| December | 2018-12-08 | 2019-01-14* |
| December | 2018-12-15 | 2019-01-21 |
| January | 2019-01-12 | 2019-02-18 |
| January | 2019-01-19 | 2019-02-25* |
| January | 2019-01-26 | 2019-03-04 |

* Only at Campbellfield, Dandenong South & Hoppers Crossing Transco offices.
Send Something Special to your Loved Ones
FREE BOTTLE OF WINE
FOR TRANSACTIONS OVER $50 DURING OCT AND NOV AT OUR 3 OFFICES. ONE BOTTLE PER CUSTOMER. WHILE STOCKS LAST.
3RD BOX FREE*
*WHEN YOU BUY 2 BOXES. VALID FOR OUR MOST POPULAR TEA CHEST SIZE BOXES. FOR A LIMITED TIME ONLY.
follow us on
We love to deliver
45 Adrian Rd, Campbellfield (03) 9357 7228
206-208 Discovery Road, Dandenong South (03) 9703 2255 NEW
2/16-17 Hammer Court, Hoppers Crossing (03) 97905588
SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707
CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167
1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU

first national REAL ESTATE | Hall & Partners

## *Interested in knowing what your property is worth?*



**Property value and house prices change with the market. Call me direct to get a view of your current property value.**

**I will happily appraise your property, giving you you an up to date market analysis free of charge with no obligation to sell.**

# SP Shagi - 0413 076 585

## OUR SALES TEAM WITH THE MOST LOCAL EXPERIENCE

*"Let our experience work for you"*


Michael Hall
Managing Director


Adrian Hall
Director


Leigh Hall
Director


Tim Retallack
Licensed Estate Agent


Walter Kubiak
Licensed Estate Agent


Chen Liu
Licensed Estate Agent


Irene Athanasiadis
Property Consultant


Yasantha De Silva
Licensed Estate Agent


Jane Li
Property Consultant


Omid Mahramzadeh
Property Consultant


Michael Cervenjak
Licensed Estate Agent


Gavin Andrews
Licensed Estate Agent


Nuwan Ranasingha
Property Consultant


Violet Ross
Property Consultant


Genuine & Trusted
PREMIUM
Quality
GUARANTEED
SRI MURUGAN
SINCE 1969
ஸ்ரீ முருகன் டிரேடிங்
SRI MURUGAN TRADING
(Largest Indian Grocer Chain)
SALE
Point Cook, Carrum Downs, Narre Warren
INDIA | SINGAPORE | MALAYSIA | INDONESIA | AUSTRALIA | DUBAI | FRANCE